www.tamilarangam.net

அன்பளிப்பு 40 p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 12. 06. 1992



கனத்த நெஞ்சும் கண்ணீர்த் துளிகளும்
சுமந்த வாழ்வு தொலையட்டும்.
விடுதலை உணர்வும் ஆயுதச் சுமைகளும்
சுமக்கும் வாழ்வு மலரட்டும்.

## ஆறாயிரத்தெழுநூறு இராணுவத்தினர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்

தமிழீழ மண் மீது சிங்கள பௌத்த சிறிலங்கா பேரினவாத அரசு தொடுத்துள்ள யுத்தத்தில் இதுவரை 6700 இராணுவத்தினர் செயற்படும் தன்மையை இழந்துள்ளனர். இதில் 270 பேர் இராணுவ அதிகாரிகளாவார்கள் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் இராணுவத்தினர் கால் கைகளை இழந்தும் வேறு வழிகளிலும் சாதாரண வாழ்வை வாழமுடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் இவர்களைக் காணும் இராணுவத்தினர் மனநோய்களுக்கும் மனப்பீதிகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். இதனை நீக்குமுகமாக காயமடைந்தோரை பராமரிப்பதெற்கென தனியான பிரிவு ஒன்றை இராணுவம் அவசர அவசரமாக ஆரம்பித்துள்ளது. இலங்கை இராணுவப் பிரிகேடியர்களான எச். ஐ. பெர்ணான்டோ, துரைராஜா ஆகியோர் இதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் எச். ஐ. பெர்ணான்டோ, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும், துரைராஜா உடனடி மருத்துவம் செய்யும் பிரிவுக்கும் பொறுப்பாக கடமையாற்றவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

## 20,000 பேர் அகதிகளாக்கப்பட்டனர்

# தமிழீழத்தில் சிங்களப் படைகள் வெறியாட்டம்

## புலிகள் எதிர்த்தாக்குதலால் ஓடவிரட்டினர்

யாழ். குடாநாடு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை திடீரென பிரகடனம் செய்த சிங்கள இராணுவம் கண்மூடித்தனமான வகையில் வானில் இருந்து குண்டுகளை வீசியது. கடலில் இருந்து பீரங்கியால் தொடர்ந்து செல்லடித் தாக்குதலை நடாத்தியது. ஆயினும் இராணுவத்தின் தரை நகர்வு விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலினால் தடுத்து நிறுத்தப்பட்டது. தெல்லிப்பளை, சுன்னாகம், தொண்டமானாற்றின், அச்சுவேலிக்கு அருகாமையில் உள்ள பகுதிகள் ஆகியவற்றில் வாழ்ந்த சுமார் 20,000 தமிழ் மக்கள் பாதுகாப்புக் கருதி அகதிகளாக வேறுஇடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளை தமது விருப்பத்திற்கு ஏற்றபடி தீர்வு காண்பதற்கு வற்புறுத்தும் நோக்கில் சிறிலங்கா அரசு அப்பாவித் தமிழ் மக்கள் மேல் காட்டுமிராண்டித்தனமான இத் தாக்குதலை நடாத்தத் தொடங்கியுள்ளது. சிறிலங்கா ஜனாதிபதி வவுனியாவில் வைத்து "நான் கைப்பற்றுவதற்கு வரவில்லை சேர்ந்து வாழவே வந்தேன்" என வசனம் பேசி சில நிமிடநேரத்திற்கிடை குடாநாட்டின் மீதான வெறித்தாக்குதலை அவரின் சிங்களப்படைகள் ஆரம்பித்தது. ஆயினும் சிங்கள படைகளின் நரித்தந்திரத்தை முன்பே உணர்ந்திருந்த விடுதலைப்புலிகள் பொதுமக்களுக்கு அதிக சேதம் வராதவாறு மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தினர்.



சிறிலங்கா அரசின் சமாதான பொய் வேடம் இத் தாக்குதல்களால் கிழித்தெறிப்பட்டுள்ளது. இதற்கிடை தமிழ் முஸ்லீம் மக்களிடை இனப்பகைமையைத் தூண்டும் நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு தென்தமிழ் ஈழத்தில் முடுக்கி விட்டுள்ளது. முஸ்லீம் ஊர்காவற்படையினர் என்ற பெயரில் சிறிலங்கா அரசின் கூலிப்படை தென்தமிழீழ மக்களை வெட்டியும், உயிருடன் எரித்தல், உயிருடன் புதைத்தல் போன்ற காட்டுமிராண்டிக் கொலைகளைச் செய்தும், கொள்ளை அடித்தும், கற்பழித்தும், கடத்தியும் வெறியாட்டம் ஆடுகின்றது. இதனால் தென் தமிழ் ஈழத்தில் மக்கள் சாதாரணமாக நடமாடமுடியாமல் கடும் அச்சத்துடன் வாழ்கின்றனர். ஜிகாத் இயக்கத்திற்கும் முஸ்லீம் காடையருக்கும் கூட சிறிலங்கா இராணுவம் ஆயுதங்களை வழங்குவதாக தெரியவருகிறது.

முஸ்லீம் - தமிழ் பிரிவினையை வளர்ப்பதன் மூலம், வடக்கையும் கிழக்கையும் இணைப்பதை தடுக்கலாம் என சிறிலங்கா அரசு கருதுகிறது. ஆயினும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தென்தமிழீழக் கிராமங்களில் முஸ்லீம்கள் அமைதியாக வாழ்வதற்குரிய வழி வகைகளை விடுதலைப்புலிகள் செய்து வருகின்றனர். இதனால் முஸ்லீம்கள் தலைவர் உட்பட மக்கள் வரை வடக்கு கிழக்கு இணைப்பை ஆதரிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தென்தமிழீழத்தில் பரவலாக விடுதலைப்புலிகள் சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளின் மேல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தென்தமிழீழம் தமது கட்டுப்பாட்டில் என இராணுவம் கூறி வந்தமை பொய்யாகி உள்ளாது. இலங்கை இராணுவத்தினர் தென்தமிழீழத்

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

## தமிழரின் பாரம்பரிய தாயகத்தை ஏற்க மறுத்த தெரிவுக்குழு

தமிழர்களின் பாரம்பரிய தாயகம் வடக்கு-கிழக்கு இணைப்பினால் உறுதியாகும் என சிங்கள பேரினவாதக் கட்சிகள் அஞ்சுகின்றன. இதனால் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுமென ஜனாதிபதி பிரேமதாசா பிதற்றி வந்த பாராளமன்றத் தெரிவுக் குழு எந்த முடிவும் எடுக்காது உடைகிறது. இப்பாராளமன்றத் தெரிவுக் குழுவை சாட்டாகக் கூறி சிங்கள அரசின் ஏவல் படைகளாக செயற்பட்டு வந்த தமிழ்த் துரோகக்குழுக்கள் "வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லையேல் தமிழீழம் தான் முடிந்த முடிவாகும்" என மாரீசக் குரல் கொடுத்துள்ளன. உண்மையில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் இத்துரோக சக்திகள் தமது உண்மை வேடத்தை மறைப்பதற்கு தமிழர் மேல் தமக்கும் அக்கறை இருப்பதுபோல் போலி வேடம் போடுகின்றன.

இது ஒரு புறமிருக்க மீண்டும் "சர்வகட்சி மகாநாடு" என்னும் சத்தம் பிரேமதாசாவின் வாயிலிருந்து வெளிவந்துள்ளது. பாராளமன்றத் தெரிவுக் குழுவைக் காட்டி சர்வதேச சமூகத்தின் அமைதிக்கான முயற்சிகளை குழப்பிய பிரேமதாசா மீளவும் சர்வகட்சி மகாநாடு என மீண்டும் ஒரு பேய்க்காட்டலை தொடங்கப் போகிறார் போல் தெரிகிறது.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## தமிழீழமும் உலகும்

செக்கோஸிலவிக்கியா என்ற நாடு மக்கள் விருப்புக் கேற்ப சுயநிர்ணய உரிமையுள்ள இரு தொகுதியாக முயல்கிறது. செக்கோவும் சிலவிக்கியாவும் இரு தேசிய இனங்கள். 1918 முதல் ஒன்றாக இருந்தன. இன்று மீளவும் சிலவிக்கியா தேசிய இனம் வாக்கெடுப்பு மூலம் தனது பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டத் தீர்மானித்துள்ளது.

யூகோஸிலவிக்கியாவில் காணப்படும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு "ஐரோப்பிய பொருளாதார" சமூகம் ஆதரவு காட்டுகிறது. அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை மூலம் யூகோஸிலவிக்கியா அரசுக்கு எதிராக கடும் தடைகளை அமுலாக்கியுள்ளது. ரஸ்யா, "சோவியத் ரஸ்யா" என்ற ஒன்றியமாக இருந்து இன்று சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து பல இறைமையுள்ள நாடுகளின் தொகுதியாகியுள்ளது.

இவ்வாறாக 1992ல், சர்வதேச சமூகம் பல்வேறு நாடுகளில் காணப்பட்ட -காணப்படும் சுயநிர்ணய உரிமை கோரிக்கையை நியாயமானவையாக கண்டு தீர்வும் காட்டியுள்ளது.

இந்நிலையில் தனியான இறைமையுள்ள நாடாக விளங்கி பிரிட்டிசாரால் சிங்கள சிறிலங்காவுடன் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்ட தமிழீழத்தின் நிலையை எடுத்து நோக்குவோம்.

1972ல் சிங்கள சிறிலங்காவால் தன்னிச்சையாக இயற்றப்பட்ட குடியரசு அரசியலமைப்பை நிராகரித்த தமிழீழ மக்கள் மேல் படைபலம் கொண்டு தனது அரசியலமைப்பை சிறிலங்கா திணித்தது. 1977ல் வாக்குரிமையை தேர்தலில் பிரயோகித்து தமிழீழ மக்கள், தமிழீழம் தான் முடிந்த முடிவு என உலகிற்கு தெளிவாக காட்டினர்.

நிராயுதபாணிகளான தமிழீழ மக்களை ஆயுதமுனையில் அடக்கியாள முனைந்தது சிறிலங்கா அரசு. 1972ல் முதல் நாடற்ற தேசிய இனமாக மாற்றப்பட்ட தமிழீழ மக்கள் தம் மண் மேல் மேற்கொள்ளப்பட்ட ஆயுத ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடத் தொடங்கினர். 1978ல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம், முழு அளவிலான ஆயுத அடக்குமுறையை சிறிலங்கா அரசு ஆரம்பித்தது. இதனை ஆயுத ரீதியாகவே எதிர்க்க வேண்டிய நிலைக்கு தமிழீழ மக்கள் தள்ளப்பட்டனர். ஆயினும் படைபல வல்லமை படைத்த அரசை சத்தியத்தின் துணையோடு தம்மால் திரட்டக் கூடிய மக்கள் படையை கொண்டு தமிழீழ மக்கள் எதிர்த்தனர். சத்தியம் வென்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எத்தகைய அடக்குமுறைகளுக்கும் அடிபணியாத மக்கள் இயக்கமாக தமிழீழ மண் மீட்பு போரை நடாத்துவதை உலகு கண்டு கொண்டுள்ளது.

ஆயினும் காலத்துக்குக் காலம் வான் வழிததாக்குதல்கள், இராணுவ முற்றுகைகள், பொருளாதாரத் தடைகள் எனப்பலவகையான இராணுவ அடக்கு முறைகள் மூலம் தமிழீழ மக்களை சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாக்கிறது சிறிலங்கா அரசு.

நேற்று, இன்று, நாளை இதே கதையைத்தான் சிறிலங்கா அரசு செய்தது. செய்கிறது. செய்யப்போகிறது. இந்நிலையில் சர்வதேச சமூகம் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான இத்தேசிய விடுதலைப் போராட்டத்தில் காட்டும் மௌனமானது நாளைய வரலாற்றில் இன்றைய உலகின் கறைபடிந்த கதையென விமர்சனம் செய்யப்படப்போகின்றது.

ரஸ்யருக்கு, ஐரோப்பியருக்கு ஒரு நீதி. தமிழருக்கு இன்னொரு நீதியா என்ற கேள்வியாக மாறப்போகிறது.

எனவே இந்நேரத்தில் சர்வதேச சமூகத்தவர்களுக்கு அவர்களது தவறைச் சுட்டிக்காட்டி, தமிழீழ தேசிய மக்களின் சுயநிர்ணயக் குரலை அவர்கள் ஏற்கச் செய்ய வேண்டிய கடமை வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள ஒவ்வொரு தமிழனதும் வரலாற்றுக் கடமையாகும்.

# பொது மக்கள் படுகொலை

## F7 சுப்பர் சொனிக் விமானத்திலிருந்து 250 இறாத்தல் குண்டுகள் ஆயினும் மும்முனைகளிலும் புலிகளிடம் இராணுவம் படு தோல்வி

தமிழீழ இனப்படுகொலையில் அரசு மீண்டும் வேகமாக இறங்கியுள்ளது. பலாலியிலிருந்து தெல்லிப்பளை நோக்கிய திசைகளிலும், அச்சுவேலி தொண்டமானாறு பகுதிகளிலும், அலம்பில் முல்லைத்தீவு பிரதேசங்களிலும் சிறிலங்காப் படைகள் கண்மூடித்தனமான குண்டு வீச்சை நடாத்தியுள்ளனர்.

F7 சுப்பர் ஜொனிக் விமானத்திலிருந்து 250 இறாத்தல் குண்டுகள் வீசப்பட்டன. T15 சீன டாங்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பல கட்டடங்கள் பலத்த சேதமடைந்ததுடன் பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

### வல்வெட்டித்துறையில் 12 பேர் பலி

வல்வெட்டித்துறை மீது நடாத்திய வெறித்தனமான விமானத் தாக்குதலில் 12 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் ஆவர். இதனால் ஆத்திரமும் கவலையும் அடைந்த கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், கல்லூரியை மூடிவித்ததுடன் கறுப்புக் கொடிகளையும் பறக்கவிட்டனர்.

### துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஐவர் பலி

இதற்கிடை துர்க்கையம்மன் ஆலயத்தை நோக்கி வீசப்பட்ட நான்கு குண்டுகளில் இரண்டு ஆலய வீதிகளிலும் ஒன்று கோவிலின் மணிக் கோபுரத்தின் மேல் பட்டு, மணிக்கோபுரத்தின் கீழ் நின்ற ஐவர் பலியாகியுள்ளனர். அத்துடன் அனாதை இல்லமும் கடும் சேதமடைந்துள்ளது. சேத விபரங்கள் இன்னும் பூரணமாகத் தெரியவில்லை.

இச்சம்பவத்தின் போது முதலில் பொது மக்களை கோவிலில் தஞ்சமடையும்படி இராணுவம் விமானத்திலிருந்து குண்டுகளை வீசியதாகவும் பின்னரே நரித்தந்திரமான முறையில் கோவிலைத் தாக்கியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### அதிகாரி ஒப்புக் கொண்டார்

கொழும்பு கொள்ளுப்பிட்டி கிராமோதய நிலையத்தில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய இலங்கை இராணுவ கேர்ணல் சரத்முன சிங்க "இராணுவ முக்கூட்டுப் படையினர் தங்களிடமுள்ள சகல ஆயுதங்களையும் பாவிக்கின்றனர்" எனப் பகிரங்கமாகவே இனப் படுகொலையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

### விடுதலைப்புலிகள் மும்முனைகளிலும் தடுத்தனர்.

ஆயினும் தமிழீழ விடுலைப் புலிகள் மண்ணையும் மக்களையும் காக்கும் தமது புனித யுத்தத்தை மிகத் துணிச்சலுடன் தொடங்கியுள்ளனர். சத்தியத்தின் முன்னும் தமிழீழ விடுதலைப் போராளிகளின் தியாக வலிமையின் முன்னும் எதிர் நிற்க இயலாத இராணுவம் தாம் யுத்தம் தொடங்கிய மும்முனைகளிலும் புலிகளிடம் படுதோல்வியைத் தழுவிக் கொண்டனர். பலாலியிலிருந்து அச்சுவேலியூடாக தொண்டமானாறு நோக்கி இராணுவம் தரைநகர்வு செய்ய முயன்றபொழுது தொண்டமானாறு பாலத்தை தகர்த்தெறிந்த புலிகள் வீராவேசத்துடன் எதிர்த் தாக்குதல் நடத்தினர். திறந்த வெளியில் நிலைதடுமாறிய இராணுவம் பின்னோக்கி ஓடியது.

### தெல்லிப்பளை தோல்வியை இராணுவம் ஏற்றது

"தெல்லிப்பளை பாதுகாப்புப்படையினருக்கு பரிச்சயமில்லாத புதிய பிரதேசமானதால் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபடமுடியாதிருக்கிறது" என கேர்ணல் முனசிங்கா கொழும்பில் விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கதை பேசியுள்ளார்.

### முல்லைத்தீவில் தரைநகர்வு முறியடிப்பு

முல்லைத்தீவை நோக்கி அலம்பிலூடாக தரைநகர்வு செய்ய முயன்ற இராணுவத்தினரை தமிழீழ விடுதலப்புலிகளின் ஆக்ரோஸத் தாக்குதல் புறங்கண்டு ஓடவைத்தது. இத்தாக்குதலின் போது T85 ரக பீரங்கிப்படையை இராணுவம் பயன்படுத்திய போதிலும் அவர்களது முயற்சி படுதோல்வியடைந்தது.

### 150 க்கு மேற்பட்ட இராணுவத்தின்ர் பலி

இம்முனைத்தாக்குதல்களின் போது தெல்லிப்பளை-தொண்டமானாறில் நூறு இராணுவத்தினரும், முல்லைத்தீவில் 60 இராணுவத்தினரும் பலியாகியுள்ளதாக ஊர்ஜிதம் செய்யப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை இருநூறுக்கும் அதிகமான இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனாலேயே யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தி தாக்குதல்களை தொடரும் தந்திரோபாயத்தை இராணுவம் கைக்கொள்கிறது. ஆயினும் புலிகள் மரபுவழி இராணுவ உத்திகளையும் பதுங்கித் தாக்கும் கெரில்லாப்போர் முறையையும் ஏக காலத்தில் கைக்கொள்வதினால் இலங்கை இராணுவம் கழிக்காற்றுள் அகப்பட்ட துரும்பு போல் சுழல்கிறது.

### பொது மக்கள்

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி விடுத்துள்ள கண்டன அறிக்கை ஒன்றில் சிறிலங்கா அரசின் இத்திடீர் இன அழிப்பு நடவடிக்கையினால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தாக்கப்பட்டும் உயிரிழந்தும் உள்ளனர் எனவும் இவ்வின அழிப்புக்கு சிறிலங்கா அரசும் சிறிலங்கா இராணுவமும் பொறுப்பு ஏற்க வேண்டுமெனக் கூறியுள்ளது.

### சிறிலங்கா பிரதமரின் திட்டம் இது தானா ?

சிறிலங்கா பிரதமர் வடக்கு கிழக்கு யுத்தத்தை இரு மாதத்துள் முடிக்கப் போவதாக சமீபத்தில் கூறினார். இந்த அப்பட்டமான இன அழிப்புதான் அவர் கைக்கொள்ளப்போகிற தீர்வுக்கான வழியா என்ற ஐயப்பாடு தோன்றியுள்ளது. சிறிலங்கா பிரதமர் இராணுவத்தீர்வு மூலம் தீர்வு காணமுற்படுவாரானால் அது சிறிலங்காவின் தற்கொலைக்கு ஒப்பானது ஆகும் என அரசியல் விமர்சகர் ஒருவர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### திருமலையில் இருபது இராணுவத்தினர் பலி

திருகோணமலையில் முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவ ரோந்து அணியை விடுதலைப்புலிகளின் அதிரடிப்படையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான போராளிகள் வழிமறித்துத் தாக்கினர். இத்தாக்குதலில் இருபது இராணுவத்தினர் பலியானதாகவும் சுமார் முக்கால் மணிநேரம் நேரடி யுத்தம் நடைபெற்றது எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் நவீன ஆயுதங்களை பயன்படுத்தியது இராணுவத்தினருக்கு மேலும் அச்சமூட்டியுள்ளது என திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளின் சுற்றி வளைப்புக்குள் அகப்பட்ட இராணுவத்தினரை உலங்கு வானூர்திகள் மூலம் தாக்குதல் நடத்தி இராணுவத்தினர் மீட்டுச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

## புலிகள் தடை எதிரொலி

விடுதலைப்புலிகளை இந்தியா தடை செய்ததின் விளைவாக சர்வதேச நாடுகள், ஈழப் பிரச்சனையில் சுமூகத் தீர்வுக்கு வழி காணும் அறிகுறிகள் பிரகாசமாகியுள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்து இந்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அடுத்து மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை "இந்து" நாளேடு வெளியிட்டு இருக்கின்றது.

சட்ட விரோத நடவடிக்கைகள் காரணமாக ஒரு அமைப்பு தடை செய்யப்பட்டால், அப்படி தடை செய்தது சரிதானா என்பதை முடிவு செய்ய இந்தப் பிரச்சனையை விசாரணைக்குழு ஒன்று விசாரிக்க வேண்டும். தடை செய்யப்பட்டதாக வர்த்தகமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட 30 நாட்களுக்குள் விசாரணைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். இந்த அமைப்பை தடை செய்வதற்கு போதுமான காரணங்கள் இருக்கிறதா? என்பதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியது இந்த விசாரணைக் குழுவின் வேலை. விடுதலைப்புலிகள் பிரச்சனையில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் சாத்தியமா என்பது கேள்விக்குறிதான். காரணம் புலிகள் இயக்கம் தலை மறைவு இயக்கம் என்பதோடு, இந்தியாவிற்கு வெளியே செயற்படும் இயக்கம் ஆகும். ஆனாலும் விசாரணைக் குழுவிற்கு அனுப்பி முடிவு செய்ய வேண்டும் என்பது தான் சட்ட ரீதியான நிலை.

மத்திய அரசு, பிரச்சனையை விசாரணைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியவுடன் தடை செய்யப்பட்ட அமைப்பிடமிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.துரைராஜாவும் ஒஸ்லோ பல்கலைக்கழக துணைவேந்தர்பேராசிரியர் ஓலோ டி மெ ஜோசுவும் நோர்வேயில் சந்திப்பு

# யாழ். பல்கலைக்கழகத்தில் கடற்றொழில் கல்விப்பீடம்

## ■ வட நோர்வே பல்கலைக்கழகம் உதவும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடற்றுறை கடல்வள கல்விப் பீடம் ஒன்றை அமைப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு நோர்வே நாட்டு ட்ரொம்சோ பல்கலைக்கழகம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருக்கிறது.
ஈழத்தமிழ்ப் பிராந்தியத்தை சூழவுள்ள கடல்வளத்தைத் தமிழ் மக்கள் தக்கபடி பயன்படுத்துவதற்கு கடற்றுறை -கடல்வளகல்வியை மேம்படுத்த வேண்டிய அவசியம் குறித்து
நோர்வே சென்றிருந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா ட்ரொம்சோ பல்கலைக்கழக துணைவேந்தர் ஒலோடி மெஜோசுக்கு எடுத்துரைத்தார்.
அதனைத் தொடர்ந்து தமிழ்ப்பகுதிப் பல்கலைக்கழகத்தில் கடற்றொழில்துறைக் கல்விக்கு உதவ ட்ரொம்சோ பல்கலைக்கழகம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.
இத்துறையில் ஒத்துழைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் முதலில் மதிப்பிடப்படும். பின்னர் வெளிநாட்டு அமைச்சு, நோறாட் என்பவற்றுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று துணை வேந்தர் ஒலோடி மெஜோசு தெரிவித்திருக்கிறார்.

கடற்றொழில்-கடல் வளம் சம்பந்தமாக ஆசிரியர் மாணவர்களைப் பரிமாறிக் கொள்ளுதல் உட்பட ஒத்துழைப்புத் திட்டம் ஒன்றை வகுக்க முடியும் என்றும் துணைவேந்தர் மெஜோசு தெரிவித்தார். வட நோர்வேயில் உள்ள ட்ரொம்கோ பல்கலைக்கழகம் ஆபிரிக்க நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடனும் ஒத்துழைப்பு -இணைப்பு -திட்டங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் மீது சுட்ட சம்பவம்

சேத்தாங்குளத்தில் இடம் பெற்ற கடற்படையினரின் துப்பாக்கி பியோகத்தை அடுத்து உணவு லொறிகள் யாழ் வந்ததும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் கீரிமலைக்கு சென்றனர். இச்சம்பவம் தொடர்பாக இராணுவத்தினருக்கு முறையிட்டு கூறப்பட்டபோது தமக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென இராணுவ தரப்பில் தெரிவிக்கப் பட்டதாம்.
கீரிமலை சேத்தாங்குளத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து காங்கேசன்துறைக்குச் சென்று உணவுப் பொருட்களை ஏற்றிவர லொறிச் சாரதிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். இதேவேளை மீண்டும் லொறிகளை காங்கேசன்துறைக்கு பாதுகாப்பாக கூட்டிச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


# கல்குடாவில் சிங்கள குடியேற்றம்

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாப் பகுதியில் புதிதாக 122 சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கல்குடாவில் அண்மையில் புதிதாக இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருப்பதை தொடர்ந்து அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறிய தமிழர்களின் இடங்களிலேயே இவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கேலித்துணுக்கால் ஏற்பட்ட சமூக மாற்றம்

"எதிர்பாராத வகையில் பனந்தொழில் வல்லுனர் ஒருவர் பற்றிய கேலித்துணுக்கொன்றை ஆதாரம் என்ற பத்திரிகையில் கண்டேன். அதில் பெரும் பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் கூனிக் குறுகி நிற்க, பனந்தொழில் வல்லுனர் ஒருவர் "கொண்டா"வில் வந்து கூசாது ஆயிரம் ரூபாவுக்கு ஒரு லீற்றர் பெற்றோல் வாங்குவது எனது கவனத்தை கவர்ந்தது. பனைசார் சுய தொழில் மூலம் நிறைய வருமானம் பெற முடியும் என்பதை உணர்ந்தேன்.

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் மூன்றுமாத சுய தொழில் பயிற்சி நெறியைப் பயின்றேன். நான் ஒரு பனந்தொழில் வல்லுனர் ஆனதைப் பற்றி என்னைச் சார்ந்தவர்களிடம் ஒரு தாழ்வான மனப்பான்மையைக் கண்டேன். அவர்கள் கூறியபடி கடற்றொழிலில் எனது நாட்டம் செல்லவில்லை. எனது தொழில் இன்மை சமுதாயத்தில் எனக்குத்தந்த வறுமை வாழ்க்கையையும் அதனால் ஏற்பட்ட கடன் சுமையையும் விட பனைப் பயிற்சி நிலையத்தின் சுயதொழில் பயிற்சி எனக்கு அதிக கௌரவத்தை தருவதாக கருதினேன்". இவ்வாறு தம்பாலையைச் சேர்ந்த திரு. செ. சிறீதரன் காப்பரண் சஞ்சிகைக்கு பேட்டி அளித்துள்ளார். அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது, "அரபு நாடுகளிலும் வெளிநாடுகளிலும் இங்கு தொழிற்கௌரவத்தைப் பேணும் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அதிக சம்பளத்திற்காக எந்த தொழிலையும் செய்கின்றார்கள். அடிமை போல் வாழ்கின்றார்கள். நான் ஒரு காலத்தில் மின் ஓட்டுநராக போக விரும்பியதுண்டு. ஆயினும் குறிப்பாக இன்று பனந்தொழில் வல்லுனராகி அதிக வருமானம் பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதில் நான் பெருமை அடைகிறேன்."




நன்றி: 'ஆதாரம்' — தமிழீழ ஆய்வு நிறுவன வெளியீடு

# நாடு திரும்பும் அகதிகள் வீடு செல்லக் கட்டுப்பாடு

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள் மீண்டும் வடக்கு கிழக்கிலுள்ள தமது சொந்த கிராமங்களுக்குத் திரும்புவதற்கு அரசால் நிபந்தனை விதிக்கப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.
இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் வடக்கு கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மட்டுமே குடியேற வேண்டுமென இலங்கை அரச அதிகாரிகளால் வற்புறுத்தப்படுகின்றனராம்.
இந்த நிபந்தனையை மீறித் தமது சொந்த கிராமங்களுக்கு அவர்கள் திரும்பினால் நிவாரணமோ உதவிகளோ கிடையாது என அவர்களுக்கு கூறப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.
இதனால் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய பலர் மீண்டும் தமது கிராமங்களுக்கோ வீடுகளுக்கோ திரும்ப முடியாத நிலையில் அகதிமுகாம்களிலேயே குறைந்த வசதிகளுடன் தங்கியிருக்கவேண்டிய நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
அரசகட்டுப்பாடில்லாத பகுதிகளை மீட்க இராணுவம் நடவடிக்கை எடுக்கும்போது நாடு திரும்பியோர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே இந்த நடைமுறையை அரசு பின்பற்றுவதாக கொழும்பில் நடந்த செய்தியாளர் மகாநாட்டில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

# 36 வாழைச்சேனை ஊழியர்கள் பலி

வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடமை புரிந்த 36 ஊழியர்கள் 1983-ம் ஆண்டிலிருந்து பலியாகியுள்ளார்கள். இவர்களுக்கு உதவித்தொகையோ, நிவாரணங்களோ இதுவரை வழங்கப்படவில்லை என அம்பாறைத் தமிழர் மகாசங்கம் வாழைச்சேனை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தலைவருக்குத் தெரிவித்துள்ளது. மேலும், அவர்கள் தெரிவித்திருப்பதாவது வன்செயல் சம்பவங்களால் இறந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் ஓய்வுகாலம் வரை வழங்கும் சம்பளம், சேதங்களுக்கான நஸ்டஈடு, கடன் என்பன வழங்கலாம் என பொதுநிர்வாக சுற்றறிக்கை வழிகோலியுள்ள போதிலும், காகித ஆலை ஊழியர்களுக்கு இதுவரை எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் தொழுநோய்.

யாழ் சுகாதார பிராந்தியத்தில் இவ்வருடத்தில் கடந்த மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் ஆய்வுகளின்போது 31 புதிய தொழுநோயாளர்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுரீதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுகளின்போது, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே அதிகளவு தொகையான 11 பேருக்கு தொழுநோய் தொற்றியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
இவர்களுக்கு தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலையிலுள்ள தொழுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை அளிக்க மருந்துவகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் யாழ். பிராந்திய தொழுநோய்த்தடுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

### 20, 000 பேர்.....

தில் உள்ள விடுதலைப்புலிகளுக்கும் வடக்கிற்கும் இடைதொடர்பை துண்டிக்கவேண்டும் என்ற நோக்கிலேயே முல்லைத்தீவு தாக்குதலை உக்கிரப்படுத்தி வருகின்றனர். ஆயினும் முல்லைத்தீவில் பெரும் உயிர் இழப்புக்களையும் பொருள் சேதத்தையுமே இராணுவம் அடைந்து வருகிறது.

### ஆறாயிரத்....

### கால், கை செயற்கை தொழிற்சாலை

இதற்கிடை இராகமவில் கை கால் செயற்கை உறுப்புக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை இராணுவம் ஆரம்பித்துள்ளது. அத்துடன் காயமடைந்த இராணுவத்தினரால் கொழும்பு அரசாங்க ஆஸ்பத்திரிகள் எல்லாம் நிரம்பி வழிவதால் தனியாக "ரணவிருசேவன" நிலையம் என்ற பெயரில் காயமடைந்த இராணுவத்தினர்க்கான ஒரு நிலையமொன்றையும் இராணுவம் தொடங்கியுள்ளது.

### புலிகள் தடை.....

விசாரணைக் குழு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பும். 30 நாட்களுக்குள் இதற்கு சம்பந்தப்பட்ட அமைப்பு பதில் தர வேண்டும். தடை செய்யப்பட்ட அமைப்பின் விளக்கத்தை விசாரணைக் குழு பரிசீலித்து மத்திய அரசின் பிரதிநிதிகளையோ, அல்லது தடை செய்யப்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளையோ தேவைப்பட்டால் விசாரணைக் குழு அழைத்து விசாரணை நடத்தும். விசாரணைக் குழு எழுப்பும் சந்தேகங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் பதிலளிக்க வேண்டும். அதன் பிறகு ஆறு மாதங்களில் இந்த தடை சட்ட ரீதியாக சரியானதா? இல்லையா? என்பதை விசாரணைக் குழு அறிவிக்கும். தடை செய்யப்பட்டது சட்ட ரீதியானதுதான் என்று விசாரணைக் குழு உறுதி செய்யுமானால் அந்தத் தடை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு அமுலிலிருக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு இந்த உத்தரவு காலாவதியாகிவிடும். தடை செய்யப்பட்ட இயக்கத்தோடு, யாராவது தொடர்பு கொண்டு செயற்பட்டால் அதைத் தடுப்பதற்கு மத்திய அரசிற்கு உரிமையுண்டு. -இவ்வாறு "இந்து" ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசத்துரோகிகளை எம் தாயகம் மன்னிக்காது

தமது வியாபார நலன்களிற்காக கூட்டுப்படை தலைமையகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட திரு. முனுசாமி யோசேப், வவுனியா இராணுவத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட திரு இராமையா இராமலிங்கம் (நெலுக்குளம் வவுனியா), கொள்ளை, பாலியல் வன்முறை போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ள திரு. தம்பன் செல்லத்தம்பி துன்னாலை தெற்கு, கரவெட்டி ஆகியோரின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன.

தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சிறிலங்கா அரசுக்குத் துணைபோன யோசேப், இராமலிங்கம், சமூக விரோத நடவடிக்கைகளில் (1-9-1981 ஆம் ஆண்டு குடத்தனை வைத்தியசாலையில் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியமை) ஈடுபட்ட செல்லத்தம்பி ஆகியயோருக்கு எம்மால் மரணதண்டனை வழங்கப்படுகின்றது.

தமிழினத்தேசத்துரோகியான அல்பிரட் துரையப்பா அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடித்து தண்டனை வழங்க வேண்டுமென முனைப்புடன் செயற்பட்ட இரகசியப் பொலிஸ் அதிகாரி திரு. தி. தாமோதரம்பிள்ளை(உரும்பிராய்). இவருக்குத் துணையாகச் செயற்பட்ட முன்னாள் யாழ். உதவி மேயர் திரு. சொ. பேரின்பநாயகம் (குருநகர்) திரு. சி. செல்லையா (மயிலிட்டி) ஆகியோர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக 11-01-92 அன்று தெரியப்படுத்தியிருந்தோம். தற்போது இவர்களினது விசாரணைகளும் பூர்த்தியாகி உள்ளன.

துரையப்பா நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட எம்மவர்களைக் கைது செய்து தண்டனை வழங்குவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு அழித்து விடவேண்டும் என மும்முரமாகச் செயல்பட்டவர்கள் பஸ்தியாம்பிள்ளை(சி. ஐ. டி), தாமோதரம்பிள்ளை (ஓ. ஐ. சி) ஆகியோராவார். இவர்கள் இருவரும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகப் பல துரோகச் செயல்களில் ஈடுபட்டவர்கள். இதில் பஸ்தியாம்பிள்ளை 1978ம் ஆண்டு எமது முகாமைத் தேடிவந்த சமயம் முருங்கன் பகுதியில் வைத்து நடைபெற்ற மோதலில் கொலையுண்டார்.

தேசத்துரோகி துரையப்பா அழிக்கப்பட்டபின் நாகராஜா மாஸ்ரர் எம்மவர் ஒருவரைக் கூட்டிவந்து செல்லையா வீட்டில் தங்கவைத்துள்ளார். செல்லையா அவருடன் கதைத்தபோது அவர் பெயர் கிருபாகரன் என்பதையும், துரையப்பா அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதையும் தெரிந்து கொண்டார். கிருபாகரன் அங்கிருந்து சென்ற சில நாட்களின் பின் இச்சம்பவங்களைத் தனது நம்பிக்கைக்குரியவர் என்ற முறையில் க. தனபாலசிங்கம் (காங்கேசன்துறை) என்பவருக்குச் செல்லையா கூறியுள்ளார்.

அல்பிரட் துரையப்பாவின் அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதில் தாமோதரம்பிள்ளை தீவிரமாகச் செயற்பட்டார். இவர் தனது நடவடிக்கைகளுக்கு உதவியாகத் தகவல்களைப் பெற்றுத் தமக்கு வழங்குவதற்கு யாழ். உதவி மேயராக இருந்த இவரது நண்பராகிய சொ. பேரின்பநாயகம் என்பவரை நியமித்தார்.

துரையப்பாவின் அழிப்பு நடவடிக்கையானது பேரின்பநாயகம் அங்கம் வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழின விரோத நடவடிக்கைகள் எமது மண்ணிலே அனுமதிக்கப்படமாட்டாது என்பதன் அடையாளமாகவே இடம்பெற்றது. தான் உதவி மேயராகப் பணிபுரிந்த சிறிலங்கா அரசிற்கு எதிரான நடவடிக்கையை அனுமதிக்கக் கூடாது என்ற நோக்கத்திற்காகப் பேரின்பநாயகம் ச்ம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் முனைப்புடன் செயற்பட்டார்.

பேரின்பநாய்ம் இது சம்பந்தமாகப் பலரை அணுகித் துரையப்பா அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றித் தகவல்கள் திரட்டுவதில் ஈடுபட்டார். அதேபோல் ஒருமுறை காங்கேசன்துறையைச் சேர்ந்த க. தனபாலசிங்கம் என்பவரிடம் மேற்படி விடயம் பற்றிக் கதைத்தபோது தனபாலசிங்கம் தகவல் அறிந்தவரைத் தனக்குத் தெரியும் எனக்கூறிச் செல்லையாவை இவருக்கு அறிமுகப்படுத்திவைத்தார் (பேரின்பநாயகம் செல்லையாவிடம் பெற்ற தகவல்களைத் தாமோதரம்பிள்ளைக்குக் கூறியதுடன் செல்லையாவுடன் தொடர்பையும் ஏற்படுத்திவைத்தார். செல்லையாவால் கொடுக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு தாமோதரம்பிள்ளை கிருபாகரனை அடையாளம் கண்டுகொள்வதுடன் கிருபாகரன் பற்றிய முழுவிபரங்களையும் அறிந்து கொள்கிறார். பின்னர் தனது பிற புலனாய்வு நடவடிக்கைகளின் மூலம் கிருபாகரன் பொலநறுவைக்கு அருகேயுள்ள மன்னம்பிட்டி என்ற இடத்தில் தலைமறைவாக உள்ளார், என்பதனை அறிந்து அங்கு சென்று கிருபாகரனைக் கைதுசெய்து யாழ்ப்பாணம் கொண்டு வந்துள்ளார். அதன் பின்னர் யாழ். கோட்டை பொலிஸ் நிலையத்திற்குச் செல்லையா சென்று கைது செய்யப்பட்டவர் கிருபாகரன் தான் என்பதனை நேரடியாக அடையாளம் காட்டியுள்ளார்.

இங்கு தாமோதரம்பிள்ளை, பேரின்பநாயகம், தனபாலசிங்கம், செல்லையா ஆகியோர் திட்டமிட்ட முறையிலேயே செயற்பட்டுள்ளார்கள், இவ்விடயங்களை நன்கு விசாரித்து, ஆழமாக ஆராய்ந்ததில் இதில் சம்பந்தப்பட்ட செல்லையா காட்டிக்கொடுக்க வேண்டும் என்ற திட்டமிடாமலேயே ஆரம்பத்தில் இவ்விடயத்தைத் தனபாலசிங்கத்திற்குக் கூறியுள்ளார். அதன் பின்னர் பேரின்பநாயகம், தாமோதரம்பிள்ளை, தனபாலசிங்கம் ஆகியோர்ரால் பின்னப்பட்ட சூழ்ச்சிவலைக்குள் திட்டமிட்டு வீழ்த்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந்த நடவடிக்கையில் பங்களித்தபோதும் அடிப்படையில் காட்டிக்கொடுக்கும் எண்ணமில்லாதிருந்த செல்லையாவை மன்னித்து விடுதலை செய்கின்றோம்.

இந்நடவடிக்கையில் ஈடுபட்ட தனபாலசிங்கம் (1988. 11. 04) மரணமடைந்து விட்டார். தம் சொந்தசுகபோக நலன்களுக்காகச் சிங்கள எஜமான்களுக்கு விசுவாசமாகத் திட்டமிட்டு காட்டிக்கொடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பேரின்பநாயகம், தாமோதரம்பிள்ளை ஆகியோருக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது.

நீண்டகாலத்துக்கு முன்னைய காட்டிக்கொடுப்பிற்கு ஏன் இன்று தண்டனை வழங்கப்படவேண்டும்? போராட்டம் பெருமளவிலான வளர்ச்சியடையாத காலகட்டக் காட்டிக்கொடுப்பிற்கு மன்னிப்பு வழங்க முடியாதா? என்பனபோன்ற கேள்விக்ள் எம்மிடம் முன்வைக்கப்பட்டன.

தாய் நாட்டைக் காட்டிக்கொடுத்து எம்மக்களுக்கு எதிரான துரோக நடவடிக்கையிலீடுபடும் ஒருவனுக்குக் காலம் என்பது ஒரு பாதுகாப்புக் கவசமாக அமைந்துவிடமுடியாது அதேபோல் எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலக் காட்டிக் கொடுப்பானது எம்மை ஒட்டுமொத்தமாக அழித்தொழிப்பதற்கான சதி நடவடிக்கையாகும்.

இன்று பெருவிருட்சமாக வளர்ச்சியடைந்திருக்கும் எமது விடுதலை வித்து, சிறு அரும்பாக முளைவிட்ட காலத்தில் நசுக்கி, வேரோடு அழித்து விட நினைத்தவர்களை எங்ஙனம் மன்னிப்பது.

இவ்வாறு கடந்த 22. 03, 1992 ல் வெளியிட்ட அறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

நன்றி: "விழிப்பு" - தமிழீழம் -

# தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இந்த ஆய்வு நிறுவனம் இயங்கும்.

கிளிநொச்சியில் கடந்த மார்ச் மாதம் 7-8 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் தேசிய மாநாட்டின்போது, பெண்கள் பிரச்சினை சம்பந்தமாக ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைப்பதென, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வேலைத்திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவும் இடம் பெற்றது.

காலம் காலமாக, பல நூற்றாண்டுகளாக, தமிழீழப் பெண்ணினம் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பல்வேறு ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வருகிறது. அரச பயங்கரவாத அடக்குமுறை ஒருபுறமும், தொடரும் போர்ச் சூழ்நிலையின் தாக்கங்கள் மறுபுறமுமாக பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினைகளை இனம்கண்டு, அவற்றிற்குத் தீர்வுகாணும் வகையில் வேலைத் திட்டங்களை அமைத்து, மகளிர் முன்னணி செயற்பட்டுவருகிறது. பெண்களின் பிரச்சினைக்குத் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதானால், முதலில் பெண்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளை விஞ்ஞானரீதியில் ஆய்வு செய்யப்படவேண்டும். இந்த விஞ்ஞான ஆய்வின் அவசியத்தையும் தேவையையும் உணர்ந்தே ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைக்க மகளிர் முன்னணி முடிவு எடுத்தது.

இந்த ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் வருமாறு.

1. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமான புள்ளி விபரங்கள், தரவுகள், பட்டறிவு விபரங்கள் ஆகியனவற்றைச் சேர்த்து தொகுத்தல்.

2. சமூகவியல் ஆய்வுக்கான பிரச்சினைகளை இனம்காணுதல். கோட்பாடுகளுக்கும், கருத்துருவங்களுக்கும் தெளிவான வரைவிலக்கணங்களை நெறித்தல். ஆய்வுமுறையை வகுத்தல். வேலைத் திட்டங்களின் செயற்பாட்டுத் தன்மையைப் பரிசீலனை செய்தல்.

3. தமிழீழப் பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கை நிலையை ஆய்வு செய்து அறிதல்.

4. இந்த ஆய்வு நிறுவனம் தமிழீழப் பெண்கள் பற்றிய தகவல் மையமாகவும் செயற்படும்.

5. இந்த ஆய்வு நிறுவனம் சர்வதேசப் பெண்கள் ஆய்வு நிறுவனங்களுடனும், மற்றும் பெண் உரிமைக்காகப் போராடும் உலக மகளிர் அமைப்புகளுடனும் தொடர்புகளை அமைத்துச் செயற்படும்.

## சொந்தத்தில்....


போதும் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றன. வம்சாவளி அட்டவணையைப் பார்த்து, ஏதேனும் மரபு வழி நோய் வரக் கூடிய சாத்தியக் கூறுள்ளவர்கள், அந்நோய் இல்லாத வம்சத்தில் திருமணம் செய்து கொள்வதே பொருத்தமாகும். மூதாதையினருக்குள்ளும் உறவினருக்குள்ளும் இத்தகைய பரம்பரை நோயில்லையெனில் உறவுக்குள் திருமணம் புரிந்து கொள்ளலாம்.

திருமணம் நடத்துவதற்கு முன்பே மரபியல் ஆலோசகர்களை நாடி யோசனை பெறலாம். 'பாட்டன் வாங்குகிறான், தந்தை கட்டுகிறான், மகன் விற்கிறான், பேரன் பேச்சை எடுக்கிறான் என்பது ஸ்காட்லாந்துப் பழமொழி. எனவே நிலையற்ற செல்வம் கருதியோ சொந்த பந்தம் நீடிக்க வேண்டும் என்று கருதியோ மட்டும் உறவுத் திருமணங்களை ஆதரிக்கக் கூடாது.

நன்றி கலைமகள்

## மணிக்கு ஒரு தடவை சோதனை

மூதூரில் இராணுவத்தினரின் சுற்றி வளைப்புகள், ரோந்துகள் அதிகரித்துள்ளன. இப்பகுதியில் உள்ள அகதிமுகாம்கள் மணிக்கு ஒரு தடவை படையினரால் சோதனையிடப்படுகின்றன. இளைஞர்கள் அனைவரும் கைதாகி இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்ட நிலையில் அகதிமுகாம்களில் தற்போது வயோதிபர்களும் பெண்களுமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்களையும் படையினர் கைதுசெய்து முகாம் கொண்டு செல்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சொந்தத்தில் செய்யப்படும் திருமணங்களின் விளைவுகள்

■ டாக்டர் ச. ஞானசௌந்தரி (M.B.B.S. D.G.O.)

**தமிழர் இடை சொந்தத்துள்ளேயே திருமணங்கள் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் நீண்டகாலமாக இருந்துவருகிறது. இது சொத்துடமை அடிப்படையில், பெண்ணின் சொத்து பெண்ணின் வழியிலேயே தொடர்ந்து செல்ல வேண்டுமெனும் உணர்வில் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இதனாலேயே தாய்மாமனுக்கு அதிக முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் காலகெதியில் இது ஒரே சாதிக்குள் ஒரே சொந்தத்துள் திருமணம் செய்யவேண்டுமென்ற சாதீயத்தன்மைகளுக்கும் வழி சமைத்தது. இந்நிலையில் இதனால் ஏற்படும் விளைவுகளை விஞ்ஞானமுறையில் இக்கட்டுரை விளக்குகிறது.**

திருமணம் என்பது மகளிர் வாழ்க்கையில் முக்கிய திருப்பம். இதைப் பொறுத்தே அவர்கள் வாழ்க்கை அமைகிறது. 'மங்கலம் என்ப மனையாட்சி மற்றதன்; நன்கலம் நன்மக்கட்பேறு' என்றார் திருவள்ளுவர். குடும்பத்திற்கு எல் நன்மைகளையும் உண்டாக்கக்கூடிய மங்கலப் பொருள் எனச் சொல்லப் படுவது மனையாளின் பெருமைதான். அப்பெருமை தரும் நல் வாழ்விற்கு அழகு தரும் ஆபரணமாவது நன்மக்களைப் பெறுவது. எனவே வாழ்க்கைக்குத் துணைதேடும் போது, நல்ல பாரம்பரியம் உருவாக வேண்டும் என்ற நோக்கோடும் துணை தேடுவது அவசியம். பாரம்பரியம் எவ்வாறு உருவாகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுதல், மகளிரின் முதல் கடமை.

நடைமுறையில் அந்நியக் குடும்பங்களுக்குள் திருமண உறவு ஏற்படும்போது, பிறக்கும் குழந்தைகளையும், நெருங்கிய உறவினருக்குள் திருமணம் நடந்து பிறக்கும் குழந்தைகளையும் ஆராயும் போது, சில கோளாறுகளும் குறைபாடுகளும் நெருங்கிய உறவுத் திருமணங்களின் மூலம் பிறக்கும் குழந்தைகளிடம் அதிகமாகக் காணப்படுவதாக மருத்துவ உலகம் அறிந்துள்ளது. ஆனால் எல்லா உறவுத் திருமணங்களிலும் இத்தகைய குறைபாடுகள் காணப்படுவதில்லை. உறவுத் திருமணப் பந்தங்களின் குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகள் தோன்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்பதை முன் கூட்டியே அறிந்தால், அவற்றையாவது தவிர்க்கலாம் அல்லவா? அதனைப் பற்றி அறிய மனித உடலின் வளர்ச்சியைப் பற்றி அறிவது அவசியம்.

இலைகளையும் கிளைகளையும் வேர்களையும் கொண்ட மரம், ஆதியில் சிறிய வித்திலிருந்து தோன்றுவது போலவே, மெய் வாய் கண் மூக்கு செவி என்று அறியப்படுகின்ற இவ்வுடலும் மூலமாகிய நுண்ணறை (Cell) யிலிருந்தே தோன்றுகிறது. அனைத்து உயிர்கட்கும் அடிப்படையான இந்த நுண்ணறையின் முக்கிய பாகம் உட்கரு (Nucleus) ஆகும். அச்சுப் பிசகாமல் தன்னைப் போன்றே இன்னொரு நுண்ணறையை உருவாக்குவது இந்த உட்கருவே. நுண்ணறையில் உட்கருவிற்கு வெளியாகக் கருவெளி (Cytoplasm) உள்ளது. மிக நுண்ணிய துளைகளுள்ள உட்கரு மெல்லுறை (Nuclear membrane) உட்கருவையும் கரு வெளியையும் பிரிக்கின்றது. இதன் மூலமாகத் தான் கருவெளி உட்கருவிற்கு உணவளித்து கழிவினை அகற்றி அதனை உயிர்ப்பிக்கிறது.

மனிதனை உருவாக்கும் முயற்சியில் இந்த நுண்ணறைதான் பெரிதாகின்றது. எண்ணிக்கையில் பன்மடங்காகின்றது. வளர்ச்சி பெறுகிறது. அத்துடன் வேறுபாடு அடைகின்றது. ஒரு நுண்ணறையே கோடானு கோடியாய்ப் பல்கிப் பெருகி வளர்ச்சியுறும் தன்மை, மாறுபடும் தன்மை (Differentiation), சார்ந்து அமையும் தன்மை. (Relative movement) ஆகிய செயல்களின் அடிப்படையிலே வகை வகையாகப் பிரிகின்றது. அவையாவன:

1. புலன்களை இயக்கிச் சிந்திக்கும் திறனைத் தந்து ஆறறிவுடையவனாக மனிதனை உயர்த்தும் நரம்பு நுண்ணறைகள் (Nerve cells)
2. உடலின் வெளிப்புற அடுக்காகவும், உமிழ் நீர்ச்சுரப்பி, உணவுக்குழாய், உடல் ஆகியவற்றின் உள்வரிச் சவ்வாகவும் அமையும் மேல்தோல் இழை (Epithelial) நுண்ணறைகள்.
3. நடமாடும் மனிதனாக எலும்புக் கூட்டினை இணைக்கும் இணைப்புத் திசுக்கள் (Connecting Tissue) ஆக்கும் நுண்ணறைகள்.
4. உடலின் அசைவுகளை அடக்கியாளும் தசை நார்கள் (Muscle fibre)

இவ்வாறு வகை வகையாகப் பிரிந்து செயல்படும் நுண்ணறைகளின் சேர்க்கையாலும் பணிகளாலும் கண், மூக்கு, வாய். மூளை, சுவாசப்பை, இருதயம், வயிறு, குடல், ஈரல், சுரப்பிகள், சிறுநீர்ப் பிரித்தி, பாலின உறுப்புகள், கை, கால் என இந்த உடலின் பல்வேறு உறுப்புகளையும் பெற்று மனிதன் தன் வரலாற்றைத் தொடங்குகிறான்.

மனித அமைப்பிலே கோளாறு ஏற்படுவதற்கு அதன் மூல வித்தாகிய நுண்ணறையிலே ஏற்படும் கோளாறும் ஒரு காரணமாக இருக்கலாம் என்பதை மருத்துவ உலகம் அறிந்துள்ளது. நுண்ணறையிலேதான், இனக்கீற்றுகள் (Chromosomes) உள்ளன. ஒரு குழந்தை உருவாகும்போது தாயின் கருவணுவும் தந்தையின் கருவணுவும் இணையும் போது, தாயின் தாய் வழி இனக்கீற்றுகளுடன் தந்தைவழி இனக்கீற்றுகள் இணைகின்றன. தாயிடமிருந்தும் மற்றொரு பாதி தந்தையிடமிருந்தும் பெறப்படுவதால், அவை இரண்டிரண்டாக இணைக்கப்பட்ட ஜோடிகளாகவே காணப்படுகின்றன.

மனித இனத்தைப் பொறுத்தவரையில் 23 இனக்கீற்றுகளைத் தாயிடமிருந்தும் 23 இனக்கீற்றுகளைத் தந்தையிடமிருந்தும் ஒரு குழந்தை பெறுகின்றது. 23 இனக் கீற்றுகளில் 22 இனக்கீற்றுகள் பண்புகளுக்குக் காரணமாகும் பண்பினக் கீற்றுகளாகவும் (autosomes) மற்ற ஒன்று ஆண்-பெண் பாலினத்தை நிர்ணயிக்கும் பாலினக் கீற்றாகவும் (Sex Chromosome) அமையும்.

இவ்வாறு தாயிடமிருந்தும் தந்தையிடமிருந்தும் 22 பண்பினக் கீற்றுகளையும் ஒரு பாலினக் கீற்றையும் தனித் தனியே பெறுகின்ற குழந்தை மொத்தத்தில் 22 ஜோடிப் பண்பினக் கீற்றுகளையும் இரண்டு பாலினக் கீற்றுகளையும் பெறுகிறது. அதாவது ஒரு குழந்தை பெற்றோரிடமிருந்து 23 கோடி இனக் கீற்றுகளைப் பெறுகின்றது.

ஒவ்வோர் இனக்கீற்றிலும் நிறம் அழகு உயரம் உருவ அமைப்பு, குலப் பண்புகள் ஆகிய பல ஆயிரக்கணக்கான மரபுக்கூறுகள் (Genes) உள்ளன. எனவே, ஒரு குழந்தையின் உடலில் ஆயிரக்கணக்கான தாய் வழி மரபுக்கூறுகளும், ஆயிரக்கணக்கான தந்தை வழி மரபுக்கூறுகளும் முறைப்படி பொருத்தமாக இணைந்து ஒரு நிலையில் நின்று செயல்படுகின்றன.

அதாவது, நிறந்தரும் தாய் வழி மரபுக்கூறு, நிறந்தரும் தந்தை வழி மரபுக்கூற்றுடனும், உயரத்துக்குக் காரணமாகும் தாய் வழி மரபுக்கூறு, உயரத்துக்குக் காரணமாகும் தந்தைவழி மரபுக்கூற்றுடனும் என, தத்தம் இணையோடு இணைந்து ஒரே ஒழுங்கில் செயல்படுகின்றன. இவ்வாறு இணைந்து செயல்படும் தாய் வழி மரபுக் கூற்றிலும் தந்தை வழி மரபுக்கூற்றிலும் ஏதேனும் ஒன்று தன் திறனில், பண்பில் மாறுபட்டு விடலாம் அல்லது குறைபாடு உடையதாகிவிடலாம்.

அப்போது மாறுபட்ட மரபுக் கூற்று ஜோடியில் ஒன்று மற்றதைவிடச் செயலாற்றும் திறனிலும் மாறி விடலாம். ஒரே இணையிலிருந்தாலும் இரண்டு மரபுக் கூறுகளும் ஒரே விளைவைத் தராது. ஒரு மரபுக்கூறு மற்றதைவிடச் சற்று முனைப்பாக அமைந்து, அதன் பண்புகளை ஓங்கி ஆதிக்கம் கொள்ளச் செய்யுமாயின் அதனை ஓங்கு பண்பு கொண்ட மரபுக் கூறு (Dominant gane) என்று கூறுவர். அவ்வாறு இல்லாமல் இரண்டு மரபுக்கூறுகளில் ஒன்று ஒடுங்கித் தன் செயல்திறன் குறைந்த பின் தங்கிவிடுமாயின் அதனை ஒடுங்கு பண்புகொண்ட மரபுக்கூறு (Recessice Gene) என்று கூறுவர்.

உதாரணமாக, வளர்ச்சியை நிர்ணயிக்கும் கூறுகளில் உயரமாக வளரும் பண்பு ஆதிக்கம் கொண்ட மரபுக் கூற்றிலும், குட்டையாக வளரும் பண்பு பின்வாங்கும் தன்மை கொண்ட ஒடுங்கு மரபுக் கூற்றிலும் பொதிந்து கிடக்கலாம். இவ்விரு பண்புகளைக் கொண்ட மரபுக் கூறுகளும் ஆண்- பெண் கலவியில் தோன்றும் கருவில் ஜோடியாக இணையும்போது, குழந்தை ஓங்கு பண்பு கொண்ட மரபுக் கூற்றின் ஆதிக்கத்தில் இருந்தால் உயரமாக வளரும். எனவேதான் திருமணப் பொருத்தப்பாட்டில் மரபு வழி வருகின்ற மரபுக் கூறுகளில் செயல்பாடே குழந்தைகளின் தன்மைக்குக் காரணமாகின்றன. எவ்விதக் குறைபாடுகளும் இல்லாத தம்பதியர்களின் குழந்தைகள் பெரும்பாலும் குறைகளின்றியே பிறக்கின்றன.

தம்பதிகளிடையே இனக்கீற்றின் எண்ணிக்கையிலோ, அதன் அமைப்பிலோ மாறுபாடுகள் இருக்குமாயின் அவர்கள் கலவியில் உண்டாகும் கருவும் பாதிக்கப்படுகின்றது. 50 முதல் 60 சதவீதக் கருச்சிதைவுகளுக்கு (Aborions) 1 முதல் 2 சதவித உயிர்ப்பியலாப் பிறப்புகளுக்கு (still birth), 0.5 சதவிதப் பிறவி கோளாறுகளுக்கும் (congenital anomalies) இனக் கீற்றுகளின் பாதிப்பே காரணமாகிறது. பிறவிக் கோளாறுகளுக்குரியகாரணங்களை மட்டுமே ஆராய்கின்றபோதும் 40 சதவீதக் குழந்தைகளின் ஊனத்திற்கு மூல காரணம் மூதாதையரின் பாதிப்புகளே என்று அறியப் பட்டுள்ளது.

மூதாதையர் தம்மிடமுள்ள மாறுபட்ட மரபுக் கூறுகள் மூலம் தங்கள் வாரிசுகளுக்கு உடல் ஊனப் பண்புகளைத் தருகின்றனர். மாறுபட்ட மரபுக் கூறுகள் ஓங்கு பண்புள்ளவையாயினும் சரி. ஒடுங்கு பண்புள்ளவையாயினும் சரி. குழந்தைகளுக்கு அவை எடுத்துச் சொல்லப்படுகின்றன. ஓங்கு பண்பு கொண்ட பண்பினக் கீற்றுகள் வழியாகச் சந்ததியினருக்கு வரும் நோய்கள், கோரணிவாதம் (Chorea), குருத்தெலும்பு குன்றின குள்ளம் (Achondroplasia) ஆகியனவாகும். ஒடுங்கு பண்பு கொண்ட பண்பினக் கீற்றுகள் வழியே சந்ததியினருக்கு வரும் நோய்கள் முழுநிறக் குருடு (Total Colour blindness) பாண்டு (Albirisum) போன்றவை. பிறவிக் கோளாறுகள் பண்பினக் கீற்றுகள் வழியாகத்தான் குழந்தைகளுக்குச் செல்கின்றன என்பதில்லை. பாலினக் கீற்றுகள் வழியாகவும் குழந்தைகளுக்குச் செல்லலாம்.

சிறிய தலையுள்ள (Microcephaly) குழந்தை, பரம்பரை வழுக்கை, மந்த புத்தி (idivocy) போற்றவற்றுக்கும் குறைபாடுள்ள மாறுபட்ட மரபுக் கூறுகளே காரணமாகலாம்.

ஓங்கு பண்பு கொண்ட பாலினக் கீற்று வழியாக, இரத்த இனத்தைச் சார்ந்த 'டி' உயிரூட்டச் சத்திற்குக் கட்டுப்படாத கண் நோய் (Vitamin reosistant Rickets) போன்றவை பின்வரும் சந்ததிகளைப் பாதிக்கின்றன. ஒடுங்கு பண்பு கொண்ட பாலினக் கீற்று வழியாகக் குருதி உறையா நோய் (haemophilia), சிவப்பு பச்சை நிறக் குருடு, இளஞ்சிசுக் காமாலை (neonatal jaundice) ஆகிய நோய்கள் சந்ததியினரைத் தாக்குகின்றன. சில சமயங்களில் தம்பதியர்கள் ஒடுங்கு பண்பு கொண்ட பண்பினக் கீற்றுகளையோ பாலினக் கீற்றுகளையோ உடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், தாம் அந்நோயினால் பாதிக்கப்படாமல், நோய்க் கடத்திகளாக (carriers) அந்நோயைப் பின்வரும் வாரிசுகளுக்குத் தரலாம்.

பின்வரும் அட்டவணை இனக் கீற்றுகளால் ஏற்படும் வம்சாவளிப் பாதிப்புகளின் விகிதத்தை விபரமாக விளக்குகிறது.

**பின்வரும் அட்டவணை இனக் கீற்றுகளால் ஏற்படும் வம்சாவளிப் பாதிப்புகளின் விகிதத்தை விபரமாக விளக்குகிறது.**

**ஓங்கு பண்பு கொண்டபண்பினக் கீற்று உள்ளவர்களின் வம்சா வளிப் பாதிப்பு**

| | | |
|---|---|---|
| தம்பதியரில் ஒருவர் பாதிக்கப்படின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 50% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 50% |
| தம்பதியரில் இருவருமே பாதிக்கப்படின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 75% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 25% |

**ஒடுங்கு பண்பு கொண்ட பண்பினக் கீற்று உள்ளவர்களின் வம்சாவளிப் பாதிப்பு**

| | | |
|---|---|---|
| தம்பதியரில் ஒருவர் பாதிக்கப்படின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 0% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 0% |
| | நோய்க் கடத்திகள் | 100% |
| தம்பதியரில் இருவருமே பாதிக்கப்படின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 100% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 0% |
| | நோய்க் கடத்திகள் | 0% |
| தம்பதியரில் ஒருவர் பாதிக்கப்பட்டு மற்றொருவர் நோய்க் கடத்தியாக இருப்பின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 50% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 0% |
| | நோய்க் கடத்திகள் | 50% |
| தம்பதியரில் ஒருவர் மட்டுமே நோய்க்கடத்தியாக இருப்பின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 0% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 50% |
| | நோய்க் கடத்திகள் | 50% |
| தம்பதியரில் இருவருமே நோய்க் கடத்தியாக இருப்பின் | பாதிக்கப்படும் குழந்தைகள் | 25% |
| | பாதிக்கப்படாத குழந்தைகள் | 25% |
| | நோய்க் கடத்திகள் | 50% |

இந்த அட்டவணையிலிருந்து ஓங்கு பண்பு கொண்ட பண்பினக் கீற்றுகள் வழியாக வரும் கோரணி வாதம், குருத்தெலும்பு குன்றின குள்ளம் ஆகிய குறைபாடுகள் உள்ள குடும்பத்தில், உறவினர்கள் தங்களிடையே திருமண பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும் போது இருவருமே பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். அப்போது அவர்களுக்குப் பிறக்கும் நான்கு குழந்தைகளில் மூவருக்கு அக்குறைபாடு தோன்றிவிடலாம். முழுநிறக்குருடு, பாண்டு போன்ற நோய்களால் தாக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தில் உறவுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்றைய நிகழ்வில்



வீழ்ந்தவாகள் எல்லோரும் விதையாகிப் போனதால் தான் விடுதலைப்-போர் இன்றும் தொடர்கிறது.

# அன்றைய நினைவுகள்

கரும் பறவை

ஆனையிறவுப் போர்க்களத்தின் கட்டளைப் பணியகம். அங்கு அத்தாக்குதலை ஒருங்கிணைந்து நடாத்திக் கொண்டிருக்கும் பொட்டுவின் கண்ணெதிரில் ஒரு போராளி சோர்ந்த நடையில் சென்று கொண்டிருந்தான்.

"சரியெடாப்பா, நாளைக்கு உன்னைச் சண்டைக்கு விடுறன். இண்டைக்கு உசாரா வேலையைச் செய்" இவ்வாறு அப்போராளியைப் பார்த்துக் கூறிய பொட்டு என்னிடம் திரும்பி,

"எல்லாரும் சண்டைக்குப் போகவேணுமெண்டா என்ன செய்யிறது? மற்ற வேலைகளையும் பார்க்க வேணும் தானே. பாருங்கோ! இண்டைக்குச் சண்டைக்கு விடேல்லை எண்டவுடன் அலுப்படிச்சுக் கொண்டு திரியிறான்" என்றவாறே அன்றைய பகற் போரின் முடிவை அறிய தனக்கு முன்னே உள்ள விபரங்களில் பார்வையைச் செலுத்தினார். காயமடைந்தோர் பட்டியல் தனியாகவும், வீரமரணமடைந்தவர்களின் பட்டியல் தனியாகவும் தயாரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவர் பெயரிற்குப் பக்கத்திலும் இவரிற்கு இன்ன இடத்தில் இவ்வாறான காயம் ஏற்பட்டது என சுருக்கமாகக் குறிப்பிட்டிடப்பட்டிருந்தது.

முதலில் வீரமரணமடைந்தவர்கள் பட்டியல் -பட்டியலிலிருந்த பெயர்களைப் பொட்டு, படிக்கும் போது எவ்வாறான காயங்களினால் இவர்களிற்கு வீரமரணம் ஏற்பட்டது, எந்த முனையில் இச் சம்பவம் இடம் பெற்றது போன்ற விபரங்களை ஒரு போராளி விளக்கிக் கொண்டிருந்தான். இடையில் இரு பெயர்களை வாசித்த அப்போராளி

"இவை இரண்டு பேரும் பீப்பாக் குண்டால தான் வீரமரணம்".... என்று சொல்லி விட்டு அவர்களுக்கு ஏற்பட்டகாயம் பற்றி.... இல்லை, அவர்கள் உடல்கள் கிடந்த கோலம் பற்றி விளக்க வாயெடுத்தான்.

"சொல்லாதே" இடை மறித்தார் பொட்டு, அவர்கள் கிடந்த காட்சி மனக்கண்ணில் தெரிந்திருக்கும் தானே. அதை வாயாலும் கேட்டு.... வேண்டாம்! அந்தக் கணத்தில் பொட்டுவின் முகம் ஆயிரம் செய்திகளைச் சொன்னது.

ஒவ்வொரு போராளியின் வீரமரணம் பற்றியும் அவர்களின் காயம் பற்றியும் விளக்கி முடியும் அந்த இறுதி நேரத்தில்,

"இதை விட இன்னும் மூண்டு பேர எடுத்தனாங்கள். அது ஆம்பிளைகளின்ர Body" இந்த ஒரு வசனத்தில் அந்தப் போராளிகளின் உடல் எந்த மாதிரியான கோலத்தில் கிடந்திருக்கும் என்பதை -அந்தக் காட்சியை மனதில் படிய வைத்தான் அப்போராளி. அந்த வசனம் போராட்டத்தின் வளர்ச்சி பற்றிய நிலையை அப்படியே என் மனத்திரையில் பதித்தது. இது ஒரு ஆண் போராளியின் உடல் என இனங்காட்டும் காலகட்டம். நான் 82-83 ஆண்டுக் காலத்தின் நினைவுகளில் மூழ்கிக் கிடந்தேன்.

போராட்டத்தின் அழிவு வரும் - சாவு வரும் -பிரிவு வரும். எல்லாம் தெரிந்து கொண்டு தான் போராட்டத்திற்குள் வந்தோம். ஆனால், எம்மில் ஒருவனைப் பிரியும் சூழ்நிலை ஏற்பட்டதும் அது மிகவும் கொடியதாகத் தெரிந்தது எமக்கு. அக்கால கட்டத்தில் நாம் அதைத் தாங்கிக் கொள்ளும் மனோ வலிமையைப் பெற்றிருக்கவில்லை. 'சங்கர் இனிமேல் வரவே மாட்டான் - அவனது பிரிவு நிரந்தரமானது என்பதைத் தெரிந்து கொண்ட போது எமது உடலில் ஒரு அங்கம் குறைந்தது போன்ற உணர்வே ஏற்பட்டது. தலையணைகளை நனைக்கக் கூடிய அளவிற்கு எம்மிடம் கண்ணீர் உண்டா? ஏன் இப்படி நாம் நடந்து கொள்கிறோம்? இந்தப் பிரிவையெல்லாம் தாங்கிக் கொள்ளமுடியாத நாம் போராடுவதற்குத் தகுதியானவர்கள் தானா? என்றெல்லாம் எம்மிடம் வினா எழுப்பியபோது "மென்மையான சுபாவம் உள்ளவர்களே புரட்சிவாதிகள் ஆகின்றார்கள் தமது இனத்திற்கு -மற்றவர்களிற்கு ஏற்படும் கொடுமைகளைக் கண்டு அவர்களால் மனம் பொறுக்க முடிவதில்லை. அவர்களின் இந்த இயல்பு தான் கொடுமைகளிற்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தி அவர்களைப் போராளிகளாக உருவாக்குகின்றது. மற்றவர்களிற்கு என்ன கொடுமை -துயரம் இழைக்கப் பட்டாலும் அதைப் பார்த்துக் கொண்டு -அதைச் சகித்துக் கொண்டு இருக்கக் கூடிய கடினமனமுடையவர்களே போராட்டத்திற்கு வெளியில் நிற்கின்றார்கள். எனவே அழுவது என்பதை கோழைத்தனம் எனக் கருதலகாது. மற்றவருக்காக ஒருவன் அழுகின்றான் என்றால் கண்ணீரிற்கிடையே தெரியும் அவனது மனிதாபிமானத்தை - நேசத்தை தான் காண வேண்டும்" என்று அன்று சீலன் எமக்கு விளக்கமளித்தான் அப்போதெல்லாம் எமக்குத் தெரியவில்லை -எனக்காகவும் அழ நீங்கள் தயாராக இருங்கள் என்பதைச் சொல்வதற்காகத் தான் இப்படிச் சொன்னான் என்று.

அந்த நாளும் வந்தது - உலகில் எங்குமே நடந்ததாகக் கேள்விப் பட்டிருக்க முடியாத வகையில் அவன் எம்மை பிரிந்தான். அவனது இழப்பு! -அதைவிட அது நடைபெற்ற விதம்! மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்த அந்தக் காட்சி எம்மை உலுக்கி விட்டது. "வெளியில நிண்டு அழக்கூடாது. உள்ளுக்குப் போய் அழுங்கோ." -தனது ஒவ்வொரு பிள்ளைகளின் போக்குப் பற்றியும் -என்ன சொன்னாலும் இவர்களால் அழுவதை நிறுத்தமுடியாது -இதைவிட அழுகை தான் மனப் பாரத்தைக் குறைக்க வல்லது என்ற உளவியலைத் தெரிந்து கொண்ட தலைவர் இவ்வாறு எமக்கு அறிவுறுத்தினார்.

இதுக்கு.... இதுக்கு.... நாங்கள் என்ன செய்யிறது?....அது தான்.... அதைச் செய்யப் புறப்பட்டோம். "பழிவாங்கக் கூடாது! இது விடுதலை இயக்கத்திற்குரிய பண்பல்ல!" இதைத்தான் சித்தாந்தம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தவர்கள் போதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது தான் எமக்குப் பலமாக இருந்தது -நாம் பழி வாங்கினோம். கொதித்துக் கொண்டிருந்த மன உலையை திருநெல்வேலியில் இறக்கிக் கொண்டிருந்தோம். ஆயுதங்களிற்காகத் தான் அத்தாக்குதல் நடத்தப்பட்டது என எம்மில் ஒருவரும் கருதவில்லை.

எப்படி எப்படி, நினைத்தோமோ அப்படியே சண்டையும் அமைந்தது. ஒருகாட்சி -சூடு வாங்கிய ஒரு இராணுவவீரன் ஆயுதத்துடன் கிடந்தான் -எம்மில் ஒருவன் அவனை நெருங்கினான். அக்கணத்தில் அந்த இராணுவ வீரனது துப்பாக்கியைக் கைப்பற்ற வேண்டுமென்ற உணர்வு அவனுக்கு வரவில்லை. மாறாக அவனைப் புரட்டி -அவனது இராணுவக் கத்தியை எடுத்து "டேய் நீ தான் எங்கட சீலனைச் சுட்டனீ? நீ தான் எங்கட சீலனைச் சுட்டனீ?".... அவனது குரல் - அந்த விம்மல் -அவனை நாம் தடுக்கவில்லை. சீலனைச் சுட்டவன் யாரோ இவன் யாரோ என்பது எமக்குத் தெரியாததல்ல. ஆனாலும் நாம்அதைத் தான் செய்தோம். சித்தாந்தக் காரர்கள் அதைப் பேசிக் கொண்டே இருக்கட்டும். அழுது கொண்டே அவன் செய்தவை அவன் சீலனை எந்தளவிற்கு நேசித்தான் என்பதை எமக்குப் புரிய வைத்தன ஆம்.... உலகில் புலிகள் வித்தியாசமானவர்கள் தான். இதைத் தான் தொண்ணூற்றோராம் ஆண்டுச் செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன.

மீண்டும் தொண்ணூற்றோராம் ஆண்டில் நிற்கிறோம் என்ற நினைவு வந்தது. 14. 07. 1991 அன்று மாலை 5-15 மணி. ஆனையிறவில் இருக்கும் காவலரண் ஒன்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். காவலரண் பக்கமிருந்து வந்த ஒரு வாகனம் என்னை விலத்திக் கொண்டு யாழ்ப்பாணப் பக்கமாகச் சென்றது. எட்டிப் பார்த்தேன். சற்று முன்னர் வரை எதிரியை நோக்கி துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருந்த ஒருவன் மாவீரன் என்ற அந்தஸ்துடன் பயணித்துக் கொண்டிருந்தான். வாகனத்தில் அவனது புகழுடலை ஏற்றிவிட்டு சிலர் வந்து கொண்டிருந்தனர். அதில் ஒரு முகம் எனக்கு நன்கு பரிச்சயமானது.

"ஆஞ்சநேயர்-" அழைத்த வாறே அருகில் சென்றேன்.

"பெடியன்ர பேர் என்ன?"

"கணேஸ்" சாவகாசமாக அனைவரும்ஒரு புளியமரத்தின் கீழ் இருந்த காவலரணிற்கு முன்னால் உடகார்ந்தோம். உரையாடல் தொடர்ந்தது. மேலே "சகடை" சுற்றிக் கொண்டிருந்தது. அதன் இரைச்சல் கச்சேரிகளில் கேட்கும் ஆர்மோனியத்தை நினைவு படுத்தியது.

ஆஞ்சநேயரிற்குப் பக்கத்திலிருந்த ஒரு போராளியிடம் சற்றுப் பத்திரிகைத் தனத்துடன்

"சற்று முன்வரை உங்களுடன் காவலரணில் இருந்த ஒருவன் - உங்கள் நண்பன் இப்போது உங்களை விட்டுப் பிரிந்து விட்டான். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் உங்களுடைய மன உணர்வு எப்படி இருக்கும்?" என்று கேட்டேன், சோகத்துக்கிடையே மெல்லிய புன்னகையுடன்

"இதை எல்லாம் எதிர்பார்த்து இப்படி எல்லாம் நடக்கும் எண்டு தெரிஞ்சு தான் போராட்டத்துக்கு வந்தம். ஆனபடியால் இதுக்காக நாங்கள் அஞ்சப்போறதில்லை. பின்வாங்கப் போறதுமில்லை." என்றவாறே தனது துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்தான் சீலன் என்ற அப் போராளி.

"சரி ஆஞ்சநேயர்! இதப் பற்றி நீங்கள் என்ன சொல்லுறீங்கள்?" என்றேன்.

"இந்தப் போர்க்களத்தில் இப்ப உங்கட கண்ணுக்கு முன்னால போராளிகள் பதுங்கு குழி வெட்டுகிறார்கள். மண் மூடை அடக்கிறார்கள். இங்குள்ள சகல கஸ்டமான வேலைகளையும் செய்யிறார்கள். பிறகு, இவர்களே காவல் கடமைக்கும் போகிறார்கள். இப்படியாக களைப்படைந்த நிலையில் ஒரு போராளி காவல் கடமைக்குப் போகும் போது இப்படியான சம்பவங்கள் நிகழ்ந்து விடுகின்றன" என்றார்.

"இதைத் தடுக்க என்ன வழியெண்டு நினைக்கிறீங்கள்?" என்று கேட்டேன்.

"போர்க்களத்தில் எமக்கு ஒரு துணைப்படை வேண்டும். அது இருந்தால் போராளிகள் களைப்படையாமல் காவல் கடமையில் ஈடுபடுவார்கள். இதை விட எமக்த இப்படியான சூழலில் இன்னும் உற்சாகத்துடன் நிற்க விசேடமான பயிற்சிகள் வேண்டும்." என்றார்.

இரு காலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். போராட்டத்தின் வளர்ச்சி தெரிகிறது. ஆள் எண்ணிக்கையில் -ஆயுத எண்ணிக்கையில் மட்டுமல்ல, சகல வழிகளிலுமே நாம் வளர்ச்சியடைந்து விட்டோம். அன்று ஒருவரின் மரணம் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியது? இன்று இது ஆணின் சடலம் என்று குறிப்பிடுமளவிற்குப் போரின் தன்மை மாறி விட்டது -இத்தனைக்கும் நடுவிலும் போர்முனைக்கு அனுப்பாததற்காக கோபித்துக் கொள்கிறார்கள் போராளிகள். ஒருவனது மரணம் ஏற்பட்டவுடன் 'இதைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?' என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது தான் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சி!

நன்றி: "வெளிச்சம்" - தமிழீழம் -

# யாழ்ப்பாணத்தில்

## முதலாவது விஞ்ஞான மாநாடு

யாழ்ப்பாணத்தில் முதல்தடவையாக மூன்று நாள் விஞ்ஞான மாநாடு ஒன்று நடைபெற்று உள்ளது.

யாழ் பல்கலைக்கழக பௌதிக மண்டபத்தில் இம்மாநாடு நடைபெற்றது.

பேராசிரியர் அ. துரைராசா மாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

பொதுத்தலைவர், பிரிவுத்தலைவர்களின் உரைகள், ஆராய்ச்சிக் கட்டுரை வாசித்தல் ஆகியன இம் மூன்று நாட்களிலும் நடைபெற்றன.

இறால் வளர்ப்பு, பூச்சிக்கட்டுப்பாடு ,நன்னீர் நிலைகள் கட்டடப்பிரச்சினைகள். துவிச்சக்கர வண்டியில் போகும் போது நுரையீரலின் செயற்பாடு, யாழ்ப்பாணத்தில் வருவாய் தரும் பயிர்களின் செயற்பாடு ஆகியவை தொடர்பாக கருத்தரங்குகள் நடைபெற்றன.

இம்மாநாட்டில் சகல தரப்பினரும் பங்கு பற்றியுள்ளனர்.

# கிளிநொச்சி அபிவிருத்திக்கு ஆய்வு வட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தை பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி செய்வதற்காக பாரிய திட்டங்கள் தயாராகிவருகின்றன. இதற்கான முன்னேற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. இதற்கு முன்னேடியாக "பொருளாதார அபிவிருத்தி ஆய்வு வட்டம்" ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நிலவளம், நீர்வளம், நிதிவளம் போன்ற பல்வேறுவளங்கள் குறித்தும் இந்த ஆய்வு வட்டம் பெரியளவில் ஆய்வுகளையும் நடத்தி வருகிறது. அதே சமயம் கிடைக்கும் வளங்களைக் கொண்டு எவ்வாறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என்பதுபற்றியும் ஆய்வுகள் இடம்பெற்றுவருகின்றன. ஆய்வுகளின் முடிவில் மூன்றாண்டுத்திட்டம், ஐந்தாண்டுத்திட்டம் என இரு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு பௌர்ணமிக்காலம்

- ராகுல்ய அரவிந்தன் -



1

மார்கழி மாதத்து வைகறைப் பொழுது. வெண்புகார், கடல் நீர் ஏரிப் பரப்பு முழுவதையும் கவிந்து மூடியிருந்தது. கீழைவானம் இருள் அகற்றி ஒளிரத் தொடங்க இன்னமும் மூன்று நாழிகைப் பொழுதிருந்தது. அவ்வேளையில் தான் அந்தக் குதிரை வீரர்கள் கடல் நீர் ஏரிக் கரையில் வந்து தரித்து நின்றனர்.

உயர் ஜாதி அசுவங்கள் ஓடி வந்த களைப்பு அவற்றில் தெரியவில்லை. பிடரி மயிர்களைப் பீலிகயளாகச் சிலிர்த்துவிட்டு கனைத்தன. பன்னிரண்டு வீரர்கள் அடங்கிய அக்குழுவின் முன்னணியில் சாம்பல் நிறக்குதிரையொன்றிலும் வெண்ணிறக் குதிரை ஒன்றிலும் அமர்ந்திருந்த இரு இளைஞர்கள் வெகு கம்பீரப் புருசர்களாகக் காட்சி தந்தனர். தலைமயிர்களை வாரி இழுத்து கொண்டை முடித்திருந்தார்கள். 'திரண்டு முறுகிய உடல்வாகும், குதிரைகளில் ஆரோகணித்திருந்த அலட்சிய பாவமும் அவர்களின் வலிமைக்குப் பறைசாற்றின.

வெண் குதிரையில் அமர்ந்திருந்த இளைஞன் தன் அரைக்கச்சையைச் சற்று அசைத்துச்சரி செய்தபடி கேட்டான்: 'நண்பரே நாங்கள் இக்கடல் ஏரியைத் தாண்டி அக்கரைக்குச் செல்வோமா? அல்லது பின்னால் நம்மைத் தொடர்ந்து வரும் படையணிகள் வரும் வரை காத்திருப்போமா?"

'வேண்டாம்..." என்றான், அவசரமாக சாம்பல் நிறப்புரவியில் அமர்ந்திருந்த நாககுத்தன். புரவியில் அமர்ந்த நிலையில் தன் பின்னால் நிற்கும் வீரர்களைத் திரும்பிப் பார்த்தான். பின்னர், 'வேண்டாம், சேனா... நாங்கள் கடல் ஏரியைக் கடந்து அக்கரை செல்வோம். உனது இல்லத்துக்குச் சென்று சற்று இளைப்பாறுவோம். அவர்கள் அங்கு வந்து சேர்வார்கள் அவர்களை வழிநடத்தி வீரசுந்தரன் அழைத்து வருகிறான். ஒழுங்காக அரசவெளி வந்து சேர்வான்."

நாகதீபத்தையும் (யாழ்ப்பாணக் குடாநாடு). ஈழவூரையும் (பூநகரி) ஒடுங்கிய கடல் நீர் ஏரி ஒன்று பிரிக்கின்றது. நமது கதை நிகழ்கின்ற கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் உத்தரதேசத்தில் (வட இலங்கை) ஆங்காங்கு பலமான சிற்றரசுகள் நிலைபெற்றிருந்தன. தமிழ் மக்களது குடியிருப்புகள் பரவிய இப். பிரதேசங்களில் நிலவிய சிற்றரசுகளைத் தெளிவான இயற்கைக் காடுகள் எல்லையிட்டுப் பிரித்தன. அக்கால வேளையில் நாக தீபத்தின் தலைவனாக நாககுத்தனும், ஈழவூரின் தலைவனாக ஈழசேனனும் விளங்கினர்.

கடல் ஏரியின் மங்கலான நீரின் மேல் பனிப்புகார் படர்ந்திருந்தது. அந்த விடிகாலையில் மட்டி விழக்கிப் பொறுக்குவோர் சிலரும் கரப்பை குத்தி மீன் பிடிப்போர் சிலரும் மங்கலாகத் தூரத்தில், நீரில் நிற்பது தெரிந்தது.

நாகதீபத்தையும் ஈழவூரையும் இணைக்கின்ற ஒடுங்கிய சலசந்தியில் அவர்கள் வந்த பாதை முடிந்திருந்தது. பாதையின் இருமருங்கும் அடர்காடு வளர்ந்து கவிந்திருந்தது. இனங்காண முடியாத பட்சிகளின் ஒலிகள் விடியலை அழைத்தன. முழங்காலளவு நீர் நிரப்பிய சலசந்தியைக் கடந்து அக்கரையில் ஏறில், அரசவெளிக்குச் செல்கின்ற பாதை காட்டின் ஊடாகத் தொடரும்.

ஈழசேனன் தன் குதிரையை முதலில் நீரில் இறக்கினான். பலதடவை இப்பாதையில் வந்து பழக்கப்பட்ட குதிரையாதலால் தங்குதடையின்றி நீரில் இறங்கி முன்னேறத்தொடங்கியது. அவனைப்பின்பற்றி தன் குதிரையை நாககுத்தன் இறக்கினான் கரையும் நீரும் சந்திக்கும் இடத்தில் சற்றுத்தயங்கி நின்ற புரவி நாககுத்தனின் உடல் அசைவைப்புரிந்து கொண்டு நீரில் இறங்கியது. அவர்களைத் தொடர்ந்து ஏனைய வீரர்கள் தம் புரவிகளைச் செலுத்தினர். புரவிகளின் காலடிக்கிளறலால் சிந்திய துமிகள் அவர்களின் திரண்ட தொடைகள் மீதும் தெறித்துச் சிந்தின. நீரின் பனிக் குளிர்ச்சியை உணரமுடிந்தது.

இரு நேர்வரிசையையாகப் புரவிகள் நடந்து முன்னேறின. தம்பிரதேசத் தலைவன் ஈழசேனனை இனங்கண்டுகொண்ட மட்டி பொறுக்கியவர்களும் மீன்பிடித்தவர்களும் ஒதுங்கி நின்றதோடு தலைசாய்த்து வணக்கமும் செலுத்தினர்.

"நாகதீபத் தலைவனின் பெயர் சற்று வித்தியாசமாகவுள்ளது.." என்று தன்னருகில் வந்துகொண்டிருந்த ஈழவூர் வீரனிடம் நாகதீப வீரன் வினவினான்.

**'இலங்காபுரி முழுவதும் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. உத்தர தேசத்தில் நாகர்கள் வாழ்ந்து வந்த போது தக்கண தேசத்தில் தாரதத்தனும் அமைதியாக வாழ்ந்து வந்தனர்.'**

"அதில் அப்படி என்ன வித்தியாசம்? குத்தன் என்றால் காப்பவன் என்று அர்த்தம். நாகதீபத்தைக் காப்பவன்... அதனால் எங்கள் தலைவனுக்கு நாககுத்தன் என்று பெயர் உங்கள் தலைவனின் பெயர் மட்டும் வித்தியாசமாகவில்லையா?"

"ஈழவூரின் தலைவன் சேனன் என்றால் வீரன்.... சேனைத் தலைவன் என்றெல்லாம் அர்த்தம் வராதா?"

"அதுவும் சரிதான்...."

அவர்கள் பலவற்றையும் பேசிச் சிரித்தபடி கடல் ஏரியைக் கடக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் தலைவர்கள் இருவரினதும் சிந்தைகளில் வெவ்வேறு நினைவுகள் முகிழ்ந்தெழுந்தன.

நாககுத்தனின் மனதில் ஆறு திங்கள்களுக்கு முன், ஈழவூரில் சேனனின் மாளிகையில் சந்தித்த ஒரு அழகிய பெண்ணின் வடிவம் நிறைந்திருந்தது. பல்வரிசை முத்துக்கள் ஒளிர அவள் சிரித்தாள். "அன்னம்மை...." என நாககுத்தன் அவள் பெயரை மெதுவாக உச்சரித்துக் கொண்டான்.

அவளை மீண்டும் சந்திக்கப் போகிறோம் என்ற நினைவே பெரும் ஆவலாக நினைவில் கொந்தளித்தது. பனிக்குளிரையும் பொருட்படுத்தாது ஓரிடமும் தரிக்காது அவன் விரைந்து வருவதற்குக் காரணம் இருக்கத் தான் செய்தது.

அநுராதபுரத்திலிருந்து நாககுத்தனும் ஈழசேனனும் திரும்பி வந்திருந்தார்கள். அவர்கள் அநுராதபுரத்திற்குச் சென்றிருந்த காரியத்தைத் திறமையாக நிறைவேற்றிவிட்டு. ஈழவூர் வந்தார்கள். ஈழசேனனின் மாளிகையில் மூன்று தினங்கள் நாககுத்தன் தங்கியிருந்தான். ஈழசேனனின் அன்னை நாககுத்தனைத் தன் இன்னொரு புதல்வனாகக் கருதி வரவேற்று அறுசுவையுண்டி வழங்கினாள்.

மாளிகையில் பலர் நிறைந்திருந்தார்கள் அவர்களில் இரு மங்கைகள் எல்லோரினதும் கவனத்தைக் கவர்பவர்களாக விளங்கினர். இருவரும் அழகிகள். ஒருத்தி நீல ஆம்பல்போல இருந்தாள். மற்றவள் செந்தாமரை போல ஒளிர்ந்தாள். முதல் பார்வையிலேயே நாககுத்தனின் இதயத்தில் செந்தாமரை வண்ணத்தாள் புகுந்து கொண்டாள்.

"நண்பா, இந்தக் கறுப்பி பொன்னம்மை என் தங்கை மற்றவள் அன்னம்மை...." என்று ஈழசேனன் அம்மங்கைகளைத் தன் நண்பனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் அவர்கள் இருவரும் சிரித்தனர்.

குதிரைகள் அக்கரையில் ஏறிய போது ஈழசேனன் கேட்டான் "நண்பா, என்ன அப்படிக் கடும் சிந்தனை? எதுவும் பேசாமல் கனவுலகில் மிதந்து வந்தாய்?"

நாககுத்தன் தன் தோழனைப் பார்த்துச் சிரித்தான்.

"நான் மட்டுந்தான் சிந்தனை வசப்பட்டிருந்தேனா? நீயும் தான் எதுவும் பேசாமல் வந்தாய்?"

ஈழசேனன் வானத்தை அண்ணார்ந்து பார்த்தான் சூரியனின் ஒளிக்கதிர்கள் விண்ணில் பரவியிருந்தன. கீழைவானின் புகைப் புலத்தில் கடல் பறவைகள் வானில் கரும் பொட்டுகளாகத் தெரிந்தன. நன்கு விடிந்ததும் பார்த்தால் இந்தக் கடல் ஏரி முழுவதும் பறவைகளாகத் தெரியும். இந்த மண்ணிற்கு உறவில்லாத வெளித்தேசத்துப் பறவைகள் இந்த ஏரியில் விழுந்து மூழ்கி மீன் பிடிக்கும். உருவத்தில் பெரிய அப்பறவைகளையும் (கூழைக்கடா) உருண்டு திரண்டு நீரில் சுழியோடும் வாத்துக்களையும் (சைபீரியன் வாத்துக்கள்) அவனுக்குப் பிடிக்கும். அவை வலசைவருவன. ஒரு பருவத்திற்கு வந்து விட்டு தம் சொந்ததேசத்திற்குத் திரும்பிச் சென்றுவிடுவன.

ஆனால்.....?

ஈழசேனனின் உள்ளத்து ஒரு மூலையில் அவன் மூதாதை தாரதத்தன் தெரிந்தான். இலங்காபுரி முழுவதும் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. உத்தர தேசத்தில் நாகர்கள் வாழ்ந்து வந்தபோது தக்கின தேசத்தில் தாரதத்தனும் அவன் சமூகத்தினரும் அமைதியாக வாழ்ந்து வந்தனர். தாமிரபரணக் கரையில் அவர்களின் ஆள்புலம் இருந்துள்ளது.

"எனது மூதாதையர் தாரதத்தரை நினைத்துக் கொண்டேன். தாமிர பரணிக்கரையில் அமைதியாக வாழ்ந்து வந்தனர். குவேனி அக்கூட்டத்தின் தலைவியாக இருந்தாள். நாடு கடத்தப்பட்ட சிங்கள விஜயனும் அவனது தோழர்களும் தாமிரபரணிக்கரையில் காற்றினால் ஒதுக்கப்பட்டனர். அவர்களுக்கு இங்கிருக்க இடமும் கொடுத்து தன்னையும் கொடுத்ததால் சிங்கள விஜயன் பரம்பரையினர் நமது மண்ணில் தங்கிவிடும் தவறு நிகழ்ந்து விட்டது. தாரதத்தனும் அவருடன் சேர்ந்த கூட்டத்தினரும் நாகதீபத்திற்கு வந்தனர் இடையில் காடடர்ந்து கிடந்த இப்பிரதேசத்தில் தங்கினர். அவர்கள் வாழ்ந்த பிரதேசம் தாமிர வர்ணத்தில் இருந்தது. இவர்கள் புதிதாகக் குடியேறிய இந்த மண் பொன்னிறத்தில்இருந்தது, பொன் என்றால் ஈழம்... இது ஈழவூராயிற்று... அவற்றினை எண்ணிக்கொண்டேன், குத்த,"

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். தாரதத்தர் தனக்கென ஒரு இராட்சியத்தையே தாபித்துக் கொண்டார்"

நண்பா, இந்தக் கடல் ஏரியில் வலசை வருகின்ற வெளித்தேசத்துப் பறவைகளை எனக்குப் பிடிக்கும். அவை இந்த ஏரியை ஆக்கிரமிப்பதில்லை. ஆனால் எங்கிருந்தோ வந்த ஆரிய சிங்களவர் எங்கள் இலங்காபுரியை ஆக்கிரமித்துக் கொண்டனர். அவர்கள் கணிப்பில் நாங்கள் நாகர்கள்.... இயக்கர்கள்.... இராத்தசதர்கள்.... அமானுஸ்யர்கள்.... உனக்கு நினைவீருக்கிறதா, குத்த, நானும் நீயும் அனுராதபுரத்து அரச சபையில் மூதாதையரின் நமது பிரதேசத்தை ஆக்கிரமித்து இன்று மன்னனாக ஆண்டு வரும் சிங்கள சூரதீசனைச் சந்தித்தமை அவன் சொன்ன வார்த்தைகள்... பேசிய பேச்சுகள்..."

அவை இலகுவில் மறக்கக்கூடியவையா? .....' என்றான் நாககுத்தன்,

2

கதம்ப நதிக்கரையோரமாக அவர்கள் இருவரும் பயணப்பட்டு மகாவில்லாட்சியை வந்தடைந்தனர். அவர்கள் இருவரையும் சுமந்து வந்த குதிரைகள் மிக உயர்ந்த சாதியின. அப்பிரதேசத்தில் முன்னர் அவ்வளவு கம்பீரமான குதிரைகள் இருக்கவில்லை, என்குமாப்போல அவற்றினைத் தேர்ந்தெடுத்திருந்தனர். காரணம் இருந்தது.

பழுப்பு நிறமான அந்த இரு குதிரைகளும் ஒரே மாதிரியான தோற்றப்பொலிவினைக் கொண்டிருந்தன. அவற்றின் உறுதியான உடல்களும் வலுவான கால்களும் அவற்றின் திறனுக்குக் கட்டியம் கூறின. கழுத்தின் மேற்புறத்துப் பிடரிமயிர்ப் பீலிகளும் சிக்கின்றித் தோகையாகத் தொங்கிய வால் அமைப்பும் அப்புரவிகளின் கம்பீரத்துக்குச் சாட்சி பகன்றன. பின்னங்கால்களில் குளம்பிலிருந்து அரைஞான் உயரத்துக்கு வெண்ணிறமான மயிர்கள் வளர்ந்திருந்தன. அவை அவற்றின் எழிலிற்கு மெருகூட்டின. எண்ணெய் பூசியதுபோன்று அவற்றின் உடல்கள் பளபளத்தன. நீண்டதூரம் பயணம் செய்தும் அவை வாயில் நுரைகக்காது சீராக ஓடின. தாளலயத்தோடு அவை குள்ம்படிகள் ஒலித்தன. குத்தென உயர்ந்து நின்ற செவிகள் ஒலி வரும் திற்கிற்குத் திரும்பி ஒலிகளையும் தம்மீது அமர்ந்திருந்த எசமானின் உத்தரவுகளையும் கிரகித்துச் செயற்பட்டன.

**'உத்தரதேசத்து தெமிளுகள் அவர்கள் எங்களுக்கு ஓயாது தொல்லை தருகிறார்கள். ஒருகாலத்தில் அவர்கள் இங்கெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதற்காக இந்தநாடு முழுவதும் அவர்களுக்கென உரிமை கோர முடியுமா?'**

அவர்கள் இருவரும் அனுராதபுரத்துக்குள் பிரவேசிக்கும் முன்னர் மகா வில்லாச்சியில் தடுக்கப்பட்டனர். எல்லைப் புறச் சிங்களக் காவல் வீரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"இந்தியாவிலிருந்து"

"மகாதீர்த்த வழியாகவா?"

"ஆமாம், மாதோட்ட மூடாக..."


"நோக்கம்?"

"ஊர் பார்ப்பதற்கு அல்ல, நாங்கள் வியாபாரிகள். குதிரை வியாபாரிகள். மன்னரைக் காணச் செல்கின்றோம். எதிர்வரும் வாடையில் எங்களதுRகப்பல்கள் குதிரைகளுடன் இங்கு வரவிருக்கின்றன.

**மிகுதி அடுத்த இதழில்....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமைச் செயலகம்,
தமிழீழம்.
19. 04. 1992

**எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,**

மனித வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத, எவருமே சாதித்திராத, மகத்தான மனித அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது விடுதலைப் போராட்டம் புகழீட்டி நிற்கிறது. இந்த அற்புதமான தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னதமான, தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப்பிறவியும் சரித்திரத்தைப் படைக்கமுடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத்திற்காக, தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக் கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர் அசாதாரண சாதனையைப் புரிந்து தேசியத்தாய் என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தார்.

அறப் போரிலும் சரி, ஆயுதப் போரிலும் சரி எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகிறது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கிறது.
அகிம்சையின் அறத்தையும் ஆன்மீக தர்மத்தையும் போதித்துவந்த பாரதநாடு, ஆக்கிரமிப்புப் பூதமாக, அன்றொருநாள், எம் மண்மீது கால் மிதித்தது. அப்பொழுது, எமது போராளி ஒருவன் பாரதத்தின் ஆன்மீக மரபில் அறப்போரைத் தொடுத்தான். காந்தி அடிகளின் சாத்வீக தத்துவத்தை பாரத நாட்டிற்கு புகட்டிக்காட்ட விரும்பினான். ஆன்மீக உறுதிப்பாட்டின் அதியுயர்ந்த அர்ப்பணிப்பாக அவனது உயிர்த்தியாகம் அமைந்தது. திலீபனின் தியாகம் காந்தியின் அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயற்பாட்டு வடிவம் கொடுத்தது. பாரதத்தில் மடிந்துபோன ஆன்மீகம் தமிழீழத்தில் புதுப்பொலிவுடன் புரட்சி வடிவத்தில் மறுபிறப்பு எடுத்தது.
திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது. தமிழீழ தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியது. இந்த தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னையின் அறப்போர் அமைந்தது.

அந்த வயோதிபத் தாய் நீதியின் நெருப்பில் தன்னை எரித்துக் கொண்டாள். அந்தத் தீ, என்றும் அணையாத சுதந்திர தீபமாக, எம்முன் இன்றும் எரிந்து கொண்டு இருக்கிறது.

தேசிய விடுதலையை முன்னெடுக்கும் புரட்சிகர இயக்கம் என்ற ரீதியில் புலிகள் இயக்கமானது காலத்திற்குக் காலம், வரலாற்றுத் தேவைகளுக்கு ஏற்ப, புதிய போராட்ட உத்திகளை அறிமுகம் செய்திருக்கிறது. அத்துடன் அந்தப் போராட்ட முறைக்கு முன்னுதாரணமாகவும், இலக்கணமாகவும் திகழ்ந்து அற்புதமான அர்ப்பணிப்புக்களையும் செய்துள்ளது. இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படும் உலகிற்கு ஒரு முன்மாதிரியாக, வழிகாட்டியாக திகழ்வதற்கும் இந்த தனித்துவமான பண்புகள் தான் காரணம்.
போர் முறையில் நாம் காட்டும் தீவிர அக்கறை போன்றுதான் சமாதான வழிமுறையிலும் நாம் நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடித்தோம். பல தடவைகள் போர் நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுக்களில் பங்குகொண்டோம். இன்றும் சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்துவிட்டிருக்கிறோம்.

எனினும், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் தயாராக இல்லை. மனித தர்மத்தின் அடிப்படையில் தமிழருக்கு நீதியும் நியாயமும் வழங்க சிங்கள தேசம் தயாராக இல்லை. ஆயுதபலம் மூலம் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டவேண்டும், தமிழினத்தைத் துப்பாக்கிமுனையில் பணிய வைக்கவேண்டும், தமிழரின் தாய்மண்ணை பலவந்தமாகப் பறித்தெடுக்க வேண்டும் என்ற பழைய அடக்குமுறைப் பாதையை சிங்கள ஆளும் வர்க்கம் கைவிட்டதாகத் தெரியவில்லை.

தமிழரின் பிரச்சனை குறித்து சிங்கள அரசியல் உலகில் எவ்வித அடிப்படையான மனமாற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த ஒரு நீண்ட முடிவில்லாத சோக வரலாற்றைத் தழுவிநிற்கும் எமது மக்களின் துயரநிலைபற்றி சிங்களவாதிகள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. முப்பதினாயிரம் அப்பாவித் தமிழரின் பிணக்குவியல்கள் மீது மேடையமைத்து சிங்களப் பேரினவாதம் மிகவும் அதர்மமாக அநாகரிகமான அரசியலை நடத்திவருகிறது.
ஒரு புறம் யுத்தத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி, புலிகள் மீது நெருக்குதல் போட்டு ஒரு தீர்வைத் திணித்துவிடலாம் என சிங்கள அரசு எண்ணுகிறது. போரும் பேச்சும் என்ற இந்த இரட்டை வேட அணுகுமுறையை எமது விடுதலை இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. தமிழீழ மண்மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு, தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொன்று குவிக்கப்பட்டால் நாம் திறந்துவைத்திருக்கும் சமாதானக்கதவு மூடப்பட்டுவிடும் என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நாம் சமாதான மார்க்கத்திற்கு விரோதிகள் அல்லர், ஆனால் சமாதான அணுகுமுறை என்பது எமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும் விட்டுக்கொடுக்கும் விவகாரம் அல்ல. எனினும் எமது மக்களின் உரிமையை வென்றெடுக்கமுடியுமானல், எமது மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க முடியுமானல், சமாதான வழிமுறையை நாம் தழுவிக்கொள்ளத் தயார். ஆனால் எமது எதிரியோ சமாதான அணுகுமுறையை ஒரு அரசியல் பொறியாகக் கையாள விரும்புகிறான். எனவே, எதிரியின் தந்திரோபாயத்தில் நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

இன்று நாம் மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்புமுனையை சந்தித்து நிற்கிறோம். எதிரி எம்மீது படைகொண்டு தாக்கலாம். புதிய ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடரலாம். எது நிகழ்ந்தாலும், எதற்கும் அஞ்சாத துணிவும் உறுதியும் எம்மிடமுள்ளவரை எந்த சக்தியாலும் எம்மை வென்றுவிடமுடியாது. ஒரு சத்திய யுத்தத்தில் தர்மமே வெற்றிகொள்ளும் என்பது வரலாற்று உண்மை.

இன்றைய, இப் புனித நாளில், அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

இப்படிக்கு,

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# இலங்கைத் தீவின் வரலாறு

இலங்கைக்கு ஆரியர் வந்தமைக்கும் இவர்களிலிருந்து சிங்கள இனம் உருவாகியமைக்கும் எவ்வித தொல்லியற் சான்றுகளுமில்லை. மாறாக இலங்கை, யின் சிங்களப் பண்பாடு தென்னாசியப் பொதுமைக்குள் தென்னிந்திய திராவிடப் பண்பாட்டின் ஒரு பகுதியென்றும் நேர்மையான பல சிங்கள வரலாற்றாசிரியர்களாலேயே ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இலங்கையின் உண்மையான வரலாறு எவ்வாறெனில் இன்று தீவகவுள்ள இலங்கை 7000 ஆண்டுகளுக்கு முன்புவரை இலங்கையின் மன்னார்ப் பகுதியையும் தென்னிந்தியாவின் திருநெல்வேலி மாவட்டத்தையும் இணைக்கும் தரைவழிப் பாதையைக் கொண்டிருந்தது. கி. மு. 50,000 ஆண்டளவில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு முதல் முறையாக மிருகங்கள் கால் நடையாக வந்து சேர்ந்தன. இதற்குரிய தொல்லியற்சான்றுகள் சிங்கள வரலாற்று ஆசிரியர்களாற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி. மு. 28,000 ஆண்டளவில் இதே திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கால் நடையாக முதல் முறையாக இலங்கைக்கு மனிதன் வந்தான். இவனே இலங்கையின் ஆதி மனிதனாவான். இம்மனிதன் பண்பாட்டைக் குறுணிக் கற்காலப் பண்பாடென்று வகைப் படுத்தியுள்ளனர். இக்குறுணிக் கற்காலப் பண்பாடு திருநெல்வேலி மாவட்டத்தில் கி. மு. 32,000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்குறுணிக் கற்காலப் பண்பாடு யாழ்ப்பாணக்குடாநாடு தவிர்ந்த ஏனைய பாகங்களிற் பரவியிருந்தது. இப்பண்பாட்டுக்குரிய கற்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இல்லாமையால் இங்கு இம்மனிதன் குடியேறாமலும், பண்பாடு பரவாமலும் விட்டமைக்குக் காரணமாயிருந்திருக்கலாம்.

ஏறத்தாழ 7000 ஆண்டுகளுக்கு முன் கடல் மட்டம் உயர்ந்ததால் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான தரைப் பாலம் அற்றுப் போனது. இதன் பின் இலங்கையின் குறுணிக்கற் காலப் பண்பாடு தென்னிந்தியாவுடன் தொடர்பின்றித் தனிமைப் பட்டது. ஏறக்குறைய 4000 ஆண்டுகள் இலங்கை தென்னிந்தியாவிலிருந்து தனிமைப்பட்டது. பின்னர் கடல்வழிப் பிரயாண வசதிகள் வளர்ச்சியடையவே மீண்டும் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையேயான தொடர்புகள் கி. மு. 1000 ஆம் ஆண்டளவில் ஏற்படத் தொடங்கியது.
தென்னிந்தியாவிற்கே பிரத்தியேகமான பெரும்கற்காலப் பண்பாடு எனப்படும் ஓர் பண்பாடு கி. மு. 1000 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வரத்தொடங்கியது. பொன்பரிப்பு கதிரவெளி, யாழ்ப்பாணம் என இலங்கை எங்கணும் பரவலாகப் பெருங்கற் காலப் பண்பாடு பரவத் தொடங்கியது. இக்காலத்தில் தான் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாகக் குடியேற்றம் நிகழத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து இலங்கையில் அரசுகள் தோன்றின. தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய அரசுகள் போன்று இலங்கையிலும் அரசு என்ற நிறுவனம் அனைவருக்கும் பொதுவானதொரு பெருங்கற் காலப் பண்பாட்டடிப்படையில் கந்தரோடை, அனுராதபுரம், மகாகம என்னும் இடங்களில் தோற்றம் பெற்றன.

நன்றி இலங்கைத் தீவின் இனங்கள் இனப்பிரச்சினை என்பன பற்றிய ஒரு வராற்று அறிமுகம்.

* ஆட்கடத்தல் * கொலை * கொள்ளை

# முஸ்லீம் ஆயுத கும்பல்களால் மட்டக்களப்பில் பதற்ற நிலை

• தமிழர்கள் காடுகளில் தஞ்சம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லீம் ஆயுதக் கும்பல்களின் அடாவடித்தனங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் இப் பகுதியில் தமிழ் -முஸ்லீம் மக்களிடையே பெரும்பதற்ற நிலை உருவாகியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.
ஆயுதம் தாங்கிய முஸ்லீம் காடையர்களும், முஸ்லீம் ஊர் காவற்படையினரும் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை போன்ற வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுவருவதால் தமிழ் மக்கள் வெளியில் நடமாட அஞ்சுகின்றனர் என்றும் பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் காடுகளில் தஞ்சம் அடைந்து இருப்பதாகவும் இச் செய்திகள் மேலும் கூறுகின்றன.

அண்மைக் காலத்தில் மட்டக் களப்பில் முஸ்லீம் ஊர்காவற் படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன. தமிழர்களைக் கடத்துதல், காணாமற் போதல், படுகொலை செய்தல், அவர்களின் பொருட்களைச் சூறையாடுதல் என்பனவற்றின் காரணமாக முஸ்லீம் -தமிழ் மக்களிடையில் பதற்ற நிலை அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ் அடாவடித் தனங்களில் ஈடுபட்ட முஸ்லீம் ஆயுதக் கும்பல்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியும் வந்தனர். முஸ்லீம் ஊர் காவற்படையினருக்கு மட்டுமல்ல முஸ்லீம் கிராமவாசிகளுக்கும் ஜிகாத் இயக்கத்தினருக்கும் இராணுவத்தினர் உதவி வழங்கி வந்தனர்.

கிழக்கில் முஸ்லீம் ஊர்காவற்படையின் அடாவடித்தனங்கள் பற்றி அண்மையில் சிறிலங்கா பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது ஆனால் முஸ்லீம் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதேவேளை முஸ்லீம் காடையர்களின் அடாவடித் தனங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இந் நிலையில் தற்பொழுது நெருக்கடி மேலும் தீவிரமாகியுள்ளதனால் தமிழ் மக்கள் வெளியில் நடமாட அச்சத்தினால், வீடுகளுக்குள்ளேயே முடங்கிப் போயுள்ளனர். முஸ்லீம் கிராமங்களை அண்டியுள்ள கிராமங்களில் உள்ள தமிழ் மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறி அண்மையிலுள்ள காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## கரும்புலி கப்டன் சிதம்பரம்



கப்பல் ஓட்டும் கலையில் புகழ் பெற்றவர்கள் வல்வெட்டித்துறை மக்கள். 1937ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவுக்கு "அன்னபூரணி" என்னும் பாய்க் கப்பலை ஓட்டிச் சென்ற வல்வை மக்களின் திறமையும் துணிச்சலும் எங்களது வரலாற்றில் நெஞ்சை நிமிர்த்திப் பெருமைப்படக் கூடிய விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கடற்பகுதியில் வீரச்சாவைச் சந்தித்தவர்களில்(குறிப்பாக படகோட்டிகள்) பெரும்பாலானோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களே. ஆக்கிரமிப்புப் படைகளுடனான போரில் காயமடைந்த போராளிகளைக் காக்கும் பொருட்டும், இராணுவதளபாட விநியோகத்திற்கும் கடற்பிரயாணங்களின் முக்கியத்துவம் எத்தகையது என்பது தமிழீழ மக்கள் அனைவருக்கும் தெரியும். திடீரென கடற்படையினர் எதிர்ப்பட்டால் மறைந்து கொள்ளவோ உருமறைப்புச் செய்யவோ முடியாத வகையில் போராளிகளுக்குப் பாதகமான முறையிலேயே நிலைமை இருக்கும். எனவே இப்பகுதிக்குள் சண்டித்தனத்துடன் சிறிலங்காவின் கடற்படைப் படகுகள் உறுமித்திரியும். இதற்குள்ளும் நம்பிக்கை, இலட்சியப்பிடிப்பு என்பவற்றை மட்டுமே பலமாகக் கொண்டு இயங்கி வருபவர்கள் தான் கடற்புலிகள். எங்களின் கடற்பகுதியை மீட்டெடுக்க உருவாக்கப்பட்ட இந்தக் கடற்புலிகள் அமைப்பில் தான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிதம்பரமும் விடுதலைப்பணியாற்றிக் கொண்டிருந்தான்.

1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி பெரிய தம்பி -சற்குணதேவி தம்பதியினரின் ஆறாவது மகனாகப் பிறந்தவன் இவன். இவனுக்கு சந்திரன் என்று பெயரிட்டனர் அவர்கள். தற்போது விமானக் குண்டு வீச்சினால் சிதைவுற்றிருக்கும் வல்வெட்டித்துறை சிவகுரு மகாவித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பு கரை கல்விகற்ற இவன் குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக படிப்பை நிறுத்திக் கடற்றொழிலில் ஈடுபட்டான். அக்காலகட்டத்தில் இன்று மனித உரிமை பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருக்கும் அத்துலத்முதலி கடல் பாதுகாப்பு வலயச் சட்டத்தை தீவிரமாக அமுல்படுத்திக் கொண்டிருந்தார். வயிற்றுப் பிழைப்புக்காக கடற்றொழிலில் ஈடுபடும் நேரத்தில் -சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படும் மீனவரை அவரது 'லங்காபுவத்' பயங்கரவாதிகளெனத் தீர்ப்பளிக்கும். இக்காலத்தில் பயணிகள் படகு ஒன்றின் மீது கடற்படையினர் மேற்கொண்ட படுகொலை மிகப்பயங்கரமானது. எனினும் குடும்பத்தின் நிலை கருதி அபாயத்தின் மத்தியில் இரவில் மட்டும் தொழில் செய்வர் கடற்றொழிலாளர்கள். அவர்களில் ஒருவனாக இருந்தவன் சந்திரன்.

இக்காலகட்டத்தில் ஒரு பௌர்ணமி இரவு -மீன் பிடித்துக் கொண்டிருந்த கட்டுமரங்களை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது சிறிலங்கா கடற்படையினரின் படகு ஒன்று. அது நெருங்க நெருங்க கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை மரணபயம் ஆட்கொண்டது. அவர்கள் கட்டுமரங்களை கரையை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தனர். எவ்வளவு தான் விரைந்து வலித்தாலும் தப்பமுடியாத சூழ்நிலை. கடற்படையினரின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது. ஆனாலும் வலித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் அந்த கடற்படைப் படகு இவர்களை அண்மித்து விட்டது. அவர்களது குரல் உரத்துக் கேட்டது இவனுக்கு -"கொட்டியா". தன்னுடன் கட்டுமரத்தில் தொழில் செய்து கொண்டிருந்த சந்திரன் தன்னுடனிருந்த வயோதிபரை நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலும் அவனது மனதில் ஒரு கேள்வி பிறந்தது. "இவருமா?"

இவர்கள் ஏதும் பதில் சொல்லும் முன்னரே கடற்படையினரின் முறுக்குக் கயிறுகள் இவன் முதுகில் வலியுடன் வரிகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அந்த வரிகளே எதிர்காலத்தில் ஒரு வரிப்புலியை -அதுவும் கரும்புலியை உருவாக்கப்போகின்றது என்பது தெரியாமல் அடித்துக் கொண்டிருந்தனர் அவர்கள். கடலில் ஒரு புலி பிறப்பெடுத்துக் கொண்டிருந்தான். அவனுள் இயல்பாகவே இருந்த விடுதலை உணர்வு அக்காலகட்டத்தில் அவனிடம் இருந்த குடும்பத்தின் வறுமை நிலைமையைப் பற்றிய உணர்வைவிட மேலோங்குவதற்கு இச்சம்பவம் பிள்ளையார் சுழிபோட்டு வைத்தது.

பின்னர் இந்திய இராணுவம் வல்வெட்டித்துறையில் நிகழ்த்திய கோரத் தாண்டவம் இவன் ஒரு முழு நேரப் போராளியாக உருவாகும் நாளை விரைவுபடுத்தியது. பின்னாளில் உறுப்பினர் விபரம் என்ற சுய விபரக் கோவையில் இயக்கத்தில் இணைந்த திகதி என்று குறிப்பிடப்பட்ட இடத்தில் 1989 ஆகஸ்ட் 12 என குறிப்பிட்டான் இவன்.

இந்தியப் படையினர் எமது மண்ணை விட்டகன்றதன் பின்னர் சிறிது கால இடைவெளியில் சிறிலங்காப் படையினருடனான போர் ஆரம்பித்தது. இவன் பலாலி முகாம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டான். இராணுவத்தை வெளியேறவிடாது தடுக்கும் தாக்குதல்கள் பலவற்றில் பங்கு பற்றினான். பின்னர் இவன் வடமராட்சிப் பகுதியில் கடமையாற்ற அழைக்கப்பட்டான். அப்போதெல்லாம் எமது கடலில் சுதந்திரமாக சண்டித்தனமான முறையில் இரைச்சலுடன் சென்று கொண்டிருக்கும் கடற்படைப்படகுகளை காணும் போது இவனுக்கு பழைய நினைவுகளெல்லாம் எழும். கடற்படையினருக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் பங்கு பற்ற கிடைத்த சந்தர்ப்பங்கள் இவனது ஆத்திரத்தைப் பொறுத்தவரை யானைப் பசிக்கு சோளப்பொரி போலவே இருந்தன. மனநிறைவான தாக்குதலுக்கு சந்தர்ப்பம் கிடைக்காதா என ஏங்கிக் கொண்டிருந்தான்.

1991 ஜனவரி 23 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித்துறை கடல் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிரான தாக்குதல் ஒன்றுக்காக சில முன் முயற்சிகளை மேற்கொண்டு விட்டு கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர், சிதம்பரமும் அவனது நண்பர்களும். அவர்களை நோக்கி விரைந்து வந்தது கடற்படைக் கப்பலொன்று. இவர்களருகே வந்ததும் கடலுக்கு வந்த காரணத்தையறிய அதட்டினார்கள் அவர்கள். மீன் பிடிக்க வந்ததாக பதில் அளித்தான் சிதம்பரம். சுற்றுப் பகுதியெங்கும் மீன் பிடிப்படகுகள் நின்று கொண்டிருந்தன. இவனது தோற்றம் அவர்களுக்கு சந்தேகத்தை உண்டாக்கவில்லை. அவன் அப்பாவிப் பொதுமகனாக இருந்த போது அதை நம்பமறுத்து அவ்னை அடித்த கடற்படையினர் 'அவன் போராளியாக அதுவும் அவர்களுக்கெதிரான தாக்குதல்களுக்கான தயாரிப்புக்குச் செல்கையில் அவன் பொதுமகனாக இருக்கலாம் என கருதி அங்கிருந்து விலகிச் சென்றனர்.

1991ம் ஆண்டு மார்ச் 13ம் திகதி நண்பகல் 12 மணி மீண்டும் அதே கடல் பகுதியில் சிறிலங்காவின் கடற்படையினரின் விசைப்படகொன்று சிதம்பரமும் அவனது நண்பர்களும் சென்று கொண்டிருந்த சிறிய படகொன்றை துரத்திக் கொண்டு வந்து கொண்டிருந்தது. அது வரை அமைதியாக அப்பாவி போல் செயல்பட்டுக் கொண்டிருந்த சிதம்பரம், சுமார் 150 யார் தூரத்தில் அவ்விசைப்படகு வந்ததும் தன்னிடமிருந்த எஸ். எல். ஆர். துப்பாக்கியினால் கடற்படையினர் மீது தாக்குதல் தொடுத்தான். அவர்களிடமோ அதி நவீன ஆயுதங்கள் தாராளமான ரவைகள். இவர்களிடமோ ஒரே ஒரு எஸ். எல். ஆர். அதிசயிக்கும் விதமாக அந்த கடற்சண்டையில் சிதம்பரத்துக்கோ அவனது நண்பர்களுக்கோ சேதமெதுவும் ஏற்படவில்லை. சிறிலங்கா கடற்படையில் மூவர் காயமடைந்தனர். படைபலம் பெரிதல்ல, மனோ பலம் தான் பெரிது என்பதை பட்டப்பகலில் நிகழ்ந்த அந்தக் கடற்சண்டை அவர்களுக்கு உணர்த்தியது.

என்ன தான் சண்டையென்றாலும் -கரும்புலியாகப் போகும் சந்தர்ப்பம் -அதுவும் தான் நேசிக்கும் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் கடற்படைக் கப்பலை அழிக்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டுக் கொண்டிருந்த இலட்சியம் நிறைவேறுவதற்கும் ஒரு நாள் கிடைத்தது. 1991 ம் ஆண்டு மார்ச் மாதம் இப்பணியை மேற்கொள்ளும் வாய்ப்பு இவனுக்கும் இவனது நண்பன் ஜெயந்தனுக்கும் கிடைத்தது. வல்வெட்டித்துறையிலிருந்து கடற்படை கப்பல் மீதான தாக்குதலுக்கு செல்லும் மூன்றாவது கரும்புலியான இவனும் ஜெயந்தனும் வெடிமருந்து நிரம்பிய படகில் சென்று சிறிலங்கா கடற்படையினரின் தாய்க்கப்பலொன்றுடன் மோதினர். அதிலிருந்த பல சிறிலங்கா கடற்படையினர் மாண்டனர். அவன் நேசித்த அவன் தொழில் செய்த தமிழீழக்கடல் அவனதும், ஜெயந்தனதும் சதைகளை உள்வாங்கிக் கொண்டது. அன்று நொருங்கியது சிறிலங்கா கடற்படை கப்பல் மட்டுமல்ல. படைப்பலத்தால் இக்கடற்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துவிடலாம் என்ற ஆக்கிரமிப்பாளர்களின் கனவுகள் திமிர் எல்லாமே தான்.

இன்று எமது மண்ணில் கடற்புலிகள் அமைப்பு வளர்ச்சியடைந்து விட்டது. இவனைப் போன்ற மாவீரர்களின் உழைப்பினாலும், தியாகத்தினாலும் அதன் பெருமை உலகுக்கு உணர்த்தப்படுகிறது. கடற்புலிகளின் சாதனைகளைக் கண்டு ஏனைய தமிழீழ மக்களைப் போலவே பெருமை கொள்கின்றனர், வல்வெட்டித்துறை மக்கள். அந்த மண்ணில் "எங்களின் கடலிலே எவன் எம்மைத் தடுப்பவன்" என்ற பாடல் ஓங்கி ஒலிக்கிறது.

-தம்பி-

## 'தமிழரின் சமூக வரலாறு இன்னும் எழுதப்படவில்லை

"யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்" என்ற நூல் அறிமுக விழா அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. திரு. சிவத்தம்பி, திரு. மு. திருநாவுக்கரசு ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்தினர். மு. தி. தனது உரையில் இன்றைய காலகட்டத்தில் மேற்படி நூல் வெளியானதை வரவேற்றார். மேலும் நூலில் விபுலானந்தர் பற்றிய பார்வையை விட யாழ்ப்பாண சமூகத்தைப் பற்றியே தூக்கலா உள்ளது எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணச் சமூகத்தினுள் புதிய சிந்தனைகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தாராண்மை வாதியான கன்டி பேரின்பநாயகத்தினாலும், இராமகிருஸ்ண மடத்தின் செல்வாக்கிற்குட்பட்ட விபுலாந்தராலுமே கொண்டுவரப்பட்டதை எடுத்துக் காட்டினார். யாழ்ப்பாணச் சமூகச் சூழலைப் பற்றி அவர் தொடர்கையில் சாதி, மத பேதங்களைக் கடந்த பரந்த இந்து மதப் பார்வையைக் கொண்டிருந்த இராமகிருஸ்ண மட மிசனும், கன்டிபேரின்பநாயகமும், விபுலானந்தரும் இங்கு வேர்விடமுடியாமல் போனதைச் சுட்டிக் காட்டினார். விபுலானந்தர் ஒரு சித்தர் என நூலாசிரியர் குறிப்பிட்டதைப் பற்றி மேலும் ஆராயப்பட வேண்டும் மு. தி என கூறினார்.

அடுத்து சிவத்தம்பி விமர்சனம் செய்கையில் நூலிற்கு இருக்கக் கூடிய சமூகப் பரிமாணத்தை எடுத்து விளக்கியதுடன் தமிழ் மக்களின் வரலாறு சரிவர எழுதப்படாததன் குறையையும் எடுத்து விளக்கினார். தமிழரின் சமூக வரலாறு இன்னமும் எழுதப்படவில்லை எனக் குறிப்பிட்டார். உண்மையில் வரலாறு என்பது மக்கள் கூட்டத்தின் பழக்க வழக்கங்களையோ ஆடை ஆபரணங்களையோ பற்றிய விபரணமல்ல. மாறாகச் சமூக அசைவியக்கத்தை வெளியில் கொண்டு வருவதே வரலாறு ஆகும். மேலும் ஒல்லாந்தர் காலகட்ட வரலாற்று ஆவணங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதென்றார் மு. தி. குறிப்பிட்ட விபுலானந்தர் சித்தரா என்ற விடயம் பற்றி சிவத்தம்பி கருத்துத் தெரிவிக்கையில் பல்வேறு ஆதாரங்களை எடுத்துக்காட்டி விபுலானந்தர் ஒரு சித்தர் அல்ல என வலியுறுத்திக் கூறினார்.

## கடும் யுத்தத்துக்கும் நடுவிலும் மணலாற்றில் சிங்களக் குடியேற்றம்

கடுமையான யுத்தத்தை எதிர் கொண்டு கொண்டிருக்கும் மணலாறு பிரதேசத்தில் இந்த யுத்தத்திற்கு நடுவிலும் சிங்கள குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கை 65 இலிருந்து 3000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

1957ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் 1965ல் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் மரபுவழித்தாயக கோட்பாட்டை ஏற்றுக்கொண்டனர். ஆயினும் காலத்துக்கு காலம் சிங்கள குடியேற்றங்களை வெற்றிகரமாக நடத்துவதன் மூலம் தமிழர்களின் சனத்தொகை அடர்த்தியையும் விகிதாசாரத்தையும் திட்டமிட்டுக் குறைத்து வருவதில் சிங்கள பெரும்பான்மைக் கட்சிகள் ஒருமித்தே செயற்படுகின்றன.

கடும் யுத்தம் நடைபெறும் மணலாறு பகுதியில் இராணுவத்துணையுடன் சிங்கள காடையரையும் குற்றவாளிகளையும் குடியேற்றியுள்ளனர். இவர்களை ஆயுதப் படுத்துவதன் மூலம் தமிழருக்கெதிரான ஒரு கொலைப் படையாகவும் இவர்களை உருமாற்றுவதே சிங்கள அரசின் நோக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணை நாம் காக்கிறோம் கலையை நீங்கள் காக்கிறீர்கள்

■ கலைஞர்களுக்கு விசு பாராட்டு

"நாம் ஆயுதம் ஏந்தித் தமிழ் மண்ணையும், மக்களையும் பாதுகாத்து வருகின்றோம். கலைஞர்கள் தமிழ்க்கலைகளையும், பண்பாட்டையும் கட்டிக் காத்து வருகின்றனர். இக்கலைஞர்களை விடுதலைப்புலிகளாகிய நாம் பெரிதும் மதிக்கின்றோம், போற்றுகின்றோம், பாராட்டுகின்றோம்" இவ்வாறு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற இரண்டாம் நாள் தமிழிசை விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. விசு அவர்கள் கூறினார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது சிறிலங்கா இராணுவத்தினரது கொடூரத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் தென் தமிழீழக் கலைஞர்கள் இவ்விசைவிழாவில் பங்குபற்றமுடியாத நிலையையிட்டு கவலை தெரிவித்தார்.

இன்று வடக்கில் நடாத்தப்பட்டுவரும் தமிழிசை விழா போன்று தென் தமிழீழத்திலும் விழாக்களை நடாத்துவதற்குரிய நிலைமையை நாம் உருவாக்குவோம் என்றும், இதற்கு அனைத்து மக்களது பங்களிப்பும் அவசியம் என்றும் அவர் கூறினார்.



# பல்லாயிரம் மக்கள் திரண்ட தமிழிசைப் பெருவிழா

தமிழீழத்தின் கலைஞர்களை ஒன்றிணைத்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட தமிழிசை விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டாவது நாளாக நடைபெற்ற விழாவிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு வந்திருந்தனர். விழாவையொட்டி நல்லூர் கந்தசுவாமி ஆலயமைதானம் வர்ணமின் விளக்குகளால் சிறப்புற அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாலை 5 மணியளவில் மங்கள இசையுடன் இவ்விழா ஆரம்பமாகியது. தொடர்ந்து இரு இசை நிகழ்ச்சிகளை அடுத்து சிறப்பு விருந்தினர் உரை இடம்பெற்றது.

திரு. சி. வி. கே. சிவஞானம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. விசு யாழ். மாவட்டத் தளபதி திரு. செல்வராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து விசேட இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

# புல்லுமலையில் சுற்றிவளைப்பு ஒருவர் பலி; 6 பேரை காணவில்லை

மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலைக் கிராமத்தைச்சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு அப்பாவித் தமிழ் மகனை வெட்டிக் கொன்றதுடன் பத்துப்பேரை கைது செய்துள்ளனர். மேலும் ஆறுபேரை காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: அதிகாலை பெரிய புல்லுமலை, அரந்தலாவை, 19ம் கட்டை, உன்னிச்சை ஆகிய நான்கு இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் புல்லுமலைக் கொலனியைச் சுற்றி வளைத்து ஒருவரை வெட்டிக் கொன்றுள்ளனர்.

'35ஆம் கிராமத்தைச் சேர்ந்த சரவணை என்பவரே இராணுவத்தினரால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டவராவார். சித்திரவேல்(புல்லுமலை), சுத்தா, அவரது மகன் சிறி, கருணாகரன், சொக்கலிங்கம், தங்கவடிவேல், சின்னவன், சசி, இராஜி ஆகியோர் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

அத்துடன் தங்கராஜா, நாகராஜா, அவரது மகன் சுரேஸ், கட்டையன், இரட்ணசிங்கம், தம்பி ஆகிய ஆறுபேர் இந்தச் சுற்றி வளைப்பின்போது காணாமல் போயுள்ளனர்.

# புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைகளும், குட்டிச் செயலகங்களும்

■ சிங்களக் குடியேற்றங்களை மேலும் தீவிரமாக்கும் திட்டமே! ■

உதவி அரசாங்க அதிபர்கள் பிரதேசச் செயலாளர்கள் எனவும், அவர்களின் பணிமனை பிரதேசச் செயலகம் (மினிக்கச்சேரி) எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது மிகச் சிறந்த ஒரு திட்டம் என சிங்கள அரசால் தொடர்ச்சியாக பாரிய பரப்புரைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் இத்திட்டம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக ஆபத்தான தொன்றாகும்.

அரசின் இந்த நடவடிக்கையினால் தமிழீழத்தின் எல்லைப் புறங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மேலும் அதிகரிக்கப்படவே வாய்ப்பு எற்படுத்தப்பட்டுள்ளது.

"கிழக்கு மாகாணத்தில் சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட ஒன்பது பிரதேச சபைகள் உள்ளன. அவற்றில் பின்தனைப் பற்று வடக்கு, பின்தனைப்பற்று தெற்கு, வேகம் பற்று வடக்கு, வேகம் பற்று தெற்கு, பான்மை பற்று ஆகிய பிரதேசங்கள் 90 சதவீதம் சிங்களவர்களைக் கொண்டவை" மேற்கண்டவாறு சிங்களப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் காமினி ஜயசூரிய, தொண்டமானின் சமரசத்திட்டத்தை எதிர்த்துக் கருத்துத் தெரிவிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

தென் தமிழீழம் எவ்வளவு தூரம் சிங்களமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மேற்படி கருத்து மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. தற்போதும் தென் தமிழீழத்தின் பல பகுதிகளிலும், வவுனியா தெற்கிலும் உள்ள பல தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரமாய் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் அவ்வப் பிரதேசச் செயலாளர்களான உதவி அரசாங்க அதிபர்களே மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறிலங்கா அரசின் இந்த நடைமுறையினால் சிங்களப் பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டிய ஒன்பது பிரதேசங்கள் மட்டுமன்றி மேலும் பல பிரதேசங்கள் சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்டபகுதிகளாக மாறிவிடக் கூடிய ஆபத்தே உருவாகி உள்ளது. குறிப்பாக எமது எல்லைப் பிரதேசங்கள் முழுக்க முழுக்க சிங்களவர்களால் நிர்வகிக்கப்படும் செயலகங்களைக் கொண்டதாய் மாற்றப்படும் நிலையும், மேலும் வளம்மிக்க தமிழ்ப்பகுதிகள் தீவிரமாக சிங்கள மயப்படுத்தப்படும் நிலையும் ஏற்பட்டுவருகின்றன.

# சிங்கள, தமிழ் மக்களிடையிலான இன மோதல் அந்நிய ஊடுருவலையே அதிகரிக்கச்செய்யும்.

■ பௌத்த குழுவிடம் இந்து இளைஞர் பேரவை மகஜர்.

"புத்தபகவான் பஞ்சசீலக் கொள்கைகளின் பால் உயிர்கள் வருந்தாமையையும் அமைதியையும் சமாதானத்தையும் போதித்தார். யுத்தம் நடைபெறும் இடங்களுக்கும் உயிர்கள் வருந்துகின்ற இடங்களுக்கும் நேரில் சென்று அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தினார் என்பது வரலாறு. பிம்பிசாரமன்னனது யாகத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியிடுவதை புத்தபகவான் தடுத்தார் என்பதும் கலிங்கப்போரில் ஏற்பட்ட உயிரழிவுகளைக்கண்ட அசோகச்சக்கரவர்த்தி பௌத்தமதத்தை தழுவினார் என்பதும் முக்கியமான நிகழ்வுகளாக கருதப்படுகின்றன. இந்துமதம் உட்பட ஏனைய மதங்களும் அமைதியையும் சமாதனத்தையும் மேலாக நேசிக்கின்றன."

யாழ்ப்பாணம் வருகைதந்த பௌத்த நல்லெண்ணத்தூதுக் குழுவுக்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை சமர்ப்பித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டதாவது;

இந்தவகையில் புத்தபகவானது (பாதச்சுவடுகளை) பாதார விந்தங்களை பின்பற்றும் தங்களது அமைதிக்கும் சாமாதானத்திற்குமான பயணம் வெற்றியளிக்கவும், உயிர்கள் படும் துன்பங்கள் நீங்கவும், எல்லாம்வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

இத்தீவில் கலாச்சார பண்பாடுகளால் பெருமளவு ஒன்றுபட்ட தமிழ் சிங்கள மொழிகளைப்பேசும் மக்கள் தொன்று தொட்டு அமைதியுடனும் சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் சகோதரத்துவத்துடனும் அதே சமயம் தனித்துவத்துடனும் சிறப்புற்று வாழ்ந்து வந்தனர் என்பது வரலாறு. ஆரம்பகாலத்திலிருந்து இருமொழி பேசும் மக்களுக்கு இடையிலான மோதல்கள் மக்களிடையே அந்நிய அரசியல் பொருளாதார சமய கலாச்சார ரீதியன ஊடுருவல்களுக்கும், செல்வாக்கு செலுத்துகைக்கும் வழிவகுத்தன. போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பித்த பாதிப்புக்கள் துன்பதுயரங்கள் தமிழ் சிங்கள மொழிபேசும் மக்களுடைய தனித்துவத்தினையும் சிறப்பையும் சமாதானத்தையும் பாதித்து வருகின்றன.

அன்றிலிருந்து இன்றுவரை மக்கள் வேண்டியளவு இரத்தம் சிந்திவிட்டார்கள். பெருமளவு பௌத்த இந்து மதங்களைச் சார்ந்த மக்களும், ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களும் பலியாகி வருகின்றார்கள்.

இந்நிலையில் கீழ்காணும் விடயங்களை குறிப்பாக தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் ஏற்படக்கூடியதும் செயற்படுத்தக்கூடியதுமான நிலமையை ஏற்படுத்துவது, அப்பாவி உயிரின அழிவைத் தடுத்து அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துமென திடமான முறையில் வலியுறுத்துகிறோம்.

*. தினசரி பேரழிவுகளை ஏற்படுத்தி வரும் இந்த முடிவில்லா யுத்தம் தொடர்பாக, உடனடியாக யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். (விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே)

*. தமிழ்ப் பிரதேசங்களில் கணிசமான அளவு பகுதிகளை தமது. கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்துவதுடன் மட்டுமல்லாது மிகவும் துரிதமான முறையில் அதனை வெற்றிபெறச் செய்யவும், அத்தீர்வுகளை முன்னைய காலங்களைப் போலல்லாது காலந்தாழ்த்தாது திடமான முறையில் செயற்படுத்தவும் வழி வகுத்தல் வேண்டும்.

*. தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

*. இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்துள்ள நமது மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ வழிவகுத்தல் வேண்டும்.

*. பெருமளவு புனிதமான இந்து ஆலயங்கள் பூட்டப்பட்டும் வழிபாடற்றும் உள்ளன. அப்பகுதியிலுள்ள இராணுவ கெடுபிடிகள் அகற்றப்பட்டும் நீக்கப்பட்டும் மீண்டும் அவ்வாலயங்களில் நித்திய நைமித்திய கிரியைகள் வழிபாடுகள் நடைபெற வழிவகுத்தல் வேண்டும்.

*. கற்பூரம் உட்பட பூசைக்குரிய பொருட்கள் ஆலயத்துக்குத் தேவையான ஏனைய பொருட்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கான பொருளாதாரத் தடைகளை உடனே நீக்குதல் வேண்டும்.

மேற்கண்ட விடயங்களில் சாதகமான பலாபலன்கள் கிட்டுவதற்கான சுழ்நிலைகளை குறிப்பாக தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் ஏற்படுத்தி மக்களும் ஏனைய உயிர்களும் துன்பதுயரங்கள் நீங்கி அமையுடனும் சமத்துவத்துடனும் வாழ தாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடைய எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

# மேதின எழுச்சிப் பேரணி கெடுபிடி மத்தியில் சாதனை

தென் தமிழீழத்தில் மாபெரும் மே தின எழுச்சிப் பேரணிகளும், கூட்டங்களும் தமிழ் மக்களால் நடாத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவில்போரதீவு, அரசடித்தீவு, பன்னன்குடா ஆகிய மூன்று இடங்களில் ஆரம்பமான பேரணிகள் பழுகாமம், பண்டாரியாவெளி, கடுக்காமுனை, அம்பிலாந்துறை, மணற்பிட்டி ஆகிய கிராமங்களினூடாகச் சென்று தும்பன் கேணியில் முடிவடைந்தன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்ட இப்பேரணியின் முடிவில் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வெழுச்சிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் அவர்களும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. பாவேந்தர், மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு அம்பாறை -மட்டக்களப்பு துணை பொறுப்பாளர் திரு. தீசன், பிரதேசக் கல்விக்குழுப் பொறுப்பாளர் திரு. யோகா, வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பொறுப்பாளர் திரு. கௌசிக் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்வும் நினைவும்

-திலீபன்-

## ஒடுக்குமுறையா? சமூக அந்தஸ்தா? சீதனம் குறித்து ஒரு பார்வை

இவ் வாரத் தொடக்கத்தில் எனது நண்பர்கள் மத்தியில் நடந்த உரையாடலில் நானும் கலந்து கொண்டேன்.

இச் சந்திப்பில் 'சீதனப்பிரச்சினை' தொடர்பாக சற்றே சூடான வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. சீதனம் எமது சமூகத்திலிருந்து களைந்தெறியப்பட வேண்டிய ஒடுக்குமுறை வடிவம் என்பதில் அச்சந்திப்பில் கலந்து கொண்ட அனைவரிடமும் ஒருமித்த கருத்து இருந்தது.

அதேவேளை, 'சீதனம்' ஒரு ஒடுக்குமுறை வடிவம் என்பதனைக் கடந்து சமூக அந்தஸ்து எனும் வடிவம் எடுத்திருப்பது தொடர்பான கவலையும் இச் சந்திப்பில் வெளிப்படுத்தப்பட்டது.

சீதனம் வாங்கக் கூடாது என்ற உறுதியான கருத்தினைக் கொண்டுள்ள ஒருவரின் திருமணப் பேச்சில் நடந்த விடயங்கள் உதாரணத்துக்கு எடுக்கப்பட்டு விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

இவ் உதாரணம் சீதனம் வாங்கக் கூடாது என்ற கருத்தினைத் தம்மகத்தே கொண்டுள்ள பலருக்கும் பொருத்தமாக அமையும் என்றே கருதுகின்றேன்.

■ சாதி அமைப்பும் சீதன முறைமையும் நமது சமூகத்தினைப் பிடித்த இரு பெரும் பிசாசுகள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் இவைக்கெதிரான உணர்வுகளும் கருத்துக்களும் செயற்பாடுகளும் முனைப்படையத் தொடங்கின. எனினும், புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வும், மேலைத்தேய 'உழைப்பும்' சீதனப் பிரச்சினையில் புதிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. சீதனம் சமூக ஒடுக்குமுறை வடிவம் என்பதோடு மட்டுமன்றி சமூக அந்தஸ்துக்குரிய ஒரு வடிவம் என்ற நிலையினையும் எடுத்தமைக்கு மேலைத்தேய 'உழைப்பு' முக்கிய இடத்தினை வகிக்கிறது எனலாம். இச் சூழலில், சீதன முறைமையினை அறவே வெறுக்கும் எனது நண்பர்கள் மத்தியில் நடந்த உரையாடல் ஒன்றில் சீதனப் பிரச்சினை தொடர்பாக விவாதிக்கப்பட்ட உதாரணம் ஒன்றினை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இது தொடர்பான உங்கள் ஆரோக்கியமான கருத்துக்கள் எமது சமூகத்தை வளம் படுத்தும். ■

உதாரணத்தினை இலகுவாக விளக்குவதற்கு சீதனம் வாங்குவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டினைக் கொண்டவரின் பெயரைத் 'தமிழன்' என வைத்துக் கொள்வோம்.

தமிழனின் திருமணப் பேச்சு முயற்சிகளைத் தமிழனின் பெற்றோர் ஆரம்பித்தபோது சீதனம் என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது எனத் தமிழன் தனது பெற்றோரிடம் உறுதியாகக் கூறியிருந்தார்.

இதன் அடிப்படையில் பெற்றோரும் சீதனம் எனும் அம்சத்தினைப் பற்றிய பேச்சு எதுவுமின்றி தமிழரின் திருமணத்தினைப் பேசி முடிவு செய்தனர்.

திருமணம் முடிவு செய்யப்பட்ட போது பெண் வீட்டார் தமது பிள்ளைக்கென தாம் கட்டி வைத்த வீட்டினை பெண்ணின் பெயரில் எழுதி விடுவது என்ற முடிவினை எடுத்து, அதனைத் தமிழனின் பெற்றோருக்கு அறிவிக்கின்றனர்.

இதனை விட தமிழனுக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணின் சகோதரர்களும் தமது சகோதரியின் பெயரில் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்புச் செய்யப்போவதாகவும் தமிழனின் பெற்றோர்களுக்கு அறியத் தருகின்றனர்.

இவ் விடயத்தில், சீதனம் எதுவும் வாங்குவதில்லை என்ற கொள்கையினைத் தன்னகத்தே கொண்ட தமிழன் எத்தகைய முடிவினை எடுக்க முடியும்? பெண்ணின் பெற்றோர் தமது பிள்ளைக்கெனக் கட்டி வைத்து தமது பிள்ளைக்கு கையளிக்கும் வீட்டினை ஏற்றுக் கொள்ளலாமா?

பெண்ணின் சகோதரர்கள் தமது சகோதரியின் பெயரில் வைப்பிலிடும் தொகையினை 'சீதனம்' எனக் கருதி நிராகரிக்க வேண்டுமா?

இந்த விடயத்தினை அடிப்படையாகக் கொண்டே எமது உரையாடலும் வாதப் பிரதி வாதங்களும் அமைந்திருந்தன.

ஒரு குடும்பம் வாழ்வதற்கு ஒரு வீடு அவசியம் என்ற வகையில், தமது பிள்ளைக்கென பெற்றோர் கட்டி வைத்த வீட்டினை பிள்ளைக்கு வழங்கும் போது அதனை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை எனும் கருத்து இவ் உரையாடலில் கலந்து கொண்டவர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'வீடு வேண்டும்' என்ற நிபந்தனை எந்தவகையிலும் முன் வைக்கப் படாமையினாலும் சீதனம் எதுவும் தேவையில்லை என திருமணப் பேச்சில் கூறப்பட்டிருந்தமையாலும் இங்கு சீதனம் ஒடுக்குமுறை வடிவத்தினை எடுக்கவில்லை. எனவே வீட்டினை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்ற கருத்து வீட்டு விடயத்தில் முன் வைக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(இம் முடிவுடன் உடன்பாடில்லாத பலர் எம் மத்தியில் இருக்கக் கூடும். இவர்கள் கமது கருத்துக்களை 'நிகழ்வும் நினைவும்' பகுதிக்கு அனுப்பி வைக்குமாறு கோருகிறோம்.)

ஆனால், பெண்ணின் சகோதரர்கள் தமது சகோதரியின் பெயரில் வைப்பிலிடுவதாகக் கூறிய பணத்தினை தமிழன் ஏற்றுக் கொள்ளலாமா என்பதில் நண்பர்கள் மத்தியில் வாதப்பிரதி வாதங்கள் எழுந்தன.

"பெண்ணின் சகோதரர்கள் தமது சகோதரியின் பெயரில் ஒரு தொகையினை வைப்பிலிடுவது அவர்களின் உரிமை. அதனைத் தமிழன் எவ்வாறு தடுக்க முடியும்?"

"தமிழன் எவ்வித சீதனமும் கேட்காத போது சீதனம் என்ற ஒடுக்குமுறை இங்கு எழவில்லை. அதனால் சகோதரர்கள் சகோதரியின் பெயரில் வைப்பிலிடும் பணத்தில் தமிழன் தலையிடத் தேவையில்லை."

என்ற கருத்துக்களை ஒரு நண்பர் முன் வைத்த போது மற்றவர் இக் கருத்துக்களுடன் முரண்பட்டுக் கொண்டார்.

"வீடு என்பது, மனிதனின் உறைவிடத்துடன் தொடர்புடையது. ஏற்கனவே கட்டியுள்ள வீட்டினை பெற்றோர் பிள்ளைக்கு வழங்கும் நடைமுறையினை புரிந்து கொள்ளமுடியும். அதனை பண விடயத்துடன் ஒப்பிடமுடியாது.

என்ன பெயரிலும் திருமணத்தின் போது பணம் கொடுக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இது சீதனத்தின் "நாகரீகமான வடிவம்" என்ற கருத்தினை அவ் நண்பர் முன் வைத்தார். என்னாலும் திருமணத்தின் போது பணம் வழங்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இவ்விடயத்தில் தமிழனின் கருத்து என்னவாக இருந்தது என்ற கேள்வியினை நான் எழுப்பிய போது பதில் இப்படிக் கிடைத்தது.

தமிழனும் பணம் வழங்கப் படுவதனைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் இவ்வாறு பணம் வழங்கப்படுவது சீதனத்தின் நாகரீகமான வடிவம் எனக் கருதுவதாகவும் எனினும் உடனடியாக இது குறித்த தீர்மானம் எடுக்க முடியாதவராகத் தடுமாறுவதாகவும் அப் பதில் மூலம் அறிய முடிந்தது.

### ஏன்இந்தத் தடுமாற்றம்?

இங்கு தான் தமிழனுக்கு 'நிலை முரண்பாடு' (Role conflict -இம் மொழி பெயர்ப்பு சரியானதா என்பதில் சந்தேகம் உண்டு) ஏற்படுகின்றது.

தமிழனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் தரப்பார் பெண்ணை வெறுங்கையுடன் அனுப்புவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள்.

"நீங்கள் சீதனம் எதுவும் கேட்காவிட்டாலும் கூட ஒரு குறிப்பிட்ட தொகையினை தருவது தான் எமக்குப் பெருமை."

"பெண்ணை வெறுங்கையுடன் அனுப்புவது எமது குடும்பத்திற்கு கௌரவமில்லை."

"கல்யாணத்தின் போது குறிப்பிட்டளவு பணத்தினை பெண் வீட்டார் தரத்தானே வேண்டும்."

நாம் தரும் பணத்தைத் திருப்பித் தந்தால் எம்மை அவமதிப்பது போலாகும்."

இவை போன்ற வாதங்களை முன்வைத்து தாம் வழங்கவிருக்கும் பணத்தொகையினை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழனை பெண் தரப்பார் நிர்ப்பந்திக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில், தமிழனின் வேண்டுகோளை ஏற்று சீதனம் பற்றிய பேச்சின்றி மகனின் திருமணப் பேச்சுக்களை மேற்கொண்ட தமிழனின் பெற்றோரும் பெண் வீட்டார் தரும் தொகையினை நிராகரிக்க வேண்டாம் என தமிழனை கேட்கின்றனர்.

"நாம் எந்தவித சீதனத்தினையும் கேட்கவில்லை. இந்நிலையில் அவர்களாகத் தரும் தொகையினை நிராகரிக்கத் தேவையில்லை."

"எந்தவித பணமும் சீதனமாகப் பெறாமல் திருமணம் செய்தால் சமூகம் குறைவாகக் கருதும்."

இவை போன்ற வாதங்கள் தமிழனின் பெற்றோரால் முன் வைக்கப்பட்டதாம்.

இந்நிலையில், சீதனம் வாங்குவதில்லை என்ற கொள்கையினை நிலை நிறுத்தமுயலும் தமிழனுக்கும் பெண் வீட்டாரதும் பெற்றோரினதும் அழுத்தங்களை முகம் கொடுக்கும் தமிழனுக்குமிடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனையும் உணர முடிந்தது.

எமது உரையாடலிலும் இந்த நிலை முரண்பாட்டினை (Role conflict) வெளிப்படுத்தும் கருத்துக்களும் முன் வைக்கப்பட்டன.

நான் இப்பகுதியினை எழுதிக் கொண்டிருந்த நேரம் வரை தமிழன் இவ்விடயத்தில் முடிவெடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதாகவே தகவல்கள் கிடைத்தன.

எமது சமூகத்தில் சீதனம் தொடர்பாக எழக்கூடிய ஒரு பிரச்சினையினை வெளிப்படுத்துவதற்காகவே மேற்கண்ட உதாரணத்தினை எழுதினேன்.

இன்றும் சீதனம் ஒரு ஒடுக்குமுறை வடிவமாகத் தனது கோரப் பற்களைப் பதித்துக் கொண்டிருக்கிறது என்பது நிச்சயமான உண்மை.

அதேநேரம், சீதனம் வாங்கக் கூடாது என்ற கருத்தினைக் கொண்டவர்களும் நான் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் போன்றவையினை எதிர் நோக்கத்தான் செய்கின்றனர்.

இந்நிலையில் சீதனத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் ஒடுக்குமுறைக் கொடூரம், சமூக அந்தஸ்து, அவலம் போன்றவற்றை விரிவாக ஆராய்தல் பயன் தரும். எமது சமூகத்தின் சமூக விஞ்ஞானிகள் இதைச் செய்வார்களா?

## படையினருக்கு எவ்வளவு அபராதம் எத்தனை வருடச் சிறைத்தண்டனை?

விடுதலைப்புலி செல்வராஜாவும் மற்றும் சிலரும் பங்கர் கட்ட சிலிப்பர் கட்டைகளை அகற்றிய விடயத்தைத் தெரிந்திருந்தும் படையினருக்கு அறிவிக்கத்தவறியமைக்காக வரணியைச் சேர்ந்த ஆதவன் என்ற மாணவருக்கு பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எல். என். டி. ஜெயசூரியா 7500 ரூபா அபராதமும் பத்துவருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்ததாய் கடந்த 02. 03. 1992 அன்று "வீரகேசரி" பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அதேசமயம் பிரபாகரன் இருக்கும், இடம் படையினருக்குத் தெரியும் என இராணுவத் தளபதி கமில்டன் வனசிங்கா கூறியதாக கடந்த 10. 10. 1991 "தினகரன்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அப்படியாயின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் படையினருக்கு எவ்வளவு அபராதம்? எத்தனை வருடச் சிறைத்தண்டனை?

## வெளிநாட்டு மாப்பிள்ளை

வெளிநாட்டுத் திருமணம் என்ற பெயரில் எமது பெண்கள் எதிர்நோக்கும் அவலங்கள் பல. நாம் அறிந்த சில உதாரணங்கள்.

* மிக அண்மையில் நடந்த ஒரு சம்பவம். சுவிசில் இருக்கும் மாப்பிள்ளைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பெண் அனுப்பினார்கள். ஆனால் சுவிசில் மாப்பிள்ளை, பெண் தனக்குப் பிடிக்கவில்லை -அழகில்லை -எனப்பல காரணங்கள் கூறித் திருமணம் செய்யமறுத்து விட்டார். பெண் ஊருக்கும் திரும்ப முடியாமல் -சுவிசிலும் ஆதரவின்றி அலைகின்றார்.

* பிரான்சில் உள்ள மாப்பிள்ளைக்கு -மணமகனின் தாயார் திருமணம் பேசிச் சீதனம் 2 இலட்சம் எனத் தீர்மானிக்கப்பட்டது. திருமணம் கனடாவில் எனக் கூறப்பட்டது. அதில் 1 இலட்சம் ரூபாயைப் பெற்றுக் கொண்ட மணமகனின் தாயார் அவுஸ்திரேலியா சென்று விட்டார்., மணப்பெண்ணும், தாயாரும் தனது செலவில் கனடாவிற்கு ஒருவாறு போய்ச் சேர்ந்தனர். அங்கிருந்து பிரான்சுக்குத் தொடர்பு கொண்டு எப்போது திருமணம் என மாப்பிள்ளையிடம் கேட்டபோது -தனக்கு மேற்படி பெண்ணைத் திருமணம் செய்ய விருப்பமில்லை எனப் பதில் தரப்பட்டது.

* யாழ்ப்பாணத்தில் ஆசிரியையாக இருந்த ஒரு பெண்ணிற்குக் கனடா மாப்பிள்ளை ஒருவரைத் திருமணம் செய்யப் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டது. பெண்ணும் பெருவிருப்புடன் தொழலையும் விட்டுவிட்டுக் கனடா போய்ச் சேர்ந்தார். அங்கு சம்பந்தப்பட்ட இளைஞர் ஏற்கனவே திருமணமாகி இருந்தார். ஏமாற்றமடைந்த மணப்பெண் கனடாவில் நிற்கவிருப்பமின்றிக் கொழும்பில் வந்து நிற்கின்றார்.

* இளம் பெண் ஒருவர் தனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை தான் வேண்டுமென முடிவு செய்தார். கனடாவில் இருந்து வந்த இளைஞர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். அவருடன் சில நாள் வாழ்ந்த பின் இளைஞர் கனடா சென்று விட்டார். நீண்ட நாட்களாக எவ்வித கடிதத் தொடர்பும் இல்லாததால் பெண் வீட்டார் விசாரிக்கும் படலத்தைத் தொடங்கினார்கள், இளைஞர் கனடாவில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து வாழ்கிறாராம்.

'விழிப்பு' பத்திரிகையிலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அனைத்துலக பெண்கள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற கவிதை**

## திருத்திய பதிப்பு

சீதனம்
என்றதொரு சொல்லினால்
ஆசையாய், அவசரமாய்
மனசுக்குள் தயாரித்த மணமாலை,
மணக்கும் வெறும்
பூஜ்ஜியமாய் போனது.
கற்பனையில் பவனி வந்த
பல்லக்குப் பாடையாய் ஆனது.
எமக்கு
மலர் என்ற வர்ணனை
ஒரு காலத்தில் இருந்ததாம்.
கூந்தலில் சேராமல்,
பிறர் கழுத்தையும் சுற்றாமல்,
பிணத்திற்கும் ஆகாமல்
அன்று நாம்
ஓரமாய் உதிர்ந்து போனது
அதனால் தானோ?

எம் உள்ளத்தின்
உள் ஈரங்களை
உணர்ந்து நனைய,
நனைந்து மகிழ
முடிந்தும் முடியாமல்
நடை பயிலும் நளினங்கள்.
சூரியனை வரைய - எம்
காயங்களில்
வர்ணம் தேடும் வக்கிரங்கள்
மதி என்று பெயர் சூட்டி
அன்றெம்மை அழைத்ததாம்.

பாலை வன உப்போடையில்
விழலுக்கு எறிக்கின்ற
நிலவாக - அன்று
வீணே காய்ந்து விட்டது.
அதனால் தானோ
பண்பாடு
என்ற பழம் புகழை
இழுத்துப் போர்த்திக் கொண்டு
தூங்கி எழுந்து
விடுதலை வேண்டி
விரித்து நீட்டப்பட்ட - எம்
கைகளில் இடப்பட்ட
குரூரமான பிச்சை
'அடிமை விலங்கு'
ஆதிக்க
சாம்ராஜ்ஜிய த்தின்
சிம்மாசனத்துக்கு - எம்
அப்பாவி எலும்புக்கூடுகள்
கால்களாகி
தோய்ந்தது போதும்.
கண்ணீரால்
எழுதப்பட்ட - எம்
கறுப்புக் கதை - இனி
திருத்திய பதிப்பாகி
அச்சேறும்.





போதும்
மேய்ச்சல் நிலங்களாகவே
இருந்து அலுத்துப் போச்சு.
நாமும் விளை நிலங்களாய்
மாற வேண்டும்.
அடிபட்டு அடிபட்டே
கன்றிப் போன காயத்திற்கு
களிம்பு தடவும் காரியமல்ல.
எம் நிரந்தர
ரணங்களின் மேல் ஓட்டும்
ஈக்களை ஓட்டும்
முயற்சிகள்தான். - எம்
தோள் மேல் துப்பாக்கிகள்.
எம் அடிமை
விலங்குடைக்க
பாரதியும் வேண்டாம்,
கம்பனும் வேண்டாம்.
துப்பாக்கித் திறப்புகளால்
நாமே - இனி
இலகுவாய் திறந்து கொள்வோம்.

**ஆக்கம்:**
**செல்வி றூபி மார்க்கிரட்**
**பறப்பாங்கண்டல்**
**உயிலங்குளம்**
**மன்னார்**


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| U.T.O<br>54 Tavistock Place<br>London WC1H 9RG<br>Tel: 071-837 7162<br>Fax: 071-278 5666 | T.C.C<br>341 Rue Des Pyrenees<br>75020 Paris<br>France<br>Tel: 435 81142<br>Fax: 435 81191 | Tamil Confederation<br>P.O.Box 340251<br>5270 Gummersbach - 34<br>Germany | T.C.C<br>Via Mariano Stabile - 34<br>90139 Palermo<br>Italy<br>Tel/Fax: 091-611 3179 | T.C.C<br>P.O.Box 1699 Vika<br>0110 Oslo - 1<br>Norway<br>Tel: 02-191260<br>Fax: 02-190114 | W.T.C.C<br>Hofjecklin<br>7415 Rodels<br>Switzerland<br>Tel: 077-816609 | W.T.C.C<br>P.O.Box 694<br>Mulgrave North<br>Victoria 3170, Australia<br>Tel: 03-457 6347<br>Fax: 03-561 8224 |


Printed by Slough Observer.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



## சென்ற இதழ் தொடர்ச்சி

# ஒரு பெளர்ணமிக்காலம்

- ராகுல்ய அரவிந்தன் -



அவற்றை அனுராதபுரத்தில் விற்பதா, நாகதீபத்திலா, ஈழவூரிலா என்பதை அறிய..."

சிங்களக்காவலன் அவசரமாகக் குறுக்கிட்டான்.

"வேண்டாம்... வேண்டாம்... எங்களுக்கே விற்பனைசெய்யுங்கள். அந்தத் தெமிளுகளுக்கு விற்க வேண்டாம். நீங்கள் வந்த குதிரைகளைப் பார்த்த போதே நினைத்தேன்..... உங்கள் பெயரென்ன?...."

"என் பெயர் சேனன் இவன் பெயர் குத்தன்..."

அவன் அவர்கள் பெயர்களை ஒரு தடவை உச்சரித்தான்.

"சேன..."

"சேனன்...." என்று நாககுத்தன் திருத்தினான்.

"எப்படியோ நீங்கள் போகலாம்... உங்களுடன் ஒரு காவல் வீரனை அனுப்புகிறேன். உடனடியாக மன்னனைக் காண அவன் வழி செய்து தருவான்...."

"நல்லது..."

அவர்கள் மன்னன் சூரதீசனை அரசவையில் சந்தித்தார்கள்.

அனுராதபுரத்து மண்ணில் நடக்கும்போது ஈழசேனனின் இதயத்தில் எரிமலை குமுறியது. இது எங்கள் மண். எம் முதாதையர் ஓடி மகிழ்ந்து வாழ்ந்த மண். எங்கிருந்தோ அனாதைகளாக வந்தவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். மன்னன் சூரதீசனையும் அவன் அமர்ந்திருந்த அரியணையையும் பார்த்தபோது உள்ளத்தெரிமலை வெடித்துக் கக்கிவிடும் போல இருந்தது! நான் அமர வேண்டிய சிங்காசனம்.

"எனக்கு ஆயிரம் குதிரைகள் வேண்டும்.... என்றான் சூரதீசன்.

"ஆயிரம் குதிரைகளா?" என நாகுகுத்தன் வியப்புக் காட்டினான்.

"ஆமாம் எங்களின் காலாட்படை பலமானது. குதிரைப்படையில் போதிய குதிரைகள் இல்லாமையால் எங்களால் எதிரிகளை ஒழிக்க முடியவில்லை."

"எதிரிகளா?..."

"உத்தரதேசத்துத் தெமிளுகள். அவர்கள் எங்களுக்கு ஓயாது தொல்லை தருகிறார்கள். ஒரு காலத்தில் அவர்கள் இங்கெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதற்காக, இந்த நாடு முழுவதும் அவர்களுக்குரியதென உரிமை கோர முடியுமா? அதெல்லாம் உங்களுக்கேன்? உங்களால் ஆயிரம் குதிரைகளைத் தரமுடியுமா?"

"தரலாம்...."

"ஏன் தயக்கம்?"

"தங்கள் நாட்டின் வருவாயில் பெரும்பகுதி அவற்றின் விலையாகப் போய் விடும்.....? என்றான் ஈழசேனன்.

சூரதீசன் வெகுண்டெழுந்தான்.

"ஆ, அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியவர் நாங்கள். யுத்தத்திற்குத் தேவையானவற்றைச் செய்யத்தான் வேண்டும். அதற்காக மக்கள் பட்டினியில் பரிதவித்தாலும் பரவாயில்லை. இந்த எளிய தெமிளுகளின் கொட்டத்தை அடக்கியே தீரவேண்டும்...."

"அது சாத்தியமாகாது..." எனக்கூற நாககுத்தன் வாயெடுத்தான். வந்த நோக்கம் பழுதாகிவிடும். தன்னை அடக்கிக்கொண்டான். தக்கினதேசத்தை ஆக்கிரமித்துத் தன் வம்சத்தைப் பெருக்கிக் கொண்ட சிங்கள மன்னன், அத்துடன் திருத்திப்படாமல் உத்தர தேசத்தையும் கபளீகரம் செய்யத் துடிக்கிறான். பேராசையா. அல்லது பயமா?

"இன்னமும் ஆறு திங்களுக்குள் நானூறு குதிரைகள் தரலாம். அதன் பின்னர் தொடர்ந்துதருவோம்"

"நல்லது.... வேறு ஏதாவது?..."

"எங்கள் குதிரைகள் உயர்ந்த சாதியைச் சேர்ந்தன. முரட்டுத்தனமானவை. அவற்றை ஓரிருவரால் மந்தையாக அழைத்துவர முடியாது."

மன்னன் சூரதீசன் குறுக்கிட்டான்; "எத்தனை பேரை வேண்டுமானாலும் அவற்றுடன் அழைத்துவரலாம். அவர்களுக்குரிய கூலியும் சேர்த்துத் தருவோம்"

அவர்கள் வந்த காரியம் முடிந்துவிட்டது.

"சேன.... குத்திக்க.... புரவிகளுடன் வாருங்கள்" என்றான் மகிழ்வுடன் சிங்கள மன்னன் சூரதீசன்.

**"நாங்கள் நமக்குத் தேவையான அனைத்தையும் இப்பிரதேசத்திலேயே உற்பத்தி செய்து கொள்கின்றோம். நமது தேவைகள் குறைவு. நாம் தேவைகளை அதிகரித்துக் கொள்வதில்லை. உணவுத் தானியங்கள், காய்கறிகள், மீன், காடுபடு திரவியங்கள் எனப்பல எம்மிடமுள்ளன"**

### 3

இளங்கதிர்கள் பரவத் தொடங்கிய வேளையாதலால், புரவிகளின் நாசித் துவாரங்களிலிருந்து வெளிவரும் வெப்பக்காற்று புகைப் படலமாகச் சீறியது. அவை கனைத்து தம்மை இனங் காட்டியபடி நெய்தலைப்பின் தள்ளி மருத நிலத்தில் ஏறின. வயல் வெளிகளில் நெற்பயிர்கள் குடலைப்பருவத்தில் பச்சைப் பசேலென காட்சி தந்தன.

"இவை மழையை நம்பிய நிலங்கள். ஈழவூரின் உட்பகுதி வயல்கள் சிறிய குளங்களை அடிப்படையாகக் கொண்டன. சிற்றாறுகளை மறித்து அணைகட்டி நீரைத் தேக்கி வைத்திருக்கின்றோம். விலங்குகளுக்காகக் காடுகளில் சிறிய குளங்களை உருவாக்கியிருக்கின்றோம். அவை நீர் தேடிக் கிராமங்களுக்கு வரக் கூடாது என்பதற்காக. சிங்கள ஆரியர்களின் வருகைக்குப் பின்னர்தான் நாங்கள் குளங்களை அமைக்கவும் பயிர் செய்யவும் கற்றோமாம். எவ்வளவு சிரிப்பிற்கிடமானது. சிங்கள விஜயனின் வருகையின்போதே உத்தரதேசத்தில் நாகரிகமான மக்கட்கூட்டம் வாழ்ந்ததென எனது பாட்டனார் கூறுவார்...." என்றான் ஈழசேனன்.

அவன் கூறியவற்றை அவதானிக்கும் நிலையில் நாகுகுத்தன் இல்லை. அவன் மனப்பட்சி அவர்கள் வந்துகொண்டிருந்த காட்டுப் பாதையை விரைந்து கடந்து, குடிமனைகளையெல்லாம் கடந்து ஈழவூர்த்தலைவனின் மாளிகையில் சேர்ந்திருந்தது. அந்த மாளிகையில் கலகலவெனச் சிரிக்கும் அன்னம்மையைத் தேடியது.

அவர்களின் புரவிகள் அற்புதமான காட்டுக்கிராமங்களைக் கடந்து விரைந்தன. குளங்களை அடிப்படையாகக் கொண்டவையாக அக்கிராமங்கள் இருந்தன. மழாப்பு ஆற்றங்கரையோரமாகச் சென்றபோது புலவுகளில் (மேட்டு நிலங்களில்) காய்கறித்தோட்டங்கள் விரவிக் கிடந்தன. பாதையில் செல்லும் போது பெரியதொரு மரையை வேட்டையாடி நால்வர் தொங்குதடியில் தூக்கிவந்தனர். தங்கள் தலைவன் வருவதைக் கண்டதும் நிலத்தில் வைத்துவிட்டு ஒதுங்கி நின்றனர்.

"எங்கள் பிரதேசம் தன்னிறைவானது..." என்றான் ஈழசேனன், "நாங்கள் நமக்குத் தேவையான அனைத்தையும் இப்பிரதேசத்லேயே உற்பத்தி செய்து கொள்கின்றோம். நமது தேவைகள் குறைவு. நாம் தேவைகளை அதிகரித்துக் கொள்வதில்லை. உணவுத் தானியங்கள், காய்கறிகள், மீன், காடுபடுதிரவியங்கள் எனப்பல எம்மிடமுள்ளன."

நாககுத்தனின் மனக்கண்களில் அன்னம்மை தெரிந்தாள். செந்தாமரை நிறத்தவளின் விழிகளின் சிரிப்பில் அவன் சகலதையும் மறந்திருந்தான். இத்தனைக்கும் அவன் அவளுடன் மனம்விட்டு அளவளாவியவனல்லன். மூன்று நாட்கள் கண்ட, சிரித்த பழக்கம்.

தூரத்தில் மக்கள் குடியிருப்புகள் தெரிந்தன அவற்றின் நடுநாயகமாக உயர்ந்து நின்ற மாளிகை, தாங்கள் வரவேண்டிய இடத்தை அண்மித்து விட்டதைத் தெரிவித்தது. நாககுத்தனின் உள்ளத்தில் அலைகள் ஆர்ப்பரித்தன. நுரை தள்ளிப் பூச்சிந்தின.

அவனுக்கு மாளிகை தெரியவில்லை. விண்மண்ணெல்லாம் அந்தச் சுந்தரியின் முகந்தான் மலர்ந்து சிரித்தது.

மாளிகைவாசலில், ஈழவூர்ப்படைத்தளபதி அவர்களை எதிர் கொண்டான். அவர்கள் குதிரைகளிலிருந்து குதித்ததும் புரவிகளைப் பிடித்த காவல் வீரர்கள் குதிரைக் கொட்டகைக்குஇட்டுச் சென்றனர். ஈழசேனன் படைத் தளபதியை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையின் அர்த்தம் புரிந்தது.

"சகலதும் நன்கு பூர்த்தியாகி விட்டன, அரசே. இருநூற்றியெழுபது குதிரைவீரர்கள் அரசவெளியில் தயார் நிலையில் உள்ளனர். நானூறு வீரர்கள் வெவ்வேறு ருபங்களில் அனுராதபுரத்திற்குள் நுழைந்து விட்டனர்."

"நல்லது.... நாகதீபத்திலிருந்து இன்னுமொரு இருநூறு குதிரை வீரர்கள் வருகின்றனர். அவர்களையும் வரவேற்று அரசவெளியில் தங்கச்செய்யுங்கள். தளபதி வீரசுந்தரர் அப்படையணிக்குத் தலைமை தாங்கி வருகிறார். அப்படையணியை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர் திரும்பிச் செல்கிறார். நாளை காலை நாங்கள் அனுராதபுரம் நோக்கிப் புறப்படுகின்றோம். அதிக படைக்கலங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம். பொதிகளுள் மறைக்கக்கூடியனவும் தற்காப்பிற்காக அணியக் கூடியனவுமான படைக்கலங்கள் போதுமானவை." என ஈழசேனன் கட்டளையிட்டான்.

அவர்கள் மாளிகையினுள் பிரவேசித்தபோது நாககுத்தன் எதிர் பார்த்தது போல ஈழசேனனின் அன்னையும் அந்த இருமங்கைகளும் எதிர்ப்பட்டனர்.

"வாருங்கள் மக்காள்....." என்று அன்னை வரவேற்றாள்.

### 4

கதம்பநதியின் கரையோர மேடொன்றில் தனது உறுதியான கால்களைப் பதித்து ஏறிய, ஈழசேனனின் வெண்புரவி, அவன் மனநிலையைப் புரிந்து கொண்டது போல பக்கவாட்டிற்குத் திரும்பியது. ஈழசேனன் பார்த்தான்.

நாககுத்தனின் புரவியும் அவன் அருகில் ஏறி நின்றது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை அப்பாதையில் குதிரைகள் தெரிந்தன. அவற்றின்மீது வீரர்கள் வியாபாரிகளாக அமர்ந்திருந்தனர்.

"நண்பா, நாம் தக்கணதேசத்தின் எல்லைக்குள் பிரவேசிக்கப் போகின்றோம். எங்கள் முதாதையர் வாழ்ந்து மகிழ்ந்து இழந்த பூமியை மீட்டெடுக்கப் போகின்றோம். சிங்கள மன்னனின் ஆதிக்கத்திலிருந்து எமது பூமி மீளப் போகின்றது." என்ற ஈழசேனனை பாசம் பொங்க நாககுத்தன் பார்த்தான்.

"சந்தேகமில்லை. எங்களது குதிரைப்படையின் முன் சிங்களப்படை எம்மாத்திரம். அவன் நம்மீது தண்டெடுக்க முன் நாம் தாக்கப் போகின்றோம். தெரிந்தெடுத்த வீரர்கள் இவர்கள். மகாவில்லாச்சியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். குதிரைகளில் ஆரோகணித்து நாம் செல்லக்கூடாது. விற்பனைக்குரியவற்றில் சவாரி செய்து வருவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். அப்படிப் பயணம் செய்தால் அது படையணிபோலத் தெரியும். ஆகவே, இனி அவர்கள் இறங்கித் குதிரைகளை அழைத்து வரட்டும்..." என்றான் நாககுத்தன். அவன் கட்டளை நிறைவேறியது. அவர்களை மகாவில்லாச்சியில் காவல்வீரர்கள் மறித்தனர்.

"மன்னனுக்குச் செய்தி அனுப்புங்கள். சேனனும் குத்தனும் குதிரைகளோடு வந்திருப்பதாக..." என்றான் ஈழசேனன்.

"தேவையில்லை, குத்த... உங்களை மன்னர் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். விரைந்து செல்லுங்கள். குதிரைகளில் ஏறிச்செல்லலாமே?" என்றான் சிங்களக்காவல் வீரன்.

"விற்பனைப்பண்டங்களை நாங்கள் உபயோகிக்கக்கூடாது. கால் நடையாக அவற்றின்ன அழைத்துச் செல்கின்றோம்."

"நல்லது... நல்லது.." என்றான் சிங்கள வீரன்.

**"எதிர்த்த சிங்கள வீரர்களின் உடல்கள் உயிரற்றுச் சரிந்தன. மூன்று நாழிகை யுத்தத்தில் அரண்மனை ஈழசேனனின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. சூரதீசன் தப்பி ஓடி விட்டதாகச் செய்தி வந்தது. தமிழ் வீரர்கள் வெற்றிக் கோசம் எழுப்பினர்."**

அனுராதபுரத்திற்குள் நுழையும் போது பாதைகளில் செல்வோர் அவர்களை வியப்புடன் பார்த்தனர். தமக்குள் பேசிக்கொண்டனர். சிலர் இரகசியக் குறிகள் மூலம் தம்மை அடையாளம் காட்டிக்கொண்டனர்.

"அனுராதபுரத்தில் தமிழ்மக்கள் தாம் அதிகம் போலத்தெரிகின்றது."

"உண்மை..."

"நண்பா, நான் உன்னிடம் ஒன்று கேட்கலாமா?" என்ற நாகக்குத்

மிகுதி அடுத்த இதழில்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மணலாறு, சிங்களப் படைக்கு

அண்மைக் காலங்களில், சிங்களப் படைகளினால் இரண்டு பாரிய இராணுவ நடவடிக்கைகள் மணலாற்றில் எடுக்கப்பட்டன.

சென்ற ஆண்டு ஓகஸ்ட் 29 ல் இராணுவ நடவடிக்கை -மின்னல் எனும் பெயரில் வான் படையின் பாரிய பங்களிப்புடன், மிகப் பெரிய படையெடுப்பு நடவடிக்கை நடாத்தப்பட்டது.

1948 இல் கந்தளாய், பதவியாவில் தொடங்கிய சிங்களக் குடியேற்றத்தின் மூலம், சேருவெல என்ற சிங்களப் பெயருடன் அப்பகுதிகளும் பறிபோய் விட்டன. சேருவில என்று சிங்களத் தேர்தல் தொகுதியாக நிற்பதுடன் திருகோணமலை மாவட்டத்தின் 2/3 நிலப்பகுதியையும் அது தன்னுள் விழுங்கிவிட்டது.

அதேபோல மகாவலி "அ" வளர்ச்சித் திட்டம் என்ற பெய

## மணலாற்றுப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள்.

### பிரதான முகாம்கள்

1. வெலி ஓயா தலைமை முகாம்.
2. வெலி ஓயா உப முகாம்.
3. முந்திரிக்குளம்.
4. ஜானகபுர.
5. கோட்டைக் கேணி.
6. கொக்குத்தொடுவாய்.
7. தென்னமரவடி.
8. சிங்கபுர.
9. கஜபாபுர (சிலோன் தியேட்டர் பாம்)
10. 10ஆம் கட்டை புல்மோட்டை -அனுராதபுரம் வீதி.
11. 13ஆம் கட்டை புல்மோட்டை -அனுராதபுரம் வீதி.
12. கெம்பிலியாவெவ. நெடுங்கேணிப் பக்கமாக
13. கோன்வெவ அல்லது கோங்வெவ. நெடுங்கேணிப் பக்கமாக

### மினி முகாம்கள்

1. கென்ற் பாம்
2. சாம்பன் குளம்
3. துவரன் குளம்
4. கும்பகர்ணன் மலை

மேற்கூறியவற்றைவிட, வீதிகள் நெடுகிலும் காவலரண்கள் (15-30 பேர் வரை கொண்டவை) 50 இற்கு மேல்.

* சிறிலங்கா அரசு சூட்டிய சிங்களப் பெயர்களுடனேயே முகாம்களை இனங்காட்டியுள்ளோம். ■

இச்சமரில் இராணுவம் பெரும் இழப்புக்களைச் சந்தித்ததுடன், மணலாற்றுக் காட்டுக்குள் நுழைந்த வேகத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டு விட்டது.

தமிழீழத்தின் இதயமான மணலாற்றைப் பாதுகாக்க இச்சமரில், 236 புலி வீரர்கள் வீரச் சாவைத் தழுவினர்.

அடுத்தது மார்ச் 17, 92 ஆம் ஆண்டு, இராணுவ நடவடிக்கை-கயே பகர எனும் பெயரில், பாரியதொரு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

படையெடுப்புத் தொடங்கப்பட்ட இடத்திலேயே சிறிலங்காப் படை எதிர்பாராத பேரிழப்பைச் சந்தித்ததோடு, கனரக ஆயுதங்களையும் (பின்னுதைப்பற்ற பீரங்கியும் அதில் ஒன்று) இழந்தது. எம்மில் 46 புலிகள் வீரச் சாவை அணைத்துக் கொண்டனர்.

'இந்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் நோக்கங்கள் பலவாகும். அந்த நோக்கங்களின் இலக்கு தமிழீழத் தேசியத்தைச் சிதைப்பதுதான். அதாவது வட-தென் தமிழீழத்தை நிரந்தரமாகத் துண்டாடி தென் தமிழீழத்தை விழுங்கிவிடுவதுதான். எமது விடுதலைப் போர் காரணமாக, மணலாறு இன்னமும் முழுமையாகச் சிங்களக் குடியேற்றத்தால் விழுங்கப்படவில்லை.

1949 ஆம் ஆண்டு தொடங்கிய சிங்களக் குடியேற்றத்தின் மூலம் பட்டிப்பளை (கல்லோயா) பறிக்கப்பட்டுவிட்டது.

ரில் மூதூரில் சிங்களக் குடியேற்றத்தை தொடர இருக்கிறார்கள். பழந்தமிழர் பகுதிகளான ஈச்சிலம்பத்தை. கிளிவெட்டி, தெகிவத்தை, தோப்பு, சேருவெல ஆகிய பகுதிகளில் மேலும் 13000 ஏக்கர் நிலப்பரப்பில் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டம் உள்ளது.

திருகோணமலை நகர வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் நகரின் உள்ளும் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் திருகோணமலையை தனிச்சிங்கள மாவட்டமாக்க முயற்சிகள் வேகமாக செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அத்துமீறிய இக்குடியேற்றங்களை விரைவாகவும் பாதுகாப்பாகவும் செய்ய வேண்டுமாயின், மணலாறு சிங்களப் படையின் உள்ளங்கைக்குள் இருந்தால் சுலபமாகுமென அரசு கருதுகின்றது.

இவையெல்லாம் நடந்துவிட்டால் வட-தென் தமிழீழம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு நிரந்தரமாக துண்டாடப்பட்டுவிடும்.

1987 ஆம் ஆண்டு புலிகளின் குரல் எட்டாவது இதழில் (Voice of Tigers 8) ஒரு கட்டுரையில் சிங்கள ஆய்வு வட்டத்தினரின் தமிழீழ தேசியத்திற்கு எதிரான திட்டம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

சிங்கள ஆய்வு வட்டம் ( Study Group) என்பது சிங்கள புத்திஜீவிகளைக் கொண்டதொரு அமைப்பாகும். சிங்கள புத்திஜீவிகள் தமிழீழத் தேசியத்தை அழிக்க எப்படிப் பேரினவாத அரசிற்குத் துணை போகின்றார்கள் என்பது தெளிவாகும். அத்திட்டத்தில் எக்காரணத்தை கொண்டும் வடதமிழ் மக்களையும் மட்டக்களப்புத் தமிழர்களையும் இணையவிடக்கூடாது என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ்மாவட்டங்களிலேயே தமிழர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்காக, புதிதாக மாவட்ட எல்லைகள் பிரிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் முக்கியமாக மன்னார், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் புதிய மாவட்டங்களாக மாற்றப்பட வேண்டுமெனவும், கூறப்பட்டுள்ளது.

அத்துடன் புதிதாக அமைக்கப்படும் மாவட்டங்கள் எப்படி அமைய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (படம் -1 ஐப் பார்க்கவும்) மன்னார் மாவட்டம் அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட வேண்டும். (அதன் பின் மன்னார் என்றதொரு மாவட்டம் இருக்காது; அது அனுராதபுர மாவட்டம் என்றே அழைக்கப்படும்). முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட எல்லைகள் மாற்றப்பட்டு புதிதாக மதவாச்சி எனும் மாவட்டம் உருவாக்கப்படும்.

மேலும், தமிழ் மக்களின் பகுதிகளில் பெரிய அளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு தமிழ் மக்களின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும், அந்தச் சிங்களப் புத்திஜீவிகளின் அமைப்பு எழுத்து வடிவத்தில் பதிந்துள்ளது.

1. 3. 92 ஐலன்ட் செய்தித்தாளில் பேராசிரியர் மத்தும பண்டார என்பவர், 'இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புவியியல் ரீதியான மாற்றம்' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதையும் இங்கு பார்ப்பது நல்லது. இவரின் திட்டப்படி, மாகாண எல்லைகள் ஆற்றுவடி நிலங்களைக் கருத்திற் கொண்டு மாற்றப்பட வேண்டும். (படம் -2 ஐப் பார்க்கவும்).

அத்துடன் வடமத்திய, மத்திய, சப்பிரகமுவா, ஊவா மாகாணங்களுக்குக் கடல் எல்லைகள் இல்லையென்ற குறையும் தீர்க்கப்படும் எனவும் கூறுகின்றார். (இப்படிச் செய்தால் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் சிங்கள மாகாணங்களுக்குள் அமிழ்ந்து போகும்).

இதன் மூலம் இலங்கைத் தீவின் 2/3 பங்கு கடற்பரப்பு வட - கிழக்கு மாகாணத்திற்குச் செல்வதைத் தடுக்கலாம் எனக் கூறியுள்ளார். இதன்மூலம், தமிழர்களிடம் இருக்கும் கடல் எல்லைகளைப் பறிக்கலாம்.

அத்துடன் மட்டக்களப்புத் தமிழர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களிடம் இருந்து வேறுபட்டவர்கள். அவர்களின் பண்பாடுகளிலும் வேறுபாடு உண்டு அவர்களின் பண்பாட்டு வேறுபாடுகளிற்கு மதிப்பளித்து அவர்கள் பிரிந்திருக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும், இச் சிங்களப் பேராசிரியர் கழிவிரக்கம் கொள்கின்றார்.

அதே போல 29. 2. 92 ஐலன்ட் செய்தித் தாளில் 'தமிழர் தாயகம் எதிர் சிங்களவர் தாயகம்' எனும் தலைப்பில், பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியற் துறையைச் சேர்ந்த கலாநிதி சாந்தா சேனநாயக்கா எழுதிய கட்டுரையில், சிங்களவர்களின் தாயகம் தமிழரின் தாயகத்தை உள்ளடக்கியிருக்கும் வேளையில், தமிழரின் தாயகம் சிங்களவரின் தாயகத்தைப் பிரிக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். அத்தோடு மலைநாடு எனும் பெயரில் சிங்களவரின் தாயகம் மேலும் துண்டாடப்படுகின்றதெனவும், கூறியுள்ளார்.

பொதுவாக நாட்டின் நலனுக்காகத் தமது நிலங்களை இழந்தவர்கள் சிங்களவர்கள்தான் எனக்கூறும் அவர், முதலில் பெருந்தோட்டங்கள் எனும் பெயரில் இந்தியத்தமிழர் சிங்களவரின் நிலத்தை எடுத்தனர்.

மகாவலி வளர்ச்சித் திட்டம் எனும் போர்வையில் தெல்தெனியா, கொத்மலை ஆகிய இடங்களில் பெருமளவில் சிங்களவர்கள் தமது சொந்த நிலங்களை இழந்துள்ளனர் என்றும், கூறுகின்றார்.

எனவே நிலங்களை இழந்தவர்கள் தமிழர்கள் அல்ல; சிங்களவர்களே எனக் கூறுகின்றார்.

தமிழர்கள் சிங்களவர்களின் தாயகத்தில் வாழத் தயங்குவதில்லை. ஆனால் சிங்களவரைத் தமிழர் தாயகத்தில் வாழவிடுவதில்லை எனக் கூறும் அவர், சிங்களவர்கள் சிறிலங்காவைத் தமது எனக் குறிப்பிட்டுக் காட்டுவதைப்போல, தமிழர்கள் யாழ்ப்பாணத்தையும் அதன் அண்மைப் பகுதிகளையும் 'தமிழர் பண்பாட்டுத் தாயகம்' எனத் தம்மை அத்துடன் இணைத்துக் காட்டுவதில், அடிப்படையில் பிரச்சினை இல்லையென்று கூறுகின்றார்.

**மணலாற்றை நாம் இழக்க முடியாது. அது நிலம் மட்டுமல்ல; அதற்குள்தான் தமிழீழத் தேசியத்தின் இதயமும் உள்ளது.**

1977 இற்குப் பின்தான் தமிழ்த் தேசியவாதிகள் கிழக்கு மாகாணத்தையும் சேர்த்து, தமது தனித்துவ தாயகக் கொள்கையை விரிவு படுத்தினார்கள் எனவும் கூறியுள்ளார்.


1985 ஆம் ஆண்டு அப்போதைய சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கொழும்பு பாராளுமன்றில் பேசும் போது "நாங்கள்(சிங்களவர்) எல்லைகளை நோக்கி நகராதுவிடின் எல்லைகள் எங்களை நோக்கி நகரும்" என்று குறிப்பிட்டார். இங்கே அவர் எல்லைகள் எனக்குறிப்பிட்டது தமிழர் தாயகத்தினது எல்லைகளைத்தான்.

வெளிப்படையாக இலங்கைத் தீவு ஒரு நாடு என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும் தமிழர் தாயகத்தைப் பற்றிய உண்மை யதார்த்தத்தை அவ்வப் போது சிங்களத் தலைவர்களும் மறைமுகமாக ஒப்புக் கொண்டிருந்தனர்.

ஒட்டுமொத்தத்தில் சிங்கள அரசியல்வாதிகளும், மதவாதிக




படம் 1




படம் 2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளும், அறிவுழைப்பினர்களும் தமிழர் தாயகம் குறித்துத் தெளிவான எச்சரிக்கையான பார்வைகளைக் கொண்டுள்ளமை, எடுத்துக் காட்டப்படுகின்றது.

இதன் அடிப்படையிலேயே, தமிழீழத் தேசியத்திற்கு எதிராக அவர்கள் வகுக்கும் நாசகாரத் திட்டங்கள் துலக்கமான குறிக்கோள்களைக் கொண்டவையாக இருக்கின்றன.

அவர்களது கருத்துப்படி, தமிழர் தாயகம் துண்டாடப்பட வேண்டும்; கடற்பரப்பு மட்டுமல்ல, நிலப்பரப்பும் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட வேண்டும்.

திருகோணமலையிலும், மணலாற்றுப் பகுதியிலும் உள்ள சிங்களப் படை முகாம்களின் எண்ணிக்கை அண்ணளவாக 157 ஆகும். இப் படை முகாம்களில் உள்ள சிங்கள ஆயுதப் படையினரின் எண்ணிக்கை 30,000 இற்கும் மேலாகும். இவர்களைத் தவிர சிங்கள ஊர்காவற் படையினரும், சிங்கள தேசியத் துணைப் படையினரும், சிங்களக் காவற் துறையினரும் பல்லாயிரக் கணக்கில் உள்ளனர்.

கேந்திர முக்கியத்துவம் மிக்க திருகோணமலை முழுமையாகச் சிங்களவர்கள் கையில் வரவேண்டும் என்பதே, அவர்களின் ஆசையும் நோக்கமும் ஆகும். அதை முழுமையாக நிறைவேற்ற மணலாறும் தம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே, சிறிலங்கா பேரினவாத சக்திகளின் உடனடி அபிலாசை ஆகும்.

ஒப்பந்தத்தின் அடிப்படையில், வட -தென் தமிழீழ இணைப்பைச் சட்டரீதியாகச் சாத்தியமற்றதாக்கும்.

2. 'மார்க்கியவல்லி' என்ற இத்தாலி தேசத்து அறிஞன் குறிப்பிட்டதைப் போல, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நடாத்தப்படும் அத்துமீறிய குடியேற்றம் என்பவை, நிரந்தர இராணுவ முகாம்களைப் போன்றே செயற்படும். இராணுவ முகாம்களை அமைப்பதிலும் பார்க்க அத்துமீறிய குடியேற்றங்களை அமைப்பது மிகுந்த பயனைத் தரும்; ஏனெனில், அவை நிரந்தரப் படைத் தளங்களாகச் செயற்படும்.

னைப் போல அதைப் பெரும் அரணாக மாற்ற விடக்கூடாது என, நினைக்கின்றார்கள்.

மணலாற்றை நாம் இழக்கமுடியாது. அது நிலம் மட்டுமல்ல; அதற்குள் தான் தமிழீழத் தேசியத்தின் இதயமும் உள்ளது.

தமிழீழ மக்களுக்கு சிங்கள அரசின் கபட நோக்கத்தையும், திட்டத்தையும் உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கம்.

3) இந்தியப் படை முகாம் அமைத்த இடங்களில், முகாம்களை அமைப்பது.
4) தேச விரோதிகளின் துணையோடு விடுதலைப் புலிகளை அழித்து, தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பது.
5) போலி மாகாண சபை போல இராணுவக் கட்டுப்பாடு உள்ள பகுதிகளில் போலியாக நிர்வாகம் அமைப்பது.
6) தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வானொலிச் சேவைகளை நடத்துவது.
7) இராணுவ நடவடிக்கை குறித்துத் தொடர்ந்து பொய்களையும், புழுகுகளையும் சொல்வது.
8) இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி விடுதலைப் புலிகளைக் களங்கப்படுத்த முயற்சித்தல்.
9) மக்களைக் குண்டு வீசி அழிப்பது.

அதேபோல, சிறிலங்காப் படைக்கும் மணலாறு புதைகுழியாகும்.

விடுதலைப் புலிகள்
தமிழீழம்



# புதைகுழியாகட்டும்

அண்மையில் யாழ். பல்கலைக் கழக 'கைலாசபதி கலை அரங்கில்' 'தமிழீழ நோக்கு' இரண்டாவது இதழின் வெளியீட்டுக் கூட்டத்தில் திரு. மு. திருநாவுக்கரசு அவர்களால் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட இரண்டு விடயங்களை இங்கு நினைவூட்டுகின்றோம்.

1. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், அடுத்தடுத்துள்ள இரண்டு மாகாணங்கள் விரும்பினால் இணையலாமெனக் கூறப்பட்டுள்ளது.

வட- தென் தமிழீழத்திற்கு இடையில் 'வெலி ஓயா' எனும் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டால், அது இந்திய இலங்கை

மணலாறு மீது அடுத்தடுத்து சிறிலங்கா அரசு நடாத்தி வரும் சமர்களுக்கு, இன்னுமொரு இராணுவ நோக்கமுமுண்டு.

அதாவது, யாழ். குடாநாடு மீது பெரிய அளவிலான தாக்குதலை நடாத்த முன்பு மணலாற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்பதே, அதுவாகும். ஏனெனில், குடாநாட்டின் மீது இராணுவம் தாக்குதலை நடாத்தும் போது புலிகள் மணலாறு சென்று, இந்தியப்படையுடனான போர்க்காலத்தி

பிரதானமாக தமிழ் அறிஞர்கள், அறிவுழைப்பினர்கள் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இனவாத சிங்கள அறிஞர்களினதும் புத்திஜீவிகளினதும் பேரினவாதமுலாம் பூசப்பட்ட நியாய, வாதங்களை அம்பலப்படுத்தி, தமிழ்த் தேசியத்திற்குச் சேவை செய்ய வேண்டியது, அவர்களின் கடமையும், பொறுப்புமாகும்.

இந்தியப்படை தமிழீழத்தில் என்ன செய்ததோ அதையே பின்பற்றி, சிறிலங்காப் படையும் தமிழீழத்தில் செயற்படுகின்றது.

1) கூடிய அளவில் எறிகணைகளைப் பயன்படுத்தல்.
2) தாங்கிகளைப் பயன்படுத்தல்.

இந்தியப் படை புலிகளுடன் போராடச் சிங்களப் படை தகவல் கொடுத்து உதவியது; கடலில் காவல் நின்றது.

முடிவில் இந்தியப்படை தோற்றது.


இப்போது சிறிலங்காப் படை புலிகளுடன் போராட இந்தியப் படை தகவல் கொடுத்து உதவுகிறது; கடலில் தான் காவலிற்கு நிற்கிறது.

மணலாறு இந்தியப் படைக்கு புதை குழியானது.

## நவீன ஆயுதங்கள் மீட்பு

அமுங்குப் பொத்தானை இராணுவத்தின் மினிமுகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் பின் வருமாறு:-

அல்டிமக்ஸ் இலகு இயந்திரத் துப்பாக்கி -01
ரி-56 ரகத் துப்பாக்கி -09
40 மி. மீ. கைத்துப்பாக்கி -01
வேட்டைத் துப்பாக்கிகள் -04
ரம் ரவைக் கூடுகள் -02
* 40 மி. மீ. துப்பாக்கிக்குரிய எறிகணைகள் -24
* ரி-56 துப்பாக்கிக்குரிய ரவைக் கூடு -48
* 5. 56 ரக ரவைகள் -370
* நடுத்தர ரவைகள் -800
* நோட்டோ ரவைகள் -50
* வெளிச்சக் குண்டுகள் -02
* ஜே. ஆ. ர். ரக கிரனைட்டுக்கள் -03
* மோட்டரிலா வோக்கி -01
* சப்பாத்துகள் -13 சோடி
* தொப்பிகள் -08



மணலாறும் சூழவுள்ளபகுதிகளும்


புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டப் போராளிகளின் சுய விபரக்கோவையைப் புரட்டிப் பார்த்தால் கல்வி என்று குறிப்பிட்டிருக்கும் இடத்திற்கு நேரே பெரும்பாலும் எட்டாந்தரமோ அதற்குக் கீழோதான் காணப்படும். இவர்களது குடும்பங்கள் தங்கியிருக்கும் இடங்களை வீடு என்று சொல்ல முடியாது. தளபதி ஜோயிலிருந்து எல்லோரது நிலைமையும் அப்படித்தான். அவ்வாறான மிகக் கஸ்டமான குடும்பங்களிலொன்றிலிருந்து போராட்டத்திற்கு வந்தவன்தான் லத்தீப். கிரானைச் சேர்ந்த கந்தையா தம்பதியினரின் ஐந்து ஆண்பிள்ளைகளில் ஒருவன்தான் சண்முகநாதன் என்ற லத்தீப். இவனுக்கு நான்கு சகோதரிகளும் இருந்தனர். குடும்பத்தின் வறுமை நிலை இவன் தன் கல்வியை 7 ஆம் தரத்திற்கு மேல் தொடர அனுமதிக்கவில்லை. இயக்கத்தில் இணையும் வரை கூலி வேலைகள் செய்தான், தோட்டம் செய்தான், மிகக் கடுமையாக உழைத்தான்.

இவ்வாறாக மிகக் கடுமையான உழைப்பாளிகளாக இருப்பதனால் தான் மட்டக்களப்பு போராளிகள் ஒரு தாக்குதலுக்கு முப்பத்தைந்து தொடக்கம் ஐம்பது மைல்கள் வரை நடக்க வேண்டியிருந்தாலும் அலுத்துக் கொள்வதில்லை. ஆயுதங்கள், மேலதிக ரவைகள், முதலுதவிக்கான மருந்துகள், வழியில் எதிர்ப்படும் ஆறுகளைக் கடக்கத் தேவைப்படும் கயிறுகள் மற்றும் இன்னோரன்ன பொருட்களையும் சுமந்தபடி இவ்வளவு தூரம் நடந்து செல்வதென்றால் இலேசான காரியமல்ல.

சிங்கபுர, கள்ளிச்சை, வடமுனை போன்ற மிக நீண்ட தூரத்தில் உள்ள இடங்களுக்கு சென்று தாக்குதல் நடத்தும்போது யாராவது காயப்பட்டால் அது மிகப் பெரிய சிரமம். காயப்பட்டவர்களையும் சுமந்து கொண்டு எதிர்ப்படும் ஆறுகளையும் கடந்து வருவதற்கிடையில் சிலர் மரணிப்பர். தம்முடன் கூடி வாழ்ந்த, போராடிய நண்பனுக்காக நின்று அழக்கூட நேரமிருக்காது. நடையின் வேகத்தை தளர்த்துவது ஏனைய காயப்பட்ட போராளிகளது உயிருக்கு பங்கம் விளைவிக்கலாம். ஆகையால் வைத்தியம் செய்யக் கூடிய பாதுகாப்பான பகுதியைச் செல்லும் வரை அதே நடை. இது அவர்களுக்குப் பழக்கப்பட்டு விட்டது. இப்படியான இடங்களுக்கு தாக்குதலுக்குச் செல்லும் போது தங்களுடன் லத்தீப் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள். அவனது பகிடி-சேட்டைகளை ரசித்துக் கொண்டு வரும்போது நடையின் கஸ்டத்தை மறந்து விடுவார்கள். அதிலும் ஒருவரைப் போன்று பாவனை செய்தல், அவரைப் போலவே கதைத்தல் என்பன லத்தீப்புக்கு கைவந்த கலை. இயக்கத்தில் எவரையும் இவன் விட்டுவைப்பதில்லை எல்லோரைப் போலவும் கதைப்பான். ஆகவே நடந்தபடியே இவனது சேட்டைகளை ரசித்துக் கொண்டு செல்வார்கள்.




## மேஜர் லத்தீப்

எதிரிகளின் எல்லையைத் தேடிச்சென்று நடத்தப்படும் இத் தாக்குதல்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வளவு கஸ்டத்துக்கு இடையில் தாக்குதல்கள் செய்வது பெரும்பாலும் வெளியில் தெரியாது. வெளியுலகத்தைப் பொறுத்தவரை 'கள்ளிச்சை வடமுனையில் 20 இராணுவம் பலி. 20 ஆயுதங்கள் மீட்பு' இவ்வாறாகத்தான் செய்தி இருக்கும். இந்தத் தாக்குதல்கள் எல்லாம் இல்லாவிடில் சிங்களக் குடியேற்றத்தால் மட்டக்களப்பு கபளீகரம் செய்யப்பட்டிருக்கும். எமது போராட்டம் முனைப்படைய முன்னர் கடற்கரையோரமாக கல்குடா, புன்னக்குடா என்று சிங்கள மீனவக் குடியேற்றங்கள்-மேற்குப் பக்கமாக வேப்பவெட்டுவான் வரை சிங்களக் குடியேற்றங்களின் கல்வாடி-ஏன் மட்டக்களப்பு நகர மரக்கறிச் சந்தை கூட குடியேற்றவாசிகளின் கையில்தான் இருந்தன. லத்தீப்பின் இவ்வாறான தாக்குதல்கள் இல்லாவிடில் மட்டக்களப்பு-திருமலை மாவட்டங்கள் கூட சிங்களக் குடியேற்றங்களால் துண்டாடப்பட்டிருக்கும்;

சிறிலங்காப் படைகளுடனான இரண்டாம் கட்டப் போர் ஆரம்பித்த பின்னர் இடம்பெற்ற கல்முனை முகாம் தாக்குதல்கள், அக்கரைப்பற்று காவல் நிலையத் தாக்குதல்கள் என்பன லத்தீப்பின் திறமையை வெளிப்படுத்தின. தும்பங்கேணியில் இவன் நடத்திய தாக்குதலுக்கு ஐந்துக்கும் மேற்பட்ட ஆறுகளைக் கடக்க வேண்டியிருந்தது. வெட்டவெளிப் பிரதேசமான மண்முனைத் துறைப்பகுதியில் கூட சிறிலங்காப் படைகள் மீது தாக்குதல் நடத்தினான். வெள்ளமோ வெளியோ புலிகளின் தாக்குதல் திறனைப் பாதிக்காது என்பதைப் புலப்படுத்தினான். எல்லா இடங்களிலும் ஆயுதங்களைக் கைப்பற்றினான்.

இவன் மிகவும் அதிசயமான முறையில் தப்பியது தொப்பிமலையில் இடம்பெற்ற இராணுவ முற்றுகையின் போதுதான். அந்த முற்றுகையை முறியடிக்கும் நோக்கில் இவன் 50 பேர் கொண்ட ஒரு குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றான். இராணுவ அணியொன்றை அடித்து விரட்டிக் கொண்டிருக்கையில் ஏற்கனவே அப்பகுதியில் இராணுவத்தினர் அமைத்திருந்த வியூகத்தினுள் இவனது குழுவினர் சிக்கி விட்டனர். இராணுவத்தினரின் எரிகுண்டுகளினால் அப்பகுதியிலிருந்த இலுக்குப் புற்கள் பற்றி எரிந்தன. எங்கும் நெருப்பு-புகை திசையே தெரியவில்லை. கடுமையான அந்தச் சண்டையில் இவன் தனது குழுவினரில் 22 பேரை இழந்தான். ஏனையோரை மிகச் சிரமத்தின் மத்தியில் காப்பாற்றிக் கொண்டு வந்தான். அந்த முற்றுகையில் மிஞ்சியது இவனது அணி மட்டுமே. ஆகாயத்தில் போர் விமானங்கள், தரையில் நெருப்பு, எதிரே இராணுவம், இவற்றுக்குள்ளால் இவனது அணி தப்பி வந்த விதத்தை இன்றும் கதைகதையாக கூறுகின்றனர் மட்டக்களப்புப் போராளிகள்.

தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்வதைவிட இருப்பதைக் கொண்டு வாழ்வதே ஏற்றது என்பது இவனது நடைமுறை. தனது போராளிகளுக்கு அடிக்கடி எமது பொருளாதார நிலைமைகளைச் சுட்டிக்காட்டுவான். தன்னைப் போலவே வாழப் பழக்குவான். வீரத்திலும் தன்னைப் போலவே அவர்களையும் உருவாக்கினான். அனுபவமே சிறந்த ஆசான் என்பதற்கு இவனது வாழ்க்கையே உதாரணம். போராட்டத்தைப் பற்றி இவன் விளக்கும் விதத்தைப் பார்க்கையில் இவன் ஏழாம் வகுப்புப் படித்தவன் என்று யாருமே சொல்ல மாட்டார்கள். ஒரு பேராசிரியராகவே இவன் விளங்குவான்.

14.2.1992 அன்று ஆயித்தியமலை 6-ம் கட்டைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்தவன் இவனே. தாக்குதலுக்குச் செல்லும்முதல் வழமைபோல் கலகலப்பாகவே இருந்தான். தங்களைச் சிரிக்க வைப்பது இதுதான் கடைசித்தரம் என்பது தெரியாமல் அனைவரும் அவனது சேட்டைகளை ரசித்துக் கொண்டிருந்தனர்.

நாய் மாதிரிக் குரைப்பான் சோம்பலுடன் நாய் எப்படி திரும்பிப் பார்ப்பது என்று அபிநயம் செய்வான். இவன் பயிற்சிக்காக வந்த காலத்திலேயே இந்தச் சுபாவம் இருந்தது. இப்போது அணித்தலைவனாக வந்த பின்னர் கூட மாறவில்லை. இனியும் மாறக் கூடாதென இவனது நண்பர்கள் நினைத்துக் கொண்டனர். அப்போதுதான் இவன் சொன்னான். இந்தத் தாக்குதலில் லத்தீப் திரும்பி வரமாட்டான். நீங்க லத்தீப்பிட்ட கேக்கிற தகவலை கேட்டுக்குங்க. வேணுமெண்ட மாதிரி போட்டோ புடுச்சுக்குங் என்றான்.

விளையாட்டாக இவன் சொன்னது தமது வாழ்நாளில் மறக்க முடியாததாக அமையுமென்று அப்போது எவருமே நினைக்கவில்லை.

அந்தத் தாக்குதலில் எதிரியின் 15 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் தாக்குதலின் ஆரம்பத்திலேயே வீரச்சாவை எய்திய லத்தீப்பினதும் அவனது உடலைக் காப்பாற்றப்போய் வீரச்சாவு அடைந்தவர்களுமான 13 போராளிகளின் உடல்களைச் சுமந்து வரும்போது அவர்களின் மனம்-வீரச்சாவு அடைந்தவர்களின் புகழுடல்கள் எல்லாமே பாரமாகத்தான் இருந்தன அவனது நண்பர்களுக்கு. ஏனெனில் அன்று அந்தப் பயணத்தைக் கலகலப்பாக்க லத்தீப் இல்லை.

இப்போதெல்லாம் மட்டக்களப்பு பிராந்திய விசேட தளபதி "இந்த சீசனில் என்ன பகிடிய டாப்பா" என்று கேட்பதில்லை. இதைச் சொல்லத்தான் லத்தீப் இல்லையே-ஆம் இவன் மறைவுடன் சிரிப்பே வற்றிவிட்டது மட்டக்களப்பு மண்ணில்.

# இராணுவ வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக புலிகளுடன் அரசு சமரசம் செய்யவேண்டியுள்ளது

## ■ மறுமலர்ச்சிக்கழகக் கூட்டத்தில் திருநாவுக்கரசு உரை

தாராளப் பொருளாதாரக் கொள்கையினால் மேற்குலக நாடுகளும், இலங்கையும் ஒரு சுமூகமான தீர்வை இனப்பிரச்சனைக்கு முன் வைக்கலாம்"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மறுமலர்ச்சிக் கழகத்தின் 12வது ஆண்டுக்கூட்டத்தில் "உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணங்களும் இலங்கை அரசியலும்" என்ற தலைப்பில் மு. திருநாவுக்கரசு பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது இன்று அமெரிக்க ரஸ்ய காதல் உறவில் பாதிக்கப்படுவது மூன்றாவது உலகநாடுகளே. இது தான் இன்றைய சர்வதேச உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணமாகும்.

இலங்கையின் பொருளாதார வளத்தை வெளிநாட்டு உதவிகளும் புலிகளும் தான் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

ஆரம்பத்தில் கோல்புறாக் காலத்தில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது. அது யுத்ததந்திர ரீதியில் பார்வை செலுத்தப்பட்டது.

இன்று இலங்கை கேந்திர முக்கியத்துவம் என்ற நிலையில் இருந்து மாறி, தெற்கு தென்கிழக்காசிய நாடுகளுக்கு உலக வியாபாரச்சந்தையின் மையமாக திகழ்கிறது.

ஜே. ஆர். அரசாங்கத்தால் அமுலாக்கப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை, பிரேமதாச ஆட்சியிலும் இரண்டாவது தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு மூலதனம் 1989ம் ஆண்டு 18 மில்லியன் டொலராக இருந்தது. 90ம் ஆண்டில் 33 மில்லியன் டொலராக உயர்ந்தது. 1991ம் ஆண்டு மேலும் அதிகரித்துவிட்டது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உதவி வழங்கும் அமைப்புக்கள் இலங்கை அரசோடு 1855 மில்லியன் டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மேற்குலக நாடுகளின் உற்பத்திப்பொருட்கள் விற்பனையை கருத்தில் கொண்டு இலங்கையில் 89-91க் கிடையில் 14 அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. இன்று 33 அரச நிறுவனங்கள் தனியார் மயமாவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு துணை போவதற்கும் அவர்களின் தாராளப் பொருளாதாரக் கொள்கையை நிலை நிறுத்துவதற்கும் அவர்களுக்கு வசதியாக போக்குவரத்து தொலைத்தொடர்பு சாதனங்கள் நிறுவுவதற்கே கூடிய வெளிநாட்டு உதவிகள் பயன்படுத்தப்பட்டன.

இங்கும்கூட இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கை தமது உற்பத்தியில் 45 வீதமானதை தைக்கப்பட்ட ஆடைகள், பொம்மைகள் போன்ற வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களிலேயே அக்கறையாக இருந்தன.

இந்த வருடத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசாங்கம் கேட்டதிலும் பார்க்க 50 இலட்சம் டொலர் உதவியை கூடுதலாகக் கொடுத்தன.

முக்கியமாக பிறேமதாசாவின் அரசை பாதுகாப்பது மாத்திரமன்று, கொழும்பை ஒரு உலகச் சந்தையாக மாற்றுவதின் பிரதிபலிப்பே இக் கூடுதல் நிதிக்கான காரணங்களாகும். இலங்கையின் குடும்ப ஆதிக்க அரசாங்கங்கள் தோன்றியதனால் அவர்கள் தங்கள் குடும்ப நலனுக்காக இனப்பிரச்சனையை முன்வைத்தார்கள்.

இன்றைய நிலையில் இந்த குடும்ப ஆதிக்க ஆட்சி போய் ஜக்கிய தேசியக்கட்சியும், அதிலிருந்து பிரிந்த லலித் காமினிக் கட்சியும் அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற முயற்சி செய்கிறார்கள்.

இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் யு. என். பி, லலித்-காமினிக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றிற்குத் தேவையாகவுள்ளது. இந்நிலையில்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனத்துவேசத்தை கைவிட்டு சமாதானத்தீர்வு வேண்டுமென்று, யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பதுபோல அண்மைக்காலத்தில் அறிக்கைகள் வெளியிட்டுள்ளது.

இன்றைய இலங்கை அரசாங்கத்திற்கு சுமூகமாக இனப்பிரச்சனையை தீர்க்கவேண்டும் என்பதற்கு அரசியலைவிட, இராணுவத்தின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவேண்டும் என்பதே முக்கியமாகவுள்ளது. இதனால் விடுதலைப்புலிகளோடு சமரசத்துக்கு வரவேண்டிய நிலையும் உள்ளது. இந்த வகையான இராணுவ ஆட்சியை மேற்குலகமும் விரும்பவில்லை அதனால் மேற்குலக நாடுகளும் தங்களது தாராள பொருளாதாரக் கொள்கையால் இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறைப்படக் கூடும் எனத் தெரிய வருகிறது.

இன்று வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு கொழும்பு சந்தையாக உள்ளது. தமிழீழ மக்களையும் கொழும்பை நோக்கி ஓடச் செய்யக்கூடிய அபாயகரமான நிலையும் ஏற்பட்டு வருகிறது. இதனால் எமது அபிவிருத்தி குறைந்து தேசியத்தன்மை குலையும் நிலையில் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்